www.tamilarangam.net



# எரிமலை

மே 2001

## உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம்



முஸ்லிம்கள் மீது பாய்ந்துள்ள பேரினவாதம் மாவனல்லை தாக்குதலுடன் ஓய்ந்துவிடுமா?







குழந்தைப் பருவத்தைப் பாதிப்பது யுத்தம் மட்டுமா?



இனப்பிரச்சினைக்கான தீர்வு தன் சக்திக்கு மீறியதெனக் கருதும் எரிக் சொல்கெய்ம்.

www.erimalai.com

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*'தன் வினை தன்னைச் சுடும்....'*

# அக்கறைப்பூக்கள்










மார்ச் 2001 எரிமலை வழமை போலவே உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வந்திருந்தது. இதழில் இடம்பிடித்துள்ள அம்சங்கள் எல்லாமே என் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டாலும் சில என் மனதைப் பாதித்தன. அவைகளில் மண்ணுக்குப் பட்ட கடன் தீர்ந்த கணங்கள்.. என்ற தலைப்பிலான மாரீசமைந்தனின் கட்டுரை என்னை வெகுவாக ஈர்த்தது. ஜெயசிக்குறு சமரின் வீரியத்தையும், எம் மண்ணின் மைந்தர்களின் வீரசாகசங்களையும், துணிவான செயற்பாடுகளையும் மாரீசமைந்தன் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் விளக்கியிருந்தார்.

பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்--அருமையானதொரு கட்டுரை. நாற்குணமென்றும் நற்பண்பு என்றும் வேலிகள் போட்டு அடைத்தவர்களை நாண வைக்கக்கூடிய விதமாக தமிழீழப் பெண்கள் போர்க்களத்தில் வீரசாகசங்கள் புரிந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் புலத்தில் ஆங்காங்கு தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்த நிலையில் இப்படியான கட்டுரைகள் அப்பெண்களுக்கு தன்னம்பிக்கையைத் தந்து உதவும் என்றே நான் நம்புகின்றேன். இதுபோன்ற கட்டுரைகள் தனிய பெண்கள் தினமான மார்ச் மாதத்தில் மட்டுமல்லாது எப்போதும் பிரசுரமாகவேண்டும் என்பது எனது அவா.

தேங்காய்ச் சொட்டு சிறுகதை மிக மிக அருமையாக இருந்தது. எலிப்பொறியில் சிக்கிய அணிலும் சிறீலங்கா இராணுவத்திடம் சிக்கிய தமிழனும்- ந.மயூரரூபன் அதை எழுதிய விதம்- நிட்சயமாக அவர் அந்த அவஸ்தையை அனுபவித்துத்தான் எழுதியிருப்பாரோ என்று என்னைச் சிந்திக்க வைத்தது. வாசித்து வெகுநேரமாகியும் .. நாட்கள் நகர்ந்தும் ... மனசை விட்டகலாமல்.. இன்னும் என்னை என்னவோ செய்கிறது.

**சந்திரவதனா. செல்வகுமாரன்**
**சுவாபிஸ்கால், ஜேர்மனி.**

எரிமலை சித்திரை மலர் மிக சிறப்பாகவே அமைந்திருந்தது. "தமிழீழ பாடலொன்று முதலடி மூன்று சொற்கள் என்ற விடுகதைக்கு பதிலான "எங்கள் அண்ணன் பிரபாகரன்" என்பதை மிகவும் ஆழமான கருத்துடன் சிந்தித்து எழுதிய மனோன்மணி நடராசாவைப் பாராட்டுகின்றேன். அதே போல் "தடையால் எழுந்த புலிப்படை" என்று வீர உணர்வு கொண்டு எழுதிய வசனநடையைப் பார்த்து பரவசம் அடைந்தேன். இதனை எழுதிய அ.யூலியஸ்சையும் பாராட்டுகின்றேன். மற்றும் 1985ஆம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனையான தமிழீழத் தாயகமே தமிழர்க்கு ஒரே தீர்வு என்பதை மிகவும் தெளிவாக உணர வைப்பதற்கு தெரிந்தெடுத்து பிரசுரித்தமைக்கு தாய்மண் வெளியீட்டாளர்களுக்கு எமது நன்றிகள்.

**ரேவதி சிவானந்தம்**
**சறே, ஐக்கிய இராச்சியம்**

2001 ஜனவரி, பெப்ரவரி இதழ்கள் இரண்டும் ஒருசேரக் கிடைத்தன நன்றிகள். எரிமலை பெப்ரவரியில் வெளியான புகைப் படக் கலைஞர் ஒருவரின் மனநிலைக் கட்டுரையினை என்னால் முழுமையாகப் படிக்க முடியவில்லை. எனது விழிகளை கண்ணீர் மூடி விட்டது. என்னால் படிப்பதற்கு முடியவில்லை என்றபோது அந்த நிகழ்வினைப் படம்பிடித்தபோது புகைப்படக்காரர் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார் என்பதை எண்ணிப்பார்க்கின்றேன்.

**நா.நாகேந்திரன்,**
**சேலம், தமிழ்நாடு**

உலகிலேயே ஆற்றல் மிக்க விடுதலைப் படை ஈழத்தமிழர் புலிப் படை. அப்படைக்கு முரசு முழக்கி உலகின் கண் முன்னே செல்வது எரிமலை. ஈழ விடுதலைப் போரில் காலக் கண்ணாடியாக விளங்கும் எரிமலையின் பங்கு சொல்லில் அடங்குவதன்று.

**மா.இலெ.தங்கப்பா**
**புதுவை, இந்தியா**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

மே 2001

# உள்ளே...

## கட்டுரை

நிராகரிப்பு பக்கம் - 08
உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம் பக்கம் - 12
அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும் பக்கம் - 14
வேதனைகளை வெல்லும் பெருமையும் தந்து பக்கம் - 16
குழந்தைப் பருவத்தைப் பாதிப்பது யுத்தம் மட்டுமா? பக்கம் - 18
எது? எதனால்? எப்படி? பக்கம் - 20
மூடிமறைத்துவிட முடியாது போய்விட்ட அக்கினிச் சுவாலை.... பக்கம் - 24
பிரான்சுவா மித்தறோன் பக்கம் - 32
தமிழீழ வரலாறு பக்கம் - 34

## செவ்வி

டாக்டர் ச.முருகானந்தன் பக்கம் - 28

## அணையாத தீபங்கள்

வீரவேங்கை பகீன் பக்கம் - 46

## சிறுகதை

உறவை விட– செந்தமிழ்க்கீரன் பக்கம் - 22
சமயோசிதம்– வில்லுக்குளத்துப்பறவை பக்கம் - 26
இப்படியும் ஒரு காலம்– இரவி பக்கம் - 36

## கவிதை

போராளிகளின் படைப்புக்கள் பக்கம் - 09
மேற்கு வீதியும் மேளச் சமாவும் -கவிஞர் புதுவை இரத்தினதுரை பக்கம் - 31
சுதந்திர மலராய்-யாழ்வீரன் பக்கம் - 41

## தொகுப்பு

தமிழர் விடுதலை வரலாற்றில் மே பக்கம் -26
நீங்காத நினைவுகள் பக்கம் - 40
பதிவுகள் பக்கம் - 44
மீள்பார்வை ஏப்ரல் 2001 பக்கம் - 47
கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 48

**04** இனப்பிரச்சினைக்கான தீர்வு தன் சக்திக்கு மீறியதெனக் கருதும் ....



**06** முஸ்லிம்கள் மீது பாய்ந்துள்ள....



**10** சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி புலிகளின் முதல்....





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எமது விடுதலைப் போராட்டம் — நிச்சயம் வெற்றியடைந்தே தீரும் —

உலகில் எங்குமே நடைபெறாத கொடுமைகள் தமிழீழ மண்ணில் நாளாந்தம் நடைபெறுகின்றன. எமது எதிரியோ ஈவிரக்கம் இல்லாதவன். மனித உயிருக்கு மதிப்பளிக்காதவன். மனித தர்மங்களைப் பேணாதவன். மிகவும் பயங்கரமான இனவெறி கொண்டவன். இனரீதியாக எம்மை ஒழித்துக்கட்டுவதைவிட அவனுக்கு வேறு இலட்சியம் எதுவும் இல்லை. எம்மை இந்நாட்டுப் பிரஜைகளாகவோ அல்லது சாதாரண மனிதப் பிறவிகளாகவோ சிங்கள அரசு கருதவில்லை. எம்மை ஏதோ அன்னியர்களாக, அடிமைகளாக, வாழத்தகுதியற்ற பிராணிகளாகவே இந்த அரசு கருதுகின்றது. எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை இதைத்தான் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, எண்ணெய்த்தடை இப்படியாக அத்தியாவசியமான எல்லாவற்றுக்கும் தடைகளை விதித்து எமது சமூக பொருளாதார வாழ்வை, எமது நாளாந்த ஜீவாதார வாழ்வைச் சிதைக்க முயல்கின்றது இந்த அரசு. அத்துடன் மட்டுமே நின்றுவிடாது, ஆயுதப் படைகளை ஏவிவிட்டு அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் ஓர் அதர்மமான யுத்தத்தையும் எம்மீது தொடுத்திருக்கின்றது. இந்த யுத்தமானது, அப்பாவித் தமிழர் மீது தொடுக்கப்பட்ட யுத்தம், நிராயுதபாணிகளாக நிற்கும் மக்களைச் சுட்டுக்கொல்வதும், வெட்டிக்கொல்வதும் போன்ற இராணுவ வெறியாட்டங்கள் ஒருபுறமிருக்க விமானக் குண்டுவீச்சு, பீரங்கிக் குண்டு வீச்சு மூலம் தமிழீழத்தை ரணகளமாக்கி வருகின்றது சிங்கள அரச பயங்கரவாத ஓநாய்.

நாம் போராடி, இரத்தம் சிந்தி, எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும். அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி. அதாவது, சுதந்திர தமிழீழத் தனியரசு தான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இந்தத் தனியரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்.

எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்தப் படுத்தியுள்ளது.

நீதியையும், தர்மத்தையும் சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.

**— தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.**

1987ஆம் ஆண்டு மேதினத்தை முன்னிட்டு விடுத்த செய்தியிலிருந்து...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

இருபதாம் ஆண்டு

மே

2001

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

★

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com

## தேசியத் தலைமையும் தடைநீக்கமும்!

தம் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கி பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு புலிகள் சிங்கள அரசைக் கோரியுள்ளனர். தடைவிதிக்கப்பட்ட சட்டவிரோத அமைப்பாக இருந்துகொண்டு சிங்கள அரசுடன் இணக்கப்பேச்சுக்களை நடாத்த முடியாது என்கின்ற நியாயபூர்வமான நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்திவருகின்றனர். சிங்கள இனவாத அமைப்பு இந்த நிலைப்பாட்டின் சட்டரீதியான, அரசியல்ரீதியான, இராஜதந்திரரீதி யான நியாயப்பாட்டைக் கண்டு அச்சங்கண்டுள்ளமையை தமது நிராகரிப் புக்கள் மூலம் வெளிக்காட்டியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் மீதான தடையை ஏன் சிங்களம் நீக்க மறுக்கின்றது?

சந்திரிகா ஆட்சியின் அடித்தளமான வெளிவிவகாரக் கொள்கை புலிகளை பயங்கரவாத அமைப்பாகவும், தமிழர்களின் விடுதலைப் போரை பயங்கர வாதமாகவும் முத்திரை குத்தி தனிமைப்படுத்தும் நோக்கிலேயே வடி வமைக்கப்பட்டது. புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதன் மூலம் உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு முகாங்களின் தங்குதடையற்ற உதவிகளை சிறீலங்கா பெற முயன்றது. உலகப் பயங்கரவாதம் என்கின்ற பொருத்தமற்ற பதத்தை புலிகளின் மீது திணித்து உலக நாடுகளுக்கு பீதி யூட்ட சந்திரிகா - கதிர்காமர் கும்பல் விடாப்பிடியாக உழைத்தது. நீண்டகால நோக்கில், தமிழர்களின் மீது சிங்களப் பேரினவாத பயங்கரவாத அரசு நடாத்தும் இனஅழிப்புப் போர் வெற்றிபெறுவதற்கு புலிகள் மீதான பயங்கரவாத முத்திரை உதவும் என்பதில் சிங்களம் விடாப்பிடியான நம்பிக்கை கொண்டிருந்தது. துரதிஸ்டவசமாக இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் சிங்களத்தின் இராஜதந்திர காய்நகர்த்தல்களுக்கு ஏற்ப புலிகள் மீது பயங்கரவாத அடையாளங்களை இட்டன. சிங்கள அமைப்பே இதனை பெரும் வெற்றி என பறைசாற்றி புளகாங்கிதம் கொண்டுள்ள வேளையில், சிறீலங்கா அரசு புலிகள் மீதான தடையை நீக்குமாயின் அதனை தமது திட்டங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவு என சிறீலங்கா கருது கின்றது. புலிகள் மீதான தடையை அமெரிக்கா மீளப் பரிசீலித்து நீக்கலாம் என அமெரிக்க தூதுவர் தெரிவித்த ஊகங்களும், பிரித்தானியாவும் புலி களுடனான ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டியேற்படும் என்கின்ற புறச்சூழ் நிலைகளும் சந்திரிகாவை மேலும் அச்சப்படுத்தியுள்ளது.

ஆனால், தமிழீழத் தேசியத் தலைவர் மிகத் தெளிவாக தடை நீக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். விலைமதிப்பற்ற உயிரிழப்புக் களை தாங்கி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து இன்றைய நிலைக்கு எடுத்துவந்துள்ள புலிகள், சட்டவிரோத அமைப்பாக பேச்சுக்களில் பங்குபற்றுவது தமிழீழ மக்களின் தன்மானத்திற்கும், பாது காப்பிற்கும் ஏற்புடையதல்ல. அவ்வாறன சட்டவிரோதத் தன்மை அரசியல் ரீதியாக புலிகளின் பேச்சுவார்த்தைகளுக்கான பலத்தைப் பாதிக்கும். சர்வதேச ஆதரவும், அனுதாபமும் இணக்க முயற்சிகளுக்கு முக்கியமானதொரு விடயமாக உள்ள வேளையில் புலிகள் மீதான தடை புலிகளின் சர்வதேச உறவுகளில் ஒரு நெருடலை ஏற்படுத்தும். மேலும் இராணுவத்தீர்வில் இன்னமும் வெறித்தனமான நம்பிக்கைகள் கொண்டுள்ள சிங்கள அமைப் பினை கண்காணிப்பதற்கு புலிகள் மீதான சட்டவிரோதத் தன்மை நீக்கப்படு வது அவசியமானதாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக புலிகள் தமிழீழ மக்களின் ஏகபிரதி நிதிகள். எம்மக்களின் வெளிப்பாடு. எம்மக்களின் தேசிய அபிலாசைகளைச் சொல்பவர்கள். அவர்கள் மீது தடையும், சட்டவிரோத அடையாளங்களும் பூசப்படுவது முழுத் தமிழ் மக்களுக்கும் ஏற்புடையதல்ல.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வேயின் சிறப்பு தூதுவர் எரிக் சொல்கெய்ம்.

சிறீலங்கா அரசாங்கமும் நோர்வேயின் அனுசரணைகளைப் பெறுவதென்ற தீர்மானமும் இதனை அடியொற்றியதாகவே மேற்கொண்டது என்றுகூடக் கூறலாம்.

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் இவ் விவகாரத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போது இதுவொரு தனித்துவமான பிரச்சினை என்பதை ஒப்புக்கொண்டே இருந்தார். ஆயினும் இவ் விவகாரத்தை தம்மாலும், தமது நாட்டினாலும் வெற்றிகரமாகக் கையாளமுடியும் எனவும் அவர் நம்பிக்கை கொண்டும் இருந்தார். இதனை அவர் வெளிப்படுத்தவும் தவறவில்லை.

ஆனால் சுமார் இரண்டு வருடகால முயற்சியின் பின்னர் ஒரு தனித்துவமான பிரச்சினை என்பது மட்டுமல்ல கடினமான பிரச்சினை என்பதையும் இலகுவில் தீர்த்துவைக்கக்கூடிய பிரச்சினையாக இல்லை என்பதையும் புரிந்துகொண்டுள்ளார். இதன் காரணமாகவே இதுவரையில் இனப்பிரச்சினையில் திரைக்குப் பின்னால் இருந்த அமெரிக்காவை முன்னால் கொண்டுவர அவர் முடிவு செய்துள்ளார் போன்றுள்ளது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கெய்ம் அமெரிக்காவை நேரடியாக அணுகியுள்ளமையானது சமாதான முயற்சிகளை தம்மால் ஒரு கட்டத்திற்கு அப்பால் நகர்த்திச்செல்ல முடியவில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்வதாகவே அர்த்தம் கொள்ளவைக்கின்றது.

# இனப்பிரச்சினைக்கா மீறியதெனக் கருதும்

**ஜெயராஜ்**

**'இலங்கை இனப்பிரச்சினை மிகவும் வித்தியாசமானது. அவ்வாறு நினைப்பது போன்றும் கதைப்பது போன்றும் அது இலகுவான விடயமாக இருக்கமாட்டாது. இந்த விடயம் தொடர்பாக அமெரிக்க அரசின் உயர்பீட முக்கியஸ்தர் ஒருவரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்'**

**-எரிக் சொல்கெய்ம்**

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சுமார் இரண்டு வருடங்கள் வரையில் நேரடியாக ஈடுபாடு காட்டியபின்னர் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சொல்கெய்ம் இவ் அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார். இது ஒருவகையில் இவ் விவகாரம் தனது கைகளுக்கும், சக்திக்கும் மீறியதான விவகாரம் என்பதை அவர் வெளிப்படுத்துவதுபோன்றும் உள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்க அரசின் ஆசீர்வாதம் இருந்ததென்பது மறுக்கப்படமுடியாத உண்மை. அதாவது இனப் பிரச்சினை அன்றி சர்ச்சைக்குரிய சர்வதேச பிரச்சினை ஒன்றில் தன்னை நேரடியாக வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத நிலையிலோ அன்றி முடியாத நிலையிலோ நோர்வே போன்ற தனது நெருங்கிய அரசுகளின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா அங்கீகாரமும், ஆசீர்வாதமும் வழங்குவதுண்டு.

இந்தவகையில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வேயின் பங்கு அமெரிக்காவின் அனுசரணையுடனானதாகவே இருந்தது. அதேசமயம் அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கையைத் தெளிவாக வகுத்துக் கொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான



இவ்வாறானதொரு முடிவுக்கு எரிக் சொல்கெய்ம் வருவதற்கு, சிறீலங்கா அரசின் விட்டுக்கொடுக்காத போக்கிற்கும் விடுதலைப் புலிகளின் நியாயப் பாடான கோரிக்கைகளுக்கும் இடையில் அவரால் ஒரு சமநிலை காண முடியாது போயுள்ளமை காரணமாக இருக்கலாம். அதாவது அழுத்தம் ஏதும் பிரயோகிக்கப்பட்டால் அன்றி பேச்சுவார்த்தைக்கான சாத்தியப்பாடுகள் உருவாக வாய்ப்பில்லையென அவர் முடிவுக்கு வந்திருத்தல் கூடும். அத்தோடு, தற்பொழுது சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தடங்கல்கள் மீண்டும் பெரும் மோதல்களுக்கு வழிவகுக்கலாம் எனவும் அது சமாதான முயற்சிகளை முற்றாகவே தோல்விக்குள்ளாக்கவும் அரசியல் சூழ்நிலையை முற்றிலுமாகவே மாற்றிவிடக்கூடியதாகவும் இருக்கலாம் என அவர் முடிவுக்கு வந்தும் இருக்கலாம்.

இதேவேளை, நோர்வேயின் இவ்வாறான நடவடிக்கை எதிர்பார்க்கப்படாத தொன்றும் அல்ல. பாலஸ்தீன விவகாரம் தொடர்பாகவும் நோர்வே இவ்வாறே நடந்துகொண்டுள்ளது. ஆயினும், பாலஸ்தீன விவகாரத்தில் இதனைவிட குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்ட பின்னரே அதாவது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்டு நோர்வே ஒதுங்கிக்கொண்டது.

ஆனால், நோர்வேயின் அந் நடவடிக்கையானது இன்று கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத், 'நோர்வேயை நான் வெகுவாக நம்பினேன். இறுதியில் மத்திய கிழக்கு நெருக்கடியை வெள்ளைமாளிகையின் கையில் தாரைவார்த்துவிட்டு ஒதுங்குவார்கள் என நான் நினைக்கவில்லை. நோர்வேயை நம்பி சமாதான முயற்சிகளில் ஈடுபடும் எந்தவொரு விடுதலை இயக்கத்திற்கும் நானும் பாலஸ்தீன மக்களும் எப்பொழுதுமே துர்ப்பாக்கியமானதொரு பாடமாகவே திகழ்வோம்' எனத் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தின் இக்கூற்றுக்கள் அவர் எத்தனை தூரம் ஏமாற்றப்பட்டுள்ளார். எத்தனை தூரம் வெறுப்புற்றுள்ளார் என்பதை உணர்த்துவதாகவேயுள்ளது. ஆனால், யாசீர் அரபாத்திற்கு அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதற்கு அவர் இராணுவ ரீதியில் பலம் பெற்றில்லாமல் போனமையும் முக்கிய காரணியாகும்.

அதாவது, விடுதலைப் புலிகள் போன்று உறுதியான தளம் ஒன்றில் இருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லை. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கான தலைமைத்துவம் யாசீர் அரபாத்திடம் இருந்து கைமாறிப்போய்விடலாம் என்ற ஒரு பலவீனமான சூழ்நிலையிலேயே அவர் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார். ஒரு பலவீனமான உடன்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார்.

ஆனால், இலங்கை விவகாரம் அவ்வாறானதல்ல. விடுதலைப் புலிகள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதான நடவடிக்கைகளுக்கான விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளும் நிலையில் உள்ளனரே ஒழிய சிறீலங்கா அரசின் அழுத்தத்திற்கோ அன்றி நிர்ப்பந்தங்களுக்கோ பணிந்து போகவேண்டிய நிலையில் இல்லை. இதேவேளை அமெரிக்கா உட்பட எவரது நெருக்குதல்கள் கூட ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்குமேல் புலிகள் மீது செலுத்தமுடியாது.

அத்தோடு சிறீலங்கா அரசோ சமாதான முயற்சிகளுக்கு உளப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கவில்லை. மாறாக இராணுவ ரீதியிலான பின்னடைவுகளில் இருந்து மீண்டெழும்வரையில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதுபோன்று காட்டவிழைகிறது. அத்தோடு பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை எதையும் உருவாக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பதும் இல்லை. இதனால் சமாதான முயற்சிகளில் ஒருபடிதானும் முன்னேற்றம் காணமுடியாத நிலையில், நெருக்கடியை அமெரிக்காவிடம் ஒப்புவிக்க நோர்வே எடுத்த முடிவானது பிரச்சினையின் கடினத்தைக் காட்டுவதாகவே கொள்ளத்தக்கதாகும். ஆனால், இவ்விடயத்தில் அமெரிக்கா வினால் எத்தகைய பங்காற்றமுடியும் என்பதும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க, நிர்ப்பந் தங்களைக் கொண்டுவர முடியுமா என்பதும் கேள்விக்குரியதொன்றே ஆகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைகள் பெருமளவில்



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

# தீர்வு தன் சக்திக்கு ...ரிக் சொல்கெய்ம்.

காணப்படுகின்றன. இவ் விவகாரங்களில் பெரும்பான்மையானவை அரசியல் தீர்வு காணமுடியாத முறையில் சிக்கல் நிறைந்தவையாகவே உள்ளன. இவ்வாறான பிரச்சினைகளில் சில என்றும் எரியும் நெருப்பாக உள்ளன. சில நீறுபூத்த நெருப்பாகக் கனன்றுகொண்டும் உள்ளன.

இதேசமயம் இப்பிரச்சினைகளைச் சர்வதேச ரீதியில் தீர்க்கும் முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டதும் உண்டு. ஆனால், அவைகூட முற்றுப் பெற்றவையாக, நிரந்தர அமைதிக்கு வழிசமைப்பவையாக அமைந் ததாகத் தெரியவில்லை. இந்தவகையில் கடந்த அரைநூற்றாண்டுக்கு மேலாக இரத்தம் சிந்தும் பிரச்சினையாகவுள்ள பாலஸ்தீன நெருக் கடியைச் சுட்டிக்காட்டமுடியும்.

இனப்பிரச்சினையை அமெரிக்காவிடம் ஒப்புவிக்கும் நோர்வேயின் இச்செயல் முறையானது, பாலஸ்தீன விவகாரத்தை ஒத்ததானதொரு நிலையை இவ்விவகாரத்திலும் தோற்றுவித்துவிடலாம் என்ற ஐயப் பாட்டை எழுப்புவதாகவே உள்ளது. ஏனெனில் பாலஸ்தீன விவகாரத்தில் அமெரிக்கா எவ்வாறு இஸ்ரேல் சார்பான நியாயப் பாட்டை மேற்கொண்டுள்ளதோ அதையொத்த நியாயப்பாட்டையே இவ் விவகாரத்திலும் மேற்கொள்ளலாம் எனக் கூறுவதற்குக் காரணங் கள் உண்டு.

இஸ்ரேல் உருவான காலத்தில் இருந்தே அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக அது இருந்துவந்துள்ளது. சிறீலங்கா ஆரம்பத்தில் அத்த னை தூரம் நெருக்கமானதாக இல்லாதுவிடினும், அது மேற்குச் சார்ந்த போக்கையே நீண்டகாலமாகக் கொண்டுள்ளமையும், அதிலும் குறிப்பாக தற்போதைய சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் அமெரிக்க சார்புக் கொள்கையை தெரிவாகக்கொண்டுள்ளமையும் அமெரிக்கா சிறீலங்காவுடன் நெருக்கமான உறவைக் கொள்ளக் காரணமாகவுள்ளது.

இந் நெருக்கமானது இராணுவ உதவிகள் மூலமும் வெளிப் படுத்தப்படுபவையாக உள்ளன. சிறீலங்கா இராணுவத்திற்கு இன்று சிறப்புப் பயிற்சிகளை வழங்கும் அமெரிக்கா ஆட்லறிகள், மோட்டார்கள் ஆகிய கனரக சுடுகலன்கள் மற்றும் இராணுவத் தேவைகளுக்கான வாகனங்கள் என்பனவற்றையும் வழங்கும் நாடாகவுள்ளது.

இவை ஒருபுறமிருக்க இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்ற நிலைப்பாடு அமெரிக்கா போன்ற நாடுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமக்கென ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவையாக உள்ளன. இது ஒரு தரப்பின் மீது தமது தீர்மானத்தைத் திணிக்கும் வகையி லானது ஆகும்.

இந்தவகையில் பார்க்கையில் அமெரிக்காவின் தலையீடு அன்றி குறுக் கீடானது ஏற்படின் அது சமாதான முயற்சிகளில் இரு தரப்பினரின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது பலவீனமானதாகவும், அமெரிக்கத் தரப்பு அபிலாசைகளுக்கும் இடம் அளித்தல் என்பது முதன்மையானதாகவும் மாறிவிடக்கூடும். அமெரிக்கா போன்ற வல்லர சுகள் தமது நலன்களைப் பிரதிபலிப்பது ஒன்றும் புதியதல்லத்தான். ஆனால் அதுவே பின்னர் முக்கிய விடயமாகி இனப்பிரச்சினை விவ காரம் பின்தள்ளப்பட்டு அமெரிக்க நலன் முதன்மை பெற்றதாகிவிடும். இதனால் பிரச்சினை திசைதிருப்பப்பட்டு நெருக்கடிகளுக்குத் தீர்வு காணமுடியாது போகலாம். ஆனால் ஒன்று பாலஸ்தீனப் பிரச்சினையில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவான ஒருதலைப்பட்சமான நிலைப் பாட்டை மேற்கொண்டதுபோல் இருக்குமேயானால் இவ்விடயத்தில் நோர்வே போன்று அமெரிக்காவும் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டியே இருக்கும். ஏனெனில் பாலஸ்தீனர்கள் போன்று புலிகளோ அன்றி தமிழ்மக்களோ ஏமாறத்தயாராக இல்லை. அவர்கள் தமது மண்ணில் நின்றுகொண்டு மன உறுதியோடு போராடுகின்ற வர்கள் என்பதை சமாதான முயற்சியில் ஈடுபடும் அனைவருமே புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆகையினால் நோர்வே அரசின் சிறப்புத் தூதுவர் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான தனது பாத்திரத்தை வேறு யாரிடமாவது மாற்ற முனைவது அன்றி தனது பாத்திரத்திற்குத் துணையாக யாரையும் சேர்த்துக்கொள்ள முற்படுவதானது சமாதான முயற்சிகளுக்கு எந்தளவு தூரம் வலுச்சேர்ப்பதாக இருக்கும் என்பது கேள்விக்குரியதே. அதிலும் அமெரிக்கா போன்ற பூகோள நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் அரசினை பக்கத்துணையாக்கிக் கொள்வது நீதி யான தீர்வொன்றை உருவாக்கவோ, சமாதானம் ஒன்றைத் தோற்று விக்கவோ உதவும் என எதிர்பார்க்கமுடியாது.

•••





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவனல்லையில் சிங்களவர்களினால் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல் ஒன்றின் வெளித்தோற்றம்.

# முஸ்லிம்கள் மீது பாய்ந்துள்ள பேரினவாதம் மாவனல்லை தாக்குதலுடன் ஓய்ந்துவிடுமா

– வேலவன்



சேதமடைந்த பள்ளிவாசலின் உள்பகுதி எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

சிங்களப் பேரினவாதம், தமிழினம் மீது தொடுத்துள்ள பயங்கரவாத யுத்தம் ஒரு திருப்பு முனையான கட்டத்தில் இருக்கும் இவ்வேளையில், முஸ்லிம்கள் மீதான வன்முறையை மாவனல்லவில் பேரினவாதம் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. இந்தக் கலவரங்கள் முஸ்லிம் ஒருவர், மாவனல்ல நகரப் பகுதியில்வைத்து கப்பம் வாங்கும் சிங்களவர் ஒருவரால் தாக்கப்பட்டதினால் ஆரம்பிக்கப்பட்டது போன்ற தோற்றம் காட்டுகின்ற போதும், இச்சம்பவத்தை முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையாக்குவதில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பொலிஸ் அதிகாரிகள் என்போர் பங்கு வகித்துள்ளமை தற்போது வெளிப்படையாகி வருகின்றது. மாவனல்லவில் நிகழ்ந்த அந்தச் சம்பவம் தொடர்பான புகாரைப் பெற பொலிசார் மறுத்திருக்கின்றனர்.

ஆனால் இதற்கெதிராகக் கடந்த இரண்டாம் திகதி முஸ்லிம்கள் மாவனல்லவில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் இருவர் பலியானதுடன் 30பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மே 4ஆம் திகதி மருதானையிலும், கொழும்பின் வேறு சில பகுதிகளிலும் நடந்த முஸ்லிம்களின் கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் இவ்விவகாரத்தைச் சூடுபிடிக்கவைத்தது. தொடர்ச்சியாக குருநாகல், புத்தளம் மற்றும் கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை என முஸ்லிம்கள் போராட்டங்களை நடத்தியுள்ளனர். அத்துடன் கொழும்பில் நடைபெற்ற வன்முறைகளையடுத்து அங்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களால் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைச் சாட்டாக வைத்து, இனவாத அமைப்பான சிஹல உறுமயவும், பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்த திட்டமிட்டுச் செயற்பட்டன. தொடர்ந்த நாட்களில், முஸ்லிம்களின் பொருளாதார இலக்குகளைத் தாக்கும் நடவடிக்கைகளில் சிங்களவர்கள் ஈடுபட்டமை வெளிப்பட்டிருக்கின்றது.

சிறீலங்காவை ஆளும் ஆட்சியாளர்களினதும், இனவாத சக்திகளினதும் இலக்கு தனியாக தமிழினம் மட்டுமல்ல, பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களும் பேரினவாதிகளினது இலக்காக உள்ளமை ஒன்றும் இரகசியமானதல்ல.

பௌத்த மக்களை ஆசைகாட்டி மதம்மாற்ற முயல்வதாகவும், பௌத்த மதத்தையும் சிங்கள இனத்தையும் அழித்துவிட ஏனைய மதத்தவர்கள் முயற்சி செய்வதாகவும், இதற்கு எதிராக அணிதிரள வேண்டும் என்பதும் சிங்களப் பேரினவாதிகளின் நீண்டகாலக் கூக்குரலாகும்.

சிறுபான்மையினரை எவ்விதத்திலேயும் அழித்துவிடும் நடவடிக்கைகளிலே ஈடுபட சிஹல உறுமய போன்ற அமைப்புக்கள் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியுள்ளன. இவ்வாறு அவர்கள் நடந்துகொள்ளும்போது அதனைக் கண்டும் காணாது பார்த்துக்கொண்டிருக்க பேரினவாத அரசாங்கங்கள் தயாராகவேயுள்ளன. அத்துடன் இச்சம்பவங்களில் பங்கேற்கும் பொலிசாரையும் இராணுவத்தினரையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடவும் தயங்கமாட்டார்கள்.

தன்னை இனவாதி அல்ல என்பது போலவும், தான் நியாயமானவர் என்பது போலவும் காட்டிக்கொள்ள முயலும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்துகொள்வார் என்பதற்குப் பல

கார் விற்பனை நிலையம் ஒன்று எரிக்கப்பட்ட நிலையில்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேதமாக்கப்பட்ட பெற்றோல் நிலையம், சுப்பர் மார்க்கட். மோட்டார் சைக்கிள் ஒன்று எரிந்த நிலையில் காணப்படுகின்றது.



சிங்களவர்களினால் எரிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள்.

உதாரணங்கள் உள்ளன.

கடந்த ஆறு வருட ஆட்சிக்காலத்தில், ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரின் பெரும்பான்மையுடன் ஆட்சியிலிருந்த சந்திரிகா அரசாங்கத்தை கவிழ்த்துவிடாது காப்பாற்றியவர்களில் தொண்டமானும் ஒருவர். அவர் 1999ஆம் ஆண்டில் நுவரெலியாவில் நடத்த முயன்ற மே தினத்தை சிஹல உறுமய குழப்பும் முயற்சிகளில் ஈடுபட்டது. பின்னர் இ.தொ.கா.வின் தலைமையகமான சௌமிய பவனைத் தாக்கியது. இ.தொ.கா.விற்கு எதிராக அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தக்கூட சிஹல உறுமயவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இச் சம்பவங்களில் ஈடுபட்டோர்மீது நடவடிக்கை எடுக்கவோ, அல்லது இது குறித்து நடவடிக்கை எடுக்காத பொலிசாருக்கு தண்டனை வழங்கவோ சந்திரிகா அரசாங்கம் இன்றுவரை எதுவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறே இப்பொழுது பொதுஜன ஐக்கிய முன்னணியைத் தாங்கிப் பிடித்திருக்கும், முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறுதான் கேட்டுக் கொண்டபோதும், சந்திரிகா அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை.

இதேவேளை மாவனல்லவில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தாமதித்ததாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கம் மீது குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

அத்துடன், வன்செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் அச்சம்பவத்தை சிறிய விடயமாக்கி ஒருசில பொலிசாருக்கு இடமாற்றம் வழங்குவதன் மூலம் முடித்துவிட முயல்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாவனல்ல சம்பவத்தைப் பொறுத்தவரை ஆளும்கட்சியால் உருவாக்கப்பட்ட குண்டர்களே வன்முறைச் சம்பவத்திற்கு மூலகாரணமாக இருந்திருக்கின்றனர். அமைச்சர் மகிபால ஹேரத்தின சொந்த குண்டர் படையைச் சேர்ந்த ஒருவரே இச்சம்பவத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றார். எனவே சம்பவத்திற்குக் காரணமான இக்குண்டர்படையின் வன்முறைகளின் துணையுடன் ஆட்சிபீடமேறிய சந்திரிகா அரசாங்கம் இவர்களுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதேவேளை அமைச்சரின் ஆதரவு பெற்ற குண்டர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக பொலிசார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சந்திரிகா அரசாங்கம் பொலிசாருக்கு எதிராக எதுவித குற்றச் சாட்டையும் சுமத்தவும் முடியாது.

இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக-குறிப்பாக முஸ்லிம்களின் பொருளாதார இலக்குகளைக் குறிவைத்து சிங்களவர் தாக்குதல்களை மேற்கொள்வதாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்துகின்றபோதிலும் அதனால் பயன் எதுவும் கிட்டப்போவதில்லை என்றே கூறலாம்.

இதனை மாவனல்லவில் நடைபெற்றவற்றை சிறுசம்பவம் போலக் காட்டி ஒருசில பொலிசாரை மட்டும் இடமாற்றி விடயத்தை முடித்துவிடவே சந்திரிகா அரசாங்கம் இப்பொழுது செய்கின்ற முயற்சிகள் வெளிப்படுத்துகின்றன. எனினும் இன்று முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு இன்றி அரசாங்கம் உயிர்வாழ முடியாது என்பதன் அடிப்படையிலும் இன்றைய வன்முறைகளுடன் தொடர்புடைய அரசாங்க ஆதரவுச் சக்திகள் தவிர்ந்த ஏனையோரை 'தட்டி' வைக்கும் நோக்கத்துடனும் சில நடவடிக்கைகளை சந்திரிகா அரசாங்கம் மேற்கொள்ளலாம். இவ்வாறான ஒரு நடவடிக்கையாகவே சிஹல உறுமயவின் ஊர்வலத்தைத் தடைசெய்தமையைக் கொள்ளலாம். சில சமயங்களில் விசாரணைக் குழு, பாராளுமன்ற விவாதம் என்பவற்றுக்கும் முன்வரலாம். ஆனால், தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என எதிர்பார்க்க முடியாது.



முற்றாக எரிக்கப்பட்ட கடைகள்.

இன்றைய சூழ்நிலை மாற்றம் ஏற்படுமாயின் முஸ்லிம்கள் மட்டுமல்ல கிறிஸ்தவர்களும்கூட பேரினவாதிகளின் இலக்காக மாறியுள்ள நிலையில் இனவாத அரசாங்கங்கள் தாமே முன்னின்று தாக்குதல்களை ஊக்குவிக்கலாம்.

இவ்வாறான நிலையில் முஸ்லிம்கள் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றனர்? இலங்கையில் வாழும் ஒரு தேசிய இனமாகிய தமிழினத்திற்கு எதிராக பேரினவாதம் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளை ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்ததால் ஏற்பட்டுள்ள விலையை இவர்கள் எவ்வாறு சமாளிக்கப் போகின்றனர்?

1999 ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தில் நொச்சிகாம நகரில் அமைந்துள்ள முஸ்லிம் மக்களின் பத்திற்கு மேற்பட்ட கடைகள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டன. இவ்வாறு பல தடவைகள் இஸ்லாமியத் தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர் தொடர்ந்தும் ஆளும்கட்சிகளுக்கு முண்டு கொடுத்துக் கொண்டும் ஒரு சில அமைச்சர் பதவிகளை பேரம் பேசிப் பெற்றுக் கொண்டும் அதன் 'சக்தியால்' தம்மைப்பாதுகாத்துக் கொள்ள முடியும் என இவர்கள் நம்புகின்றார்களா? அல்லது, எதிராகப் போர்க்கொடி தூக்கப்போகின்றார்களா?



உடைத்து கொள்ளையடிக்கப்பட்ட கடைகளின் முன்னால் உரிமையாளர்கள் விரக்தி அடைந்த நிலையில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிராகரிப்பு

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடைநீக்கப்பட மாட்டாது. அதுவொரு நியாயபூர்வமான கோரிக்கை அல்ல என்ற சிறீலங்கா அரசின் நிராகரிப்பானது அது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் உண்மையான / உளப்பூர்வமான ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் கோரிக்கை நியாயபூர்வமானது மட்டுமல்ல சமாதான முயற்சிக்கு அவசியமானதும்கூட.

விடுதலைப் புலிகள் இயக்கம் தம்மீதான தடையை நீக்குமாறு கோருவது நியாயபூர்வமற்றதொன்று எனக் கூறுவது விவேகமற்ற பேச்சாகும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண்பதற்கு இருதரப்பும் சமநிலையில் இருந்து பேசுவதென்பது அவசியமானதாகும். ஆனால் அரசாங்கமோ அது நியாயமற்றது என்கிறது, புலிகள் மீதான அழுத்தங்கள் இருப்பது அவசியம் எனக் கருதுகின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதில் அது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இராணுவத் தீர்வு ஒன்றில் மட்டுமே குறியாகவுள்ளது. இதனைத் தவிர பேச்சுவார்த்தை ஒன்று நடப்பினும்கூட விடுதலைப் புலிகளுடன் சமநிலையில் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த அரசாங்கம் விருப்பம் கொண்டதாக இல்லை. ஏனெனில், விடுதலைப் புலிகளைச் சமநிலையில் வைத்துப்பேசும்போது, அதாவது அழுத்தமின்றிப் பேசும் நிலையேற்பட்டால். அது விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக அமையலாம் என அரசாங்கம் அஞ்சுகின்றது. ஏனெனில் விடுதலைப் புலிகள் பக்கத்திலேயே நியாயங்கள் உண்டு.

அதாவது விடுதலைப் புலிகள் மீதான தடையை அகற்றுமாறு கோருவதும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அது அவசியமானது என்பதும் நிராகரிக்கப்படமுடியாதவையாகும். ஏனெனில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற நாமத்துடன், அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்துதல் என்பது அர்த்தமற்றதொன்று.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் நடவடிக்கை யாவற்றையும் தடைசெய்யும் தனது நீண்ட முயற்சிக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற முத்திரையையே அரசு சர்வதேசரீதியில் தூக்கிப்பிடித்துக்கொண்டிருந்தது. இதுவே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படக் காரணமாகியது.

ஆனால் தற்பொழுது விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்குத் தகுதியுடைய அமைப்பு எனின் அது பயங்கரவாத அமைப்பு என்ற நிலை நீக்கப்படுதல் அவசியமாகின்றது. இதனையே விடுதலைப் புலிகள் கோருகின்றனர்.

இது ஒருபுறம்இருக்க, புலிகள் மீதான தடையை நீக்குதல் என்பது ஒரு கடினமான காரியமோ அன்றி கவலைப்படவேண்டிய விவகாரமோ அல்ல. அரசாங்கத்தரப்பு தேவை எனக் கருதின் இலகுவான வழிமுறை அடிப்படையில் இத்தடையை நீக்கலாம். அத்தோடு, தேவையேற்படின் மீண்டும் தடைகூடக் கொண்டுவரமுடியும்.

அத்தோடு, இத்தடையால் சிறீலங்கா அரசு இராணுவரீதியிலான அனுகூலம் எதையும் பெற்றுக்கொண்டதாக இல்லை. அதாவது இத் தடையால் புலிகளின் இராணுவரீதியிலான செயற்பாடுகள் பாதிப் படைந்ததாக இல்லை. அதாவது அரசின் தடைக்கான நோக்கம் நிறைவேறியதாக இல்லை. இந்நிலையில் இத்தடை அரசியல் முயற்சிகளுக்குத் தடையாக இருப்பின் அரசு ஏன் அதனை கைவிடுதல் கூடாது.

மேலும் இருதரப்பிற்கும் இடையில் இராணுவ-அரசியல் முரண்பாடு தீவிரமானதாக இருந்த வேளையிலே இத்தடை அறிவிப்புச் செய்யப் பட்டது. ஆனால் தற்பொழுது சமாதான முயற்சி மேற்கொள்ளும்போது, இருதரப்பிற்கும் இடையில் உள்ள முரண்பாடு களையப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, ஏன் இத்தடையை நீக்கி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்கூடாது.

அதாவது தடை நீக்குதல் கடினமானதொரு காரியமாக இல்லாத இடத்து தடை நீக்கப்படவில்லை எனின் அரசாங்கம் சமாதான முயற்சி களை மனதளவில்க்கூட விரும்பவில்லையென்றே அர்த்தமாகும். அதாவது, அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண விருப்பம் கொண்டிருக்கவில்லை எனலாம்.

அவ்வாறு இல்லாதுவிடில் அரசாங்கம் தடையை நீக்குவதற்கு சாக்குப் போக்குக் கூறவேண்டியதேவை இல்லை. விடுதலைப் புலிகளுடன் முழு அளவில் யுத்தம் புரியப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்த காலத்தில் வந்த தடை, சமாதானத்தின் மூலம் இனப்பிரச்சி னைக்கு தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது ஏன்? சமாதானத்தின் மீது அரசு நம்பிக்கைகொள்ளவில்லையா? அன்றி யுத்தத்தைத் தொடர்வதையே குறியாகக்கொண்டுள்ளதா?



ஊரோடு உச்சத்திலிருந்தது
உன் வாழ்வு- அதனை வேரோடு
சாய்த்தது சிங்களம்
பார் புகழ ஞாலமதிர உன் பிள்ளை
சீரோடு படை நடத்தி
ஊர் மீட்பான் காண்-
அது வரை தரு நிழலில்,
சுனை நீர்க்கரையில்
இல்லிடம் அமைத்து
காத்திரு தாயே!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராளிகளின் படைப்புக்கள்

## வீரக் குழந்தைகள்

என் பேரன்
சுண்டங்காய்ப் பயல்
சுட்டித்தனம்
வயது ஏழுதான்.

வார்த்தை ஆடலில்
வயதை மீறிடும்
வந்து மடியில் குந்தியிருந்து
வயிற்றைத்தடவினான்
வால்பேத்தை
முல்லை விரித்தான்.

எழுந்து எங்கோ ஓடினான்
திரும்பி வந்தான்
அவன் கையில் அவனது துப்பாக்கி
சுடத்தெரியுமா?
மீண்டும் ஏளனப் பார்வை சுட்டான்;
என் மெய் சிலிர்த்தது.

இவர்கள் வீரக் குழந்தைகள்
நாங்கள்?
வெட்கத்தால் முகம் சிவக்க
எழுந்தேன்
என் கால்கள் நடந்தன.

புதியதும் பழையதும்
புரட்சிக்குத் தயார்
விடுதலையின் தூரம் குறுகிவிட்டது
என் மனம் உறுதி பெற்றது
கால்கள் பயிற்சிக் களம் நோக்கி நகர்ந்தன.

- முருகு பாரிமகன்

## அவனின் நினைவுடன்

நேற்றைய பொழுதுகளை
ஒரு தரம் நீட்டுகிறேன்
கூட நின்று கும்மாளமடித்து
ஒன்றாகக் கூடி
அன்றாடி மகிழ்ந்து
பகைவீடு எரிக்கையிலே
விதையாகிப் போன தோழனின் நினைவுகள்
என் முன்னே விரிகின்றன.
மனதில்
பெரும் சோகம்
இருப்பினும் நான் சோரவில்லை
என் கையினைப் பார்க்கின்றேன்
ஓ......
இது வீரச்சாவடைந்த
என் தோழனின் துப்பாக்கி
அவனது நினைவோடும்
அவன்....
விட்டுச் சென்ற துப்பாக்கியோடும்
தாயக நினைவுகளோடும் என்
பாதங்களைத் தூக்கி வைக்கிறேன்
பகை வீட்டை நோக்கி

- யோ.புரட்சி

## இன்னுமிரு நிமிடங்கள்

என்னினமே
உங்களுக்கு
அதோ போகின்றாளே
அவளைப் புரிகின்றதா?

தன்னை உருக்கியிந்தத்
தாயகத்துக்காய் தந்துவிட
தயாராகிப் போகின்றாள்.

உங்களுக்காய் கசிந்துருகும்
இதயத்தோடணைத்துக்
குண்டுகட்டிப் போகின்றாள்

தன்னுயிர்பிடுங்கித் தந்துவிடும்
தற்துணிவு பெற்றே - அந்தத்
தமிழ்மகள் போகின்றாள் -
வெடிமுழங்க
மேனியது
பிய்த்துதறிப் பகையழித்து
வென்றுவிடப் போகின்றாள் -
என்னினமே!
உங்களுக்காய்
அவள் காற்றோடு கலப்பதற்கு
இன்னுமிரு நிமிடங்கள் -

-தர்மேந்தினி

## சோகம்

மனத்தினுள்
வைத்துக் கட்டிவிட்டு
முகத்தினால் வெளிப்படுத்தும்
மாயாஜாலம்!
தோளை விட்டிறங்க மறுக்கும்
சிறு குழந்தை
உதடுகளில் மலரும்
சிரிப்பு மலர்களைப் பறித்தெடுக்கும்
இயற்கையின் கரம்!
இயற்கை
மனிதனோடு ஆடும் விளையாட்டு!
வாழ்க்கைப் பயணத்தில்
சிலர் வலிந்து போட்டுக்கொள்ளும்
நித்திரைக் குளிகை!
இன்பத்தின்
ஒப்பற்ற அளவுகோல்!
அப்பாவிகளுக்கு
அடக்குமுறையாளர்
அளித்த பரிசு!

-த.நிலவன்

## தாயவளை மீட்கவென்று

கரிப்பு மணிகளின் விளை நிலத்தினுள்
புதையுண்டு போன - எம்
கண்ணின் மணிகளே
வந்து விட்டோம் உங்கள்
மீட்பர்கள் நாங்கள்
காத்திருக்கிறோம் நாம்
உம்மருகில் அம்மணியின் வசமுள்ள
எம் பொன்மணிகளைச் சிறைமீட்க
காத்திருக்கின்றோம் உம்மருகில்
அன்றொருநாள் எம்முடன்
இதே வீதியால் நீங்களும் நடந்தீர்கள்
இன்று உங்கள் புதைகுழிகளின் அருகே
மீண்டும் நடக்கிறோம் -
சிங்களத்துப் பேய்களின்
சிதைவுகளின் மேல் நின்று - எம்
தாயவளைச் சிறை மீட்போமென்று.

-உலகமங்கை

## ஊனுண்ணும் சுடலை முனி

ஒதுக்கமான ஊர்ச்சுடலைக்கும்
அப்பாலே எங்கேயோ
உறங்கிக் கிடந்த முனி எழுந்துவிட்டது
விரித்த தலை காற்றில் பறக்க
அகலத்திறந்த வாய்....
உள்ளே உடைந்த எலும்புகள்
நசிந்த சதைகள்...
கழுத்தைப் பிடித்துத் தூக்கி
வாயிலிட்டுச் சுவைக்க
விரித்த கரத்துடன் வருகிறது
பிணவாடை வீச
ஊருள் வருகிறது உணவிற்காய்.
சிலர் உடுக்கடித்துப் பாடி
பொங்கலிட வேண்டுமாம்
முயல்கின்றனர் ஆயினுமது வருகிறது.
சிலர் தடுத்தனர் தடுத்தவர் மீதேறியும்
கடந்து வருகிறது.
வேகம் மட்டும் குறைகிறது
என்ன செய்யலாம்?
ஊரெல்லாம் கூடி குழறி ஓடுகிறது.
நான்...? ஓ! ஒருவழி
என் மூளையிற் திறக்கிறது.
எனது பேனாவுடல் முனியின் வாயுள்
புகுந்து... தொண்டையைக்கிழித்து
குடலைக் குத்திப்பிரித்து...
கதை முடியும் நான்....?
அநேகமாய் மீளமாட்டேன்
ஓடிப்போன ஊர் மீளும்.

- கை-சரவணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாள்ஸ் அன்ரனி புலிகளின் முதல்

2ஆம் கட்ட ஈழப்போரின் ஆரம்பக் கட்டங்களில் கெரில்லாப் போர் அணியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இன்று மரபுவழி இராணுவ அம்சங்களைப் பிரதிபலிப்பவர்களாக போர் அரங்கில் நுழைந்துள்ளனர். இது விடுதலைப் புலிகளின் போரியல் வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துவிட்டுள்ளது.

ஒரு மரபுவழி இராணுவத்தின் தேவையை அன்றைய சூழல் எமக்குத்தந்தது. எதிரி தனது முகாம்களைப் பலப்படுத்தியதுடன் ஒரு கெரில்லா அமைப்பால் சாதாரணமாகத் தாக்கி அழிக்கப்பட முடியாதவாறு தன் முகாம்களை அமைத்திருந்தான். ஏற்கனவே மரபுவழிப்படைக்குரிய அம்சங்களைக் கொண்டிருந்த தன் படைகளைப் பலப்படுத்தி நவீன ஆயுதங்களையும், புதிய போர் நுணுக்கங்களையும், பெருமளவிலான ஆளணிகளையும் ஒன்று சேர்த்து ஒரு பலம்வாய்ந்த மரபுப்போர் இராணுவமாகத் தன் படைகளை எதிரி ஒழுங்கமைத்திருந்தான்.

இப்புதிய ஒழுங்கமைப்பின் மூலம் தான் ஏற்கனவே எம் தாயகப் பிரதேசத்தில் அமைத்திருந்த முகாம்களை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றியதுடன், எமது பாரம்பரிய பிரதேசங்களின் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு புலிகளின் தளப்பிரதேசத்தைக் கைப்பற்றியும், மக்களின் வாழ்வை அவலப்படுத்தியும் ஆக்கிரமித்து மக்களை அகதிகளாக்கும் ஒரு நீண்ட திட்டத்தை எதிரி தயாரித்திருந்தான்.

எதிரியின் இத்திட்டமானது எம் போராட்ட வளர்ச்சியில் பேராபத்தை விளைவிக்கக்கூடிய தடைக்கல்லாக இருந்தது. எதிரியின் மரபுவழி இராணுவத்தை எதிர்கொண்டு அந்த இராணுவத்தைத் தாக்கி அழிக்கத்தக்கவாறான பயிற்சி, தந்திரம், நவீன ஆயுதங்களைக் கையாளக் கூடியவாறான திறமை, அணிகளை போரில் வழிநடத்தும் புலமை என்பன நிரம்பப்பெற்ற படையணிகளாக எம்மை மாற்றிக்கொண்டு விடுதலைப்போரின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு எமது விடுதலைப் படையைத் தயார்ப்படுத்த தலைவர் முயன்றார்.

அன்றைய காலப்பகுதியில் வெற்றிகொள்ளப்பட்டிருந்த யாழ்.கோட்டை மற்றும் தாக்கியழிக்கப்பட்ட கொண்டச்சி, கொக்காவில், மாங்குளம், தென் தமிழீழத்தின் பல முகாம்கள் என எல்லாமே பிராந்திய மட்டத்திற்கு உட்பட்ட புலிகளின் அணிகளாலேயே பெரும்பாலும் வெற்றிகொள்ளப்பட்டிருந்தது. ஆனாலும் சில முகாம்களின் தாக்குதல் வெற்றியானது பல பிராந்தியப் படைகளின் கூட்டுத் தாக்குதல்களின் மூலம் கிடைத்தன. அவ்வாறான வெற்றிகள் எதிர்காலத்தில் ஒரு மரபுவழிப்படையின் தோற்றத்தையும் அது தரப்போகும் வெற்றிகளையும் கட்டியம் கூறிநின்றன.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய சொற்ப காலத்தில் ஒரு மரபுவழிப்படையணியின் தேவை தலைவரால் உணரப்பட்டு அவரின் எண்ணப்படி உருப்பெற்றது. விடுதலைப் புலிகளின் இராணுவ அமைப்பானது தன்னை ஒரு மரபுவழிப்போரிற்குத் தயாரான படைப்பிரிவாக உருமாற்றியவாறு மரபு இராணுவத்திற்குரிய தன் வளர்ச்சிப்படியில் விரைவாக, ஆனால் நிதானமாக முன்னேறத் தொடங்கியது.

தமிழீழ விடுதலைக்கான மரபுப் போர் அணிகளாக செயற்பட வேண்டுமென்ற தலைவரின் விருப்பப்படி உருவாக்கப்பட்ட போர் அணிகளின் முன்னோடியாக 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' உருவாக்கம் பெற்றது.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி மாவட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகள் ஒன்றிணைக்கப்பட்டு 1500 பேர் கொண்ட ஒரு அணியாக 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி' உருவாக்கம் பெற்றது.

அதுவரை காலமும் நடைமுறையிலிருந்த இராணுவக் கட்டமைப்புக்களும் போர்ப் பயிற்சித் திட்டங்களும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி உருவாக்கத்துடன் புதிய வடிவம் பெறத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. யாழ். தென்மராட்சியில் எழுதுமட்டுவாள் பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட இப்புதிய படையணியானது 1200 பேர் கொண்ட தாக்குதல் அணியாகவும், 300 பேர்கொண்ட கனரக ஆயுத அணியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டது.

'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' எனும் பெயர் தலைவர் அவர்களாலேயே சூட்டப்பெற்றது. லெப். சாள்ஸ் அன்ரனி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு மூத்த உறுப்பினர். தமிழீழ விடுதலைப்போரில் சிங்கள இராணுவத்தின் மீதான புலிகளின் முதலாவது தாக்குதலைத் தலைமையேற்று நடத்திய முதலாவது தாக்குதல் பிரிவுத் தளபதி, ஒரு சிறந்த வழிகாட்டி. இந்த உன்னத வழிகாட்டியின், எமது தாக்குதல் படைப் பிரிவின் முதலாவது தளபதியின் ஞாபகமாகவே விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுப்போர்ப் படையணி 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' என அழைக்கப்பட்டது.

'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' தொடக்க நாள் அன்று படையணிப் போராளிகள் மத்தியில் தமிழீழத் தேசிய தலைவர் அவர்கள் உரையாற்றும்போது 'நீண்டதும் கடினமானதுமான எமது விடுதலைப் போரில் இறுதிவரை உறுதியுடன் போராட உடல், உளப் பயிற்சிகள் அவசியம். எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து அதனை வெற்றிகொள்ளத் தேவையான தந்திரங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். இவை மட்டும் இருந்தால் ஒரு படையணி வெற்றிகொள்ள முடியாது. இவற்றை செயற்படுத்தும் துணிவும் வேண்டும் 'துணிவு, பயிற்சி, தந்திரம்' இவையே ஒரு படையணியின் வெற்றியைத் தீர்மானிக்கும்' எனத் தெரிவித்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி இதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளது. மேலும் அவர் கூறுகையில், 'விடுதலைப்போரில் பெரிய இலக்குகளைத் தாக்கி அழிப்பதுடன் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்படும் அணியாகவும் விளங்கவேண்டும்' என தெரிவித்தபோது முதன் முதலில் ஒரு சிறப்புப்படையணியாகக் கூடிநின்ற போராளிகளின் மனதில் புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தது.

இப்படைப் பிரிவின் உருவாக்கத்திற்காக பல்வேறுபட்ட பிராந்தியப் படைகளில் இருந்து வந்திருந்த போராளிகளின் மனதில் மகிழ்வும், ஆர்வமும், ஒத்துழைப்பும் வேகமும் மேலோங்கியிருந்தது. அன்றைய சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு போராளியினதும் அயராத முயற்சியாலேயே விடுதலைப் புலிகளின் மரபுப்போர் அணிகளின் முதற்படியாக 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' புலிகளின் புதிய போரியலுக்கான ஒரு திறவுகோலாகத் தன்னை அமைத்துக் கொண்டது.

ஆரம்பத்தில் இப்படைப் பிரிவின் சிறப்புத் தளபதியாக தளபதி பால்ராஜ் அவர்களும்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# றப்புப் படையணி
# ரபுப்படையணி



தளபதியாக லெப். கேணல் ராஜனும் (மாவீரர்) துணைத்தளபதியாக லெப். கேணல் ஜஸ்ரினும் (மாவீரர்) நியமிக்கப்பட்டனர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய ஆரம்ப நாட்களில் சிங்களப்படைகளின் உடனடி இலக்காக வன்னிப்பகுதியே இருந்தது. மணலாறு உட்பட வன்னியின் பகுதிகளைக் கைப்பற்றி, வடக்கு-கிழக்கைப் பிரித்தெடுக்க வேண்டிய அவசர இராணுவத் தேவை எதிரிக்கு இருந்தது. இந்திய இராணுவத்துடனான எமது போரை நடத்திய தலைவர் தங்கியிருந்த மணலாற்றுப் பகுதியின் இராணுவ முக்கியத்துவம் எதிரிக்கு நன்கு தெரிந்திருந்தது. இதனால் வன்னியையே முதலில் கைப்பற்ற எதிரி எண்ணினான். எனவே எதிரியின் மரபுவழி இராணுவ நடவடிக்கையை எதிர்நோக்கி விடுதலைப் புலிகளின் 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' வன்னியிலேயே தன் ஆரம்பச் செயற்பாடுகளைத் தொடங்கியது. 'வன்னியைப் பாதுகாப்பதே எமது உடனடித் தேவையாக இருந்தது. இதற்குரிய நடவடிக்கையிலேயே நாம் உடனடியாக ஈடுபட்டோம்' என அன்றைய சூழலை நினைவுகூர்ந்தார் தளபதி பால்ராஜ்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய ஆரம்பகாலத்தில் சிங்களப் பேரினவாத அரச இராணுவம் விடுதலைப் புலிகளை இலகுவில் தோற்கடித்துவிடலாம் என நம்பியிருந்த நேரம். எனவேதான் விடுதலைப் புலிகளை முற்றுகைக்கு உள்ளாக்கி எதிரி நம் நிலப்பரப்பை தொடர்ச்சியாக ஆக்கிரமிக்க முயன்றான். எம் கட்டுப்பாட்டுத் தளப்பிரதேசத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் எம்மைத் தோற்கடிக்க எதிரி திட்டமிட்டான். அதற்காகவே அன்றைய பெரும்பாலான படையெடுப்புக்களை மேற்கொண்டான். எதிரியின் இந்த முற்றுகைச் சமரை உடைப்பதில் அவனது இராணுவ நடவடிக்கைகளைக் கேள்விக் குறியாக்குவதில் அன்று 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின்' பங்கு குறிப்பிடத்தக்கது. அன்று தொடக்கம் இன்றுவரை எதிரியின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான முறியடிப்புச் சமர்கள் என்றாலும்சரி, எம்மால் திட்டமிட்ட எதிரி மீதான வலிந்த தாக்குதலானாலும்சரி அவற்றில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் பங்கும் முக்கியத்துவமானது.

'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின்' உருவாக்கம் எம் போராட்ட வடிவத்தின் ஒரு புதிய பரிமாணம். கெரில்லாப் போராட்ட வடிவத்திலிருந்து நாம் மரபுவழி இராணுவ அம்சங்களைக் கொண்ட படையணிகளாக மாறிய போரியல் வளர்ச்சியின் முதற்படி.

உலகம் அதிசயிக்கும் இன்றைய விடுதலைப் புலிகளின் போர் நுட்பங்களும், போரியலும் புலிப்போராளிகளினது வீரத்தாலும், தியாகத்தாலும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கோபுரமாயின் 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி' அதன் அத்திவாரக் கற்களில் ஒன்று.

**-சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி**




எரிமலை ஆவணி - 1983
குமுறல்-2, அனல்-2

## புறப்படத் தயார் போரிடத் தயார்

இதயம் எரிமலையாகிறது! கண்கள் கண்ணீர்த் தடாகமாகின்றன! இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை எண்ணும் போது... கட்டுமரத்திலாவது கடல் தாண்டிச் சென்று... இலங்கைத்தீவை அடைந்து... பழிக்குப் பழி வாங்கத் துடிக்கின்றோம்! பாதகம் செய்வதைப் பால்ச்சோறாகக் கருதும் சிங்கள வெறியன் செயவர்த்தனாவிடம் இனியும் நீதியை எதிர்பார்ப்பது மூடத்தனத்தின் முற்றிய நிலையே!

மத்திய அரசு கவலை தெரிவிக்கிறதாம்! இந்தக் கவலை...

இலங்கைத் தமிழரின் உயிரை மீட்குமா?
உரிமையைக் காக்குமா?
காயத்திற்கு மருந்தாகுமா?
எம்குலப் பெண்களின் கற்பைக் காக்குமா?

இந்தியப் பிரதமர் சொல்கிறார்- "என்ன இருந்தாலும் அது வெளிநாட்டுப் பிரச்சினை" ஆம் உண்மைதான்! அவரைப் பொறுத்தவரை அது வெளிநாட்டுப் பிரச்சினைதான்! ஆனால் எங்களுக்கு- இது - இரத்தப்பிரச்சினை-இனப்பிரச்சினை-! இதயப்பிரச்சினை!!! ஈழத் தமிழர்கள் தனிநாடு அமையுமட்டும் அவர்களின் அல்லல் தீராது! அவதி மாறாது!! கண்ணீர் நிற்காது!!! நம் செந்தமிழ் இளைஞர்கள் இலங்கையை நோக்கட்டும்- இடையேயுள்ளது 20மைல் கடல்தான்! வீட்டுக்கொரு தமிழ் இளைஞன் 'ஆயுதப் பயிற்சி' பெறட்டும்!

கவலை தெரிவிக்கும் மைய அரசே! எங்கள் இரத்தங்களைக் காக்க நாங்கள் போகிறோம்!!! சிங்கள இனவெறி இராணுவத்தை நாம் சென்று நசுக்கிடுவோம்-

கவலை தெரிவிக்கும் மைய அரசே!
எங்களை வழியனுப்பினால்கூடப்போதும்!
வாழ்த்துவோம் உன்னை!
புறப்படத் தயார்! போரிடத் தயார்!

-கா.காளிமுத்து
தமிழ்நாடு விவசாய அமைச்சர். [1983]



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க.வே.பாலகுமாரன்

## உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம்

இது பேச்சுவார்த்தைக் காலம். பேச்சுவார்த்தை பற்றிய பேச்சுக்களாலேயே காலம் கழியுங்காலம் என முன்னர் எழுதியிருந்தோம். இப்போது இன்னும் வெளிப்படையாக, மூடுமந்திரம் எதுவும் இல்லாமல் நிலைமைகளை சீர்தூக்கிப்பார்ப்போம்.

பேச்சுவார்த்தைக்காலத்திலா அல்லது போர்க்காலத்திலா எதிரியின் வன்மம் அவனது பேச்சுக்களில், எழுத்துக்களில் தெறிக்கும்?

பேச்சுவார்த்தைக்காலத்திலா அல்லது போர்க்காலத்திலா மிக வெளிப்படையாக போர்க்கருவிகள் கொள்வனவு பெருமளவில் நடக்கும்?

பேச்சுக் காலத்திலா அல்லது போர்க்காலத்திலா எதிரியை கருவறுக்க, பழிவாங்க, முடக்க, அவமானப்படுத்த முயற்சிமேற்கொள்ளப்படும்? பேச்சுவார்த்தைக் காலத்திலா அல்லது போர்க்காலத்திலா எதிரியை இரண்டாக உருவகித்து, ஒரு எதிரியை போர்மூலமும், மறுவெதிரியை பேச்சு மூலமும் கையாள்வோமென பகிரங்கப் பிரகடனப்படுத்தப்படும்? அல்லது எக்காலத்தில் அமைதியை முன்னெடுக்க, போர்ச்சூழலை தணிவிக்க, பகைமையை குறைக்க, நல்லெண்ணத்தைக் காட்ட முயலப்படும்? சொல்லுங்கள் எம் மக்களே!

இப்போது இன்னும் வெளிப்படையாக அலசுவோம். பேச்சுவார்த்தைக் காலமென்றால் அதன் அரசறிவியல் பொருள் என்ன? அரசியல், இராசதந்திரம் எனச் சொல்லப்படும் சொற்களின் தொடர்பென்ன? போர் என்பது இன்னொரு விதத்தில் அரசியலின் நீட்சியேயெனக் குறிப்பிட்ட அதே குளோசுவிற்சுதான் போரின் இன்னொரு வடிவம் தான் இராசதந்திரம் என்கிறார். அப்படியானால் போர்மூலம் பெறமுடியாததை அல்லது செய்யமுடியாததை இராசதந்திரம், அரசியல் என்பன மூலம் செய்யப்படும் எனப் பொருள், நாம் கொள்ள முடியுமா? இதை மேலும் விரிவாகப் பேசுவோம்.

பேச்சுவார்த்தை அதனோடு தொடர்புடைய இராசதந்திரம், அரசியல் என்பதன் போக்கினை வரலாற்றின் வழிவந்த பட்டறிவின் அடிப்படையில் நாம் மூன்று வகையாக நோக்கலாம். ஒன்று போர்மூலம் செய்யவிரும்பியதை முடியாத நிலையில் பேச்சுவார்த்தை மூலம் செய்தல். இது அடக்குமுறையாளரின் பாடத்திட்டம். மக்கள் கிளர்ச்சிகளை நசுக்க அமெரிக்கக் கும்பல் வகுத்த மோசத்திட்டம்.

பனிப்போர்காலத்தில் இது மிக வெளிப்படையாக ஒரு கோட்பாடாக உணரத்தக்க வகையில் நடைமுறையில் இடப்பட்டது.

அன்று மலேசியா, பின்னர் பிலிப்பைன்சு போன்ற நாடுகளிலும் எல்சல்வடோர் போன்ற தென்னமெரிக்க நாடுகளிலும் இதன் பிரதிபலிப்பை நாம் காண முடியும். இத்திட்டம் நுணுக்கமானதொரு உளவியல் பண்பு வாய்ந்தது. நீண்டு செல்லும் போர் காரணமாக வதைபடும் மக்களின் போர்ச்சலிப்பை ஆதாரமாகக் கொண்டு போராடுபவர்களின் உள உறுதியை சரியச்செய்யும், சறுக்கச் செய்யும் வகையில் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை, பொதுமன்னிப்பு, ஆயுதக் கையளிப்பு, உடன்பாடு, மறுவாழ்வு, சனநாயகம் என மயக்கம் தரும் ஆனால், விருப்பம் தரும் சொற்களின் உச்சரிப்பால் நிரம்பியது. உச்சரிப்போடு நிற்காமல் உருப்படியான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமே இதன் இலக்கு அடையப்படும். இலக்கு என்ன? எழுபது விழுக்காடு நிலப்பரப்பைக் கைப்பற்றி வைத்த எல்சல்வடோரின் FMLN அமைப்பு, புதிய மக்கள் இராணுவம் எனப்பட்ட பிலிப்பைன்சின் NPA இயக்கம் என்பன வரலாற்றின் பக்கங்களில் இருந்து அழிக்கப்பட்டன. இவ் விலக்கில் பெரு விருப்பம் கொண்டுள்ள சிங்கள அரசிற்கு அவ்விலக்கை அடைவதற்காகக்கூட போர்நிறுத்தம், பொருண்மியத்தடை நீக்கம் போன்ற முதற்கட்ட செயற்பாடுகளையே பரீட்சித்துப்பார்க்கக்கூட விருப்பமில்லை. புலிகளை இவ்வாறு ஏய்க்கமுடியாது என்பதும் அவர்கள் வரலாற்றுக் குருடர்கள் அல்ல என்பதும் ஏற்கனவே உணரப்பட்ட உண்மை.

இரண்டாவது போக்கு பெரும்பாலும் போரில் ஈடுபடும் இருதரப்பிற்கோ அல்லது ஒரு தரப்பிற்கோ இன்னொருநாள் போர் செய்வதற்கு இன்று ஓய்வு தேவைப்படும் நிலையை அடிப்படையாகக் கொண்டது. இதற்கும்கூட சிலகாலம் ஒப்பிற்காவது பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம், உடன்பாடு என விட்டுக்கொடுப்புக்கள் தேவைப்படும். இதுகூட சிறீலங்காவிற்கு வேப்பங்காய்தான். மிஞ்சியிருக்கும் வழிமுறை உண்மையிலே சம்மந்தப்பட்ட இருதரப்புமே விட்டுக்கொடுப்புக்கள், இணக்கப்போக்கு, சகிப்புத்தன்மை, பெருந்தன்மை போன்ற பண்புகளில் ஒருசிலவற்றையாவது வெளிக்காட்டி பேச்சுக்களில் ஈடுபடுதல். இச்சூழ்நிலைக்கு பல நிர்ப்பந்தங்கள், நெருக்கடிகள் காரணமாக அமையும். தென்னமெரிக்காவின் மிக நீண்ட பேச்சுவார்த்தைகளை இங்கு தொடர்புபடுத்தலாம். இம் மூன்று தோற்றப்பாடுகளில் சிறீலங்கா, புலிகளின் பேச்சுவார்த்தை தொடர்பான வழிமுறைகள் எதனுள் வருகின்றது? அல்லது எதனுள் வரவேண்டும்? சொல்லுங்கள் எம் உடன்பிறப்புக்களே!

இதில் எதனுள்ளும் பொருந்தி வருவதாகத் தெரியவில்லை. இங்குதான் ஒரு பேருண்மை அல்லது மாபெரும் சதி ஒன்று அம்பலமாகின்றது. பொருண்மிய நலன்களையே மட்டும் தமது நலனாகக்கொண்டு செயற்படும் சர்வதேச மேலாண்மை நாடுகளின் உலகமயமாக்கற் போக்கிற்கு இசைவாக, தனது தாய்நாட்டு நலன்களையே விட்டுக்கொடுத்ததோடு, அம்மையார் நிற்கவில்லை. புதிய மொந்தையில் பழைய கள் என்பதுபோல பனிப்போர்க் காலம் தாண்டியும் விடுதலைப் போராட்டத்தினை விடாது தொடரும் புலிகளை வீரியங்குறைக்கப் புதிய வழிமுறைகளைப் பரீட்சித்துப் பார்க்க ஒரு வாய்ப்பையும் அம்மையார் வழங்கியுள்ளார். இவ் வழிமுறை எத்தகையது? உலக நீதியில் ஓரவஞ்சகம் வெளிப்படும் இடம் எவ்வளவு குரூரமானது?

'மீறப்படுவது யாருடைய மனித உரிமை என்பதைப் பொறுத்தே அது மனித உரிமையா? இல்லையா? ' (பேராசிரியர் சிவசேகரம்) என தீர்மானிக்கும் உலகின் இழிகுணம் வெளிப்படும் விதம் பாருங்கள். போரை நிறுத்துங்கள் பேச்சில் ஈடுபடுங்கள், சனநாயக

# உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றோம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நதியில் குதியுங்கள் என புலிகளுக்கு இடைவிடாத போதனை, அழுத்தம். அம்மையாருக்கோ பெரும் போர்க்கருவிகள் கொள்வனவிற்கு வாய்ப்பு. பேரினவாத வெறியை திருப்தி செய்யத் தடை.

அதேவேளை முற்றாக தம் கட்டுப்பாட்டிலிருந்து சிங்களம் கைநழுவிப் போகாதிருக்கத்தக்கதான மட்டுப்படுத்தப்பட்ட நிதியுதவி, இதன்மூலம் அதனை பேச்சுவார்த்தை மேசைக்குள் தள்ளும் தந்திரம்.

இது சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரல். ஆனால், அம்மையாரின் நிகழ்ச்சி நிரல் வேறு. புலிகள் எனும் இரும்புக் கவசம் பூண்டு நிற்கும் தமிழ் மக்களை எவ்வாறு கவசத்திலிருந்து அகற்றி நிர்க்கதியாக்கி விடுவது? வெல்லமுடியாத கர்ணனிடம் யாசகம் கேட்ட வழிமுறையைக்கூட அம்மையார் பின்பற்றுகின்றார். போர்நிறுத்தத்தை பெரும் மனவுளைச்சலின் மத்தியில் மேற்கொள்ளும் புலிகள், தங்களது போர்நிறுத்தத்தை அவர்களே மீறிவிட்டார்கள் என கூச்சநாச்சமில்லாமல் பட்டியல் போடும் எவு படுபாதாளம் இறங்கவும் அவர்கள் தயாராகிவிட்டார்கள். இவ்வாறாக ஒரே வேளையில் இருமுனைகளில் இராசதந்திர அரசியல் இராணுவ தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து செயற்படும் புலிகளுக்கு இப்போது எம் மக்கள் பொங்குதமிழராகி புலிகளே தங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றார்கள் என ஒருமித்த குரலாகக் கூறி ஆதரவு தெரிவிக்கும் அற்புதம் நிகழும் காலமிது.

இந்நிலையில் புலிகளோடு இணைந்து ஒன்றித்து அவர்கள் பெற்ற வெற்றிகளுக்குக் காரணமாக அமைந்த எம்மக்களுக்கு வெற்றிக்கனியை கையளிக்க ஆயத்தமாகவிருக்கும் வரலாற்றன்னை விடுக்கும் வேண்டுகை இதுதான். 'தமிழ் மக்கள் என்ற பெயரில் வரலாற்றின் புதல்வர்களாகிவிட்ட நீங்கள், எத்தனை தடைகளைத் தாண்டிவிட்டீர்கள். இத்தடை தாண்டும் போட்டியில் தாண்டவேண்டிய இறுதித்தடை இதுதான். இத்தடை தாண்டினால் அதுவே வெற்றியின் படிக்கட்டாகிவிடும்' ஏனென்றால் இராசதந்திரம் என்றால் முடிந்தளவு பாரிய தடைகளை போராடுபவருக்கு இட்டுப் பார்ப்பது, தடைகள் யாவற்றையும் தாண்டிய நிலையில் வெற்றியாளனுக்கு எல்லாம் உரியதென ஏற்பது என்றும் பொருள்படும்.

எனவேதான் 'இளங் குருத்துகளும்' 'குருத்தோலைகளும்' போராடும் காலத்தில் சற்று முற்றிய பசிய ஓலைக்கும் போராடவேண்டிய நிலையை தலைவன் உணர்த்தியுள்ளான். வெற்றியை எமதாக்க மக்கள் என்ன செய்யவேண்டும்? லெனின் கூறுகின்றார்.

*1) புரட்சிகர எழுச்சியுடன் என்றுமே விளையாட வேண்டாம் அதைத் தொடங்கும்போது கடைசி வரைக்கும் செல்ல வேண்டும் என்பதை உறுதியாக உணர்ந்திருக்க வேண்டும்.*

*2) தீர்மானகரமான முனையிலே தீர்மானகரமான தருணத்திலே மாபெரும் ஆற்றல் மிக்க (மக்கள்) சக்தியை ஒருமுனைப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் பலம்மிக்க எதிரி வெற்றி நோக்கி நகர முற்படுவான்.*

*3) எதிரி படைபலம் சிதறிக்கிடக்கும் வேளையில் நீங்கள் தாக்குதலை சடுதியாகத் தொடங்கவேண்டும்.*

'நீதியான போர்களிலும் தற்காப்புப் போர்களிலும் ஆயுதமேந்திய மக்கள் செயல் திறமை பற்றியும் அவர்கள் வகித்த மகத்தான பங்குபற்றல் பற்றியும் எழுதும்போது பிரெட்ரிக் ஏங்கல்சு வருமாறு சுட்டிக்காட்டுகின்றார். 1871ஆம் ஆண்டில் பிரான்சிற்கும் பிரஸ்யாவிற்கும் (தற்போதைய செருமனி) நடைபெற்ற போரில் பின்னடைவுகண்ட பிரான்சு பற்றி அவர் எழுதுகையில் 'ஆழ்ந்த தேசப்பற்று பிரான்சுக்காரர்களுக்கு இருந்திருக்குமேயானால், ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு கிராமமும் கோட்டையாக மாற்றப்பட்டிருக்குமேயானால், ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு குடிமகனும் போராளியாகியிருந்தால் செருமனியரின் கதி என்னவாகியிருக்கும்?'

தம்மைவிட பன்மடங்கு வலுமிக்க எதிரிகளான பிரான்சியரை, அமெரிக்கரை எவ்விதம் ஏழ்மையும் எளிமையும் ஆனால் வீரமும் கொண்ட வியட்நாமியர் வென்றார்கள்? கோசிமின் கூறுகின்றார், 'ஒவ்வொரு குடிமகனும் ஒரு தீரமிக்க போராளியாகவேண்டும். ஒவ்வொரு கிராமமும் வட்டாரமும் தெருவும் அரணாக மாற வேண்டும். ஒவ்வொரு கூட்டுப்பண்ணையும் தொழில் நிறுவனங்களும் மக்கள் யுத்தத்தின் விநியோக ஆதாரத் தளங்களாக மாறவேண்டும். இவ்வாறாக நாம் நம் நாடு முழுவதையுமே பெரும் போர்க்களமாக மாற்றி எந்த ஆக்கிரமிப்பாளரையும் அழித்துவிடமுடியும்' இதன் விளக்கமென்ன? வியட்நாமின் நிரந்தரப்படைக்குத் துணையாக மக்களின் பிரதேசப் படைகள், குடிபடைகள், தற்காப்புப் படைகள், கரந்தடி அணிகள் (இவை கிராமங்கள், வேலைத்தளங்கள், கூட்டுப்பண்ணைகள் என்பவற்றில் அமைக்கப்பட்டவை) உருவாக்கப்பட்டன. இம் மூவகையும் இணைக்கப்பட்டே மக்கள் படை பரிணமித்தது. மக்கள் யுத்தத்தின் தளபதியான ஜெனரல் ஜியாப்பின் வார்த்தைகளில் கூறுவதாயின், 'விடுதலைக்கான அனைத்துப் பணிகளிலும் மக்களே திடமான அடிப்படை. மக்களின் அரசியல் படைகளே ஆயுதப்படைகளின் திடமான அடிப்படை, மக்களின் ஆயுதப் படைகளே விடுதலைப் படையணியின் திடமான அடிப்படை'

அன்று ஜெனரல் ஜியாப் உறுதியான நம்பிக்கைகொண்டது போலவே எம் தலைவனும் கூறுவது இதுதான். 'நமது அன்பிற்குரிய தமிழீழத் தாயகத்தின் விடுதலையை எம்மக்கள் என்றென்றும் கட்டிக்காப்பர். இவ்வழகிய தேசத்தை எம்மக்கள் என்றென்றும் பாதுகாப்பர்'





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிட்டத்தட்ட எதிரியின் பார்வையெல்லைக்குள் புகுந்துவிட்ட நிலையில் எதிரியை இவர்களும், இவர்களை எதிரியும் கண்டுவிட்டதால், தவிர்க்கவே முடியாமல் மூண்ட சண்டையில் (1999-08-30) பராவை நாம் இழந்தோம்.

எங்களுக்குச் சாதகமாயிருந்த உன்னுடைய இயற்கை அமைப்பு எதிரிக்கும் சாதகமாயிருந்ததால் வேவு நடவடிக்கைகளின்போது சிலவேளை சிக்கல்களையும் எதிர்கொண்டோம்.

நல்ல பகல் வெளிச்சத்தில் மரங்களிடையே மறைந்தும் புற்களிடையே தவழ்ந்தும் எதிரியின் பகுதியை நோக்கி எம்மவர்கள் போய்க்கொண்டிருக்கும்போது இடையில் தற்செயலாகத் தலையை நிமிர்த்திப் பார்க்க, சற்றுத் தள்ளி மரங்களிடையே மறைந்தவாறும் புற்களிடையே தவழ்ந்தவாறும் எமது பகுதியை நோக்கி எதிரி போய்க்கொண்டிருப்பதைக் காணக்கூடிய வாய்ப்புகளும் கிடைக்கும் நிலைமையைக் காவலரண்களுக்கு அறிவித்துவிட்டு எம்மவர்கள் முன்னகர்ந்து விடுவார்கள்.

மிகக் கவனமாக உருமறைப்புச் செய்துகொண்டு அவதானமாக ஒவ்வொரு அடியையும் எடுத்துவைத்து எம்மவர்கள் போக, அதுபோலவே எதிரியும் வர, ஒரு பெரிய மரத்தின் அல்லது மண்புற்றோ, பற்றையோ ஏதோ ஒன்றின் இருபுறமும் இரு வேவு அணியினதும் முன்னணி வீரர்கள் பதுங்கி மெல்ல எட்டிப்பார்த்து, ஒருவரையொருவர் கண்டு திடுக்கிட்டு, திரும்பிப் பார்க்காமலேயே எழும்பி அவனும் ஓட எம்மவர்களும் ஓடி, பாதை மாறி, திசை கண்டுபிடித்து, எங்கோ வேவு பார்க்கப் புறப்பட்டவர்கள் வேறெங்கோ வேவு பார்த்து, எப்படியோ போன வேலையை முடித்துக்கொண்டு திரும்புவார்கள்.

மிகவும் கடினமான வேவுப் பணியுடன் நகர்ந்துகொண்டிருந்த அந்த நெருக்கடி மிகுந்த நாட்களில் இன்னுமொரு இரண்டு பேரை நாம் எதிர்பாராமல் பிரியவேண்டி நேரிட்டது.

அன்று பகைவன் உன்னை துளைத்துத் தள்ளிக் கொண்டிருந்தான். அவன் செய்த கடும் பயிற்சிகளால் நீ புண்ணாகி நொந்து கொண்டிருந்தாய்.

வீரவேங்கை நீலவாணி சரியான துடியாட்டக்காரி, எதற்கும் அஞ்சாத புதியவர், உற்சாகமானவர், முன்னுக்கு எதிரி பயிற்சிக்காக அடிக்கும் ரவைகளும் எறிகணைகளும் எங்களை நோக்கித்தான் வரும். ஆனால், தேவையில்லை என்பதால் நாங்கள் யாரையும் பதிலுக்கு அடிக்க அனுமதிக்கவில்லை. திடீரென்று எங்கள் பக்கத்தில் இருந்து ஒரு ஒற்றைச் சூட்டுச் சத்தம், ஓடிப்போய் என்னவென்று கேட்டால் தன் ஆயுதம் அடிக்கின்றதா இல்லையா என்று சரி பார்த்ததாக அந்தக் குறும்புக்காரியிடம் இருந்து பதில் வந்தது.



1998 இல் தன் அடிப்படைப்பயிற்சி முடிந்ததும், லெப். அகலரசி முதலில் வந்ததே அம்பகாமத்துக்குத்தான். ஓயாத அலைகள்-2 நடவடிக்கையில் பங்கெடுத்து, சிலகாலம் கிளிநொச்சிப் பகுதியில் நின்றுவிட்டு, மறுபடியும் அம்பகாமத்துக்கே வந்து ஒரு குழுவின் பொறுப்பாளராக பணியாற்றினார். நல்ல பலசாலி. பாரமான வேலைகளை வேகமாகச் செய்வார். மிகவும் அடர்த்தியான அவரின் நீண்ட கூந்தலுடன் காடு அடிக்கடி விளையாடும். கலை நிகழ்வுகளில் ஆர்வம் அதிகம். மிகவும் பொறுப்புணர்ச்சி கொண்டவர்.

இருவரும் (1999-10-08) ஒரு நாளில் எமை விட்டுப்பிரிந்தார்கள். மிகவும் சிக்கலான அந்த வேவுப்பணி முடிவடைய முன்னரே எங்கள் அருமை நண்பனே, அம்பகாம வனமே, எப்போது நடக்கும் என்று உனக்கு நாள் தெரியாவிட்டாலும், விரைவில் என்றோ ஒரு நாள் நடக்கப்போகின்றது என்று நீ அச்சத்தோடு எதிர்பார்த்த அந்த நதிமூலம் watershed புறப்பட்டது.

காடுகள்..... பூமியின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்பதில் அதிகம் பங்கேற்கும் காடுகள்தான் எமது போராட்டப் பலத்தையும் பாதுகாத்தன.

தமிழீழ-இந்தியப் போர்க்காலத்தில் மணலாற்றுக்காடு, மூன்றாம் ஈழப்போர்க்காலத்தில் வன்னியின் காடுகள் எம்மைத் தம்மோடு அரவணைத்துக்கொண்டன.

அழகிய, ஆரோக்கியமான மரங்களைக் கொண்ட அழகிய அம்பகாமக்காடே! எங்கள் அருமை நண்பனே! புதியவர்கள் இன்று படை நடத்துகின்றார்கள் தெரியுமா?

உன்னோடு நின்றபோது நாங்கள் சந்தித்த அந்தப்பேரிழப்புத்தான் எம் தலைவனின் விழியசைவில் எம்மைப்பெரும் அலையாய் எழுந்து வீசச்செய்தது.

எதிரியின் பகுதிக்குள் கேட்கும் ஆரவாரங்களும் ஆர்ப்பாட்டங்களும் எமக்கு நிலைமையை உணர்த்தின. நாங்களும் மெல்லமெல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். உன்னுடைய நெருக்கமான மரக்கால்களிடையே பின்னணி விநியோகத்தை இலகுவாக்குவதற்காகப் பாதை எடுத்துக் கொண்டிருந்த ஒரு காலைவேளை எங்கள் அருமை நண்பனே, அம்பகாம வனமே எப்போது நடக்கும் என்று உனக்கு நாள் தெரியாவிட்டாலும், விரைவில் என்றோ ஒருநாள் நடக்கப்போகின்றது என்று நீ அச்சத்தோடு எதிர்பார்த்திருந்த அந்த 'நதிமூலம்' watershed புறப்பட்டது.

நதிமூலத்திலிருந்து (1999-10-14) வெளிவந்த நீரோட்டத்தின் வேகத்தை நாங்கள் உணர்ந்து,


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடைகாத்த வனமும் அலையெழுந்த வீச்சும்

– நதி –

நிதானித்து, திடப்படுத்தி, நீரோட்டத்தின் திசையை மாற்ற முயலுமுன் பலரை நாம் விலை கொடுக்க வேண்டியிருந்தது.

உன் மடியில் கண்மூடிய எங்கள் தோழிகளை எப்படி நாம் மறப்போம்? சொல்லு அடர்வனமே.

கண் பார்த்தால் கைசெய்யும் திறமை கொண்டவர் மேஜர் இளம்பிறை. 1995இல் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்தவர். சூரியக் கதிர்-1 நடவடிக்கைக்குப் பின்னணி விநியோகம் செய்தார். சூரியக்கதிர்-2இன் போது 60 mm மோட்டாருடன் நின்றவர். சண்டை முடிய மூன்று 60mm மோட்டார்களின் பொறுப்பாளரானார். ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கைச் சமரில் பங்கெடுத்து, புதூர்ச் சண்டையில் காயமடைந்த பின், இரண்டு 82 mm மோட்டார்களுக்கு பொறுப்பாக விடப்பட்டார். மோட்டார் ஆதரவுச் சூட்டை வழுத்திருத்தம் செய்தல் பற்றி இளம்பிறை படித்திராவிட்டாலும், அவரின் அனுபவ அறிவு காரணமாக அந்த அணியின் பொறுப்பாளராக விடப்பட்டார். ஜெயசிக்குறு காலத்தில் மாங்குளம் சந்தியை உள்ளடக்கி நாம் அமைத்திருந்த தளத்திலே வெவ்வேறு படையணிகள், பிரிவுகளைச் சேர்ந்த போராளிகள் பணியில் நின்றபோது நடந்த நெருக்கடியான ஒரு சண்டையில் மிகச் சிறப்பாக வழுத்திருத்தம் செய்து மோட்டார் சூட்டாதரவை பெற்றுக் கொடுத்ததற்காக அனைத்துப் பொறுப்பாளர்களாலும் பாராட்டப்பட்ட சிறந்த போராளி இவர் எங்கள் அணியொன்றின் பொறுப்பாளராக கிளிநொச்சியில், பள்ளமடுவில், அம்பகாமத்தில் பணியாற்றினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது வேவுப் பொறுப்பாளர் கப்டன் தேனுஜா கறுக்காய்வெட்டையில் செய்த கடைசி வேவு நடவடிக்கையே மேஜர் வாணியின் முதலாவது வேவு நடவடிக்கையாக அமைந்தது. திட்டமிடப்பட்ட தாக்குதல்களுக்காக வேவு எடுப்பதும், சண்டைகளுக்கான வழிகாட்டியாகப் போவதுமாக வாணியின் ஆரம்ப காலங்கள் அமைந்தன. சண்டையொன்றில் காயமடைந்து ஒரு கை சூம்பிய நிலையிலும் எந்தப் பயிற்சிக்குமே பின்நின்றதில்லை. மாலதி சிறப்புப் படையணியில் நின்ற காலத்தில் கல்யாணபுரச் சண்டைக்குப் போய்வந்தார். அம்பகாமத்தில் எதிரியோடு சிறப்புப் படையணி மோதிய சண்டையொன்றில் நெஞ்சில் காயமடைந்து, பின் ஓயாத அலைகள்-2ற்காக வேவு பார்த்து வழிகாட்டியாகவும் சென்றிருந்தார். தன் 40mm உடன் அம்பகாமம் வந்து அணியொன்றின் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

கப்டன் பல்லவனதும், முன்னர் அம்பகாமத்தில் வீரச்சாவடைந்த கப்டன் மோகனாவினதும் தங்கையான மேஜர் தனாவின் சொந்த இடம் வவுனியா. தந்தையில்லாமல் பொருளாதாரரீதியாகச் சிரமப்பட்ட குடும்பத்தை தாயார்தான் வழிநடத்தினார். வீமா-3 பாசறையின் பயிற்சி ஆசிரியர்களில் ஒருவராகப் பணியாற்றிய தனா, இரண்டு சகோதரர்களின் வீரச்சாவின் பின் தன்னைச் சண்டைக்கு விடுமாறு பிடிவாதமாகக் கேட்டு தாக்குதலணிக்கு வந்தார். சிறு குழுவொன்றின் பொறுப்பாளராக ஆரம்பத்தில் பணியாற்றிய தனா, தனது சிறப்பான நடவடிக்கைகளின் மூலம் கப்டன் அன்பழகியின் அணியின் 2வது பொறுப்பாளராகவும் இருந்தார்.

மிகத்தரமான சூட்டாளர் கடுமையாகப் பயிற்சிகளைச் செய்வார். 1990இல் இணைந்த காலத்தில் இருந்தே சண்டைகளில் நின்ற மேஜர் சந்திரா, 1994இல் அதிகாரிகள் கல்லூரியில் படித்து, பின்பு கனரக பயிற்சி எடுத்து, நிர்வாக வேலையிலும் சில காலம் பணியாற்றினார். ஓயாத அலைகள்-1 முடிவடைந்த பின் போர்ப் பயிற்சி ஆசிரியரானார். சந்திராவின் கம்பீரமான கட்டளையிடும் குரல் வெகு தொலைவுவரை கேட்கும். 1993இல் திருகோணமலையில் இவரின் சகோதரன் லெப். கேணல் விமல் வீரச்சாவைத் தழுவிக் கொண்டபின், பிடிவாதமாகக் கேட்டுத் தாக்குதலணிக்கு வந்தார். மாங்குளம், பள்ளமடு, அம்பகாமம் என்று கடுமையான களங்களை எதிர்கொண்ட இவர், எங்கள் அணியொன்றின் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

1994இல் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்துக்கொண்ட கப்டன் அன்பழகி ஆயுதங்கள் பற்றிப் படித்துவிட்டு ஆயுதக் களஞ்சியத்தில் பணியாற்றினார். ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கையின்போது, புளியங்குளத்தில் R.P.G .யுடன் நின்றிருந்தார். பிறகும் ஆயுதக் களஞ்சியத்தில் பணியாற்றி, பின்னர் அம்பகாமத்தில் அணியொன்றின் பொறுப்பாளராக இருந்தார். சிறப்புப் பயிற்சி ஒன்றைப் பெற்ற அணியொன்றின் பொறுப்பாளராக அம்பகாமத்தில் நின்றார்.

1991 ஆனையிறவு ஆ.க.வெ. சமரில் அக்கா 2ஆம் லெப். இளவரசி வீரச்சாவடைந்த பின் இணைந்த கப்டன் இளவரசி, 1994இல் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்து, FN MAG உடன் நின்றார். சூட்டுப் பயிற்சியில் எப்போதுமே முன்னணியில்தான். பின்னர் மாலதி சிறப்புப் படையணியில் நின்றபோது பதவியா நடவடிக்கைக்கு கிளைமோருடன் போயிருந்தார். கைத்துப்பாக்கியால் சுடும் பயிற்சியில் 10 ரவைகளையும் இலக்கில் அடித்து 100 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டார். இளவரசியின் திறமையைப் பாராட்டிய தேசியத் தலைவர் இவருக்கு ஒரு பதுங்கிச் சுடும் துப்பாக்கியைப் பரிசளித்தார். சிறப்புப் படையணியில் இருந்தபோது 10 KM ஓடி வந்து 04 செக்கன்களுக்குள் 04 ரவைகளை அடிக்கும் பயிற்சியில் 04 ரவைகளையும் இலக்கின் சரியான இடத்தில் அடித்தார். பதுங்கிச்சுடும் துப்பாக்கியால் 400 M சுடும் பயிற்சியில் முதலில் சித்தியடைந்தார். இரண்டு கால்களையும் நெருக்கமாக வைத்து மெதுவாக அவர் நடப்பதை அன்னநடை என்று கேலி செய்வார்கள். ஆனால், பயிற்சியில் புலி. அம்பகாமத்தில் குழு ஒன்றின் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

1992இல் அடிப்படைப் பயிற்சி முடித்த காலத்தில் இருந்தே இவர் ஒரு மருத்துவப் போராளியாகப் பணியாற்றி வந்தார். களங்களிலும், பயிற்சிப் பாசறைகளிலும் கப்டன் திலீபனின் பணி தொடர்ந்தது. கரும்புலிகள் அணிக்கு சிலகாலம் மருத்துவப் போராளியாக நின்றிருந்தார். அணிப் பொறுப்பாளர் தனக்கு ஏதும் தூரப் போகும் வேலை என்றால் அணியைப் பார்த்துக்கொள்ளுமாறு இவரிடம் சொல்லிவிட்டுப் போகுமளவுக்குத் திறமைசாலி. Watershed சண்டையில் காயப்பட்ட போராளிகளுக்கு முன்னணியில் வைத்து முதலுதவி செய்து கொண்டிருக்கும்போதே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

யாரும் வேலைசொல்லத் தேவையில்லை கப்டன் நிலாமதி/விஜிக்கு தானாகவே எல்லாவற்றையும் யோசித்துச் செய்வார். 1997இல் பயிற்சி எடுத்த நிலாமதி ஆரம்பத்தில் LMG உதவியாளராகவும், ஓயாத அலைகள்-2 இல் LMG இயக்குநராகவும், நடவடிக்கையின் பின் PK ஒன்றின் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். 1998 இல் அனைத்துப் படையணிகளினது கனரக ஆயுதக்காரர்களுக்கான பயிற்சியின் போதான சூட்டுப் பயிற்சியில் ஆண்-பெண் போராளிகள் எல்லோரிலும் நிலாமதிக்கே முதலிடம். ஆள்சரியான கட்டை, ஓயாத அலைகள்-2 இன் போது எதிரியின் பதுங்குகுழியில் நின்று அடிக்கவேண்டி வந்தபோது, உயரம் போதாமல், அவனின் சீனி மூடைகளில் ஒன்றை இழுத்துப் போட்டுவிட்டு, ஏறிநின்று அடித்தார். எப்போதும் நிலாமதியின் நிலையில் அவருக்கென ஒரு மண்மூடை இருக்கும். பள்ளமடுவில் அரண்களை அமைத்தபோது நிலாமதிக்குப் பாவனையில் இருந்த காட்டுவழியில் நிலை வந்துவிட்டது.

தொடரும்.....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அகிலன்

மென்சிகப்பு மேனியாய் விரிந்து சென்றது அந்த அழகிய மண்வீதி. புழுதி கிழப்பி மனிதர்களை சினமூட்டும் வாகனப் போக்குவரத்து நிறைந்த புதுக்குடியிருப்பு - பரந்தன் சாலையிலிருந்து விடுதலை பெற்றபோது, ஆரவாரமின்றி எம்மை அழைத்துச் சென்றது அந்த மண்வீதி. மனதிற்கு இதமூட்டினாலும், கோடையின் கோரவெய்யில் மேனியை அகோரமாய் சுட்டெரித்தது. சிங்கள அரச பயங்கரவாதப் பேய்கள் நரபலியெடுத்த அந்த சுதந்திரபுரக் கிராமம் இப்போதும் தாங்கி நின்ற கோரவடுக்களை அருகில் வந்த என் நண்பன் ஞாபகமூட்டியபோது அவை ஆயிரம் சூரியன்களின் வெம்மையை என்னுள் இறக்கி மனதை வெதுப்பத் தொடங்கின.

நானும் நண்பனும் அந்தக் கிராமத்தின் அந்தத்தில் மு/சுதந்திரபுரம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் அருகிருக்கும் சிறிய மண்குடிசை ஒன்றை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். 09-09-2000 அன்று யாழ். குடாவில் எதிரி தொடுத்த கொடுமையான யுத்தகளமொன்றினுள் நின்று சமராடி, எதிரியை புறமுதுகிட வைத்து, எம்மினத்தின் வீரமரபிற்கு புகழ் சேர்த்தவர்களுள் எமக்கு அறிமுகமான ஒரு மாவீரனின் இல்லம் அது.

வீரவேங்கை செங்கொடி (வேலாயுதம்பிள்ளை கேசவன்) அவனது அம்மாவும் ஆசை அக்காவும் கண்ணீருடன் எங்களை வரவேற்றபோது, இனப்பற்றும், துடிதுடிப்பும், பொறுப்புணர்வும் நிறைந்த அவர்களின் சொத்தான அந்த வீரன் என் கண்களுக்குள் நின்றான்.

கேசவனுக்கு இன்னுமிரு தம்பிமார் அருகிலிருக்கும் பாடசாலைக்குப் போய் விட்டார்கள். அவனது அப்பா தன் குடும்பப்பாரம் சுமக்க சவூதிநாட்டுப் பாலைவன வெளியில் 'நெருப்புத்திண்டு' உழைப்பதாக அம்மா சொன்னாள். 1994ஆம் ஆண்டளவில் பத்திரிகையில் வெளிவந்த, அவர்களது தூரத்து உறவினனான லெப். கேணல் அன்புவின் உருவப்படம் செவ்வரத்தம் பூக்கள் அலங்கரிக்க, அந்த மண்சுவரில் இப்போதும் பக்குவமாய் ஒட்டப்பட்டிருந்தது. அருகில் நிமிர்ந்து கம்பீரமாய் அம்மாவின் வீரமகன் வரிப்புலிச் சீருடையில் தேசத்தின் பிள்ளையாய் நின்ற படம் உயிரோட்டமாய் அவனை நினைவுபடுத்தியது. தன் மனதை வேகவைக்கும் தன் பிள்ளையின் நினைவுகளை அம்மா மீட்கத்தொடங்கினாள்.

அது இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெறியாட்ட காலம். அப்போது கேசவன் ஐந்து வயதுக் குழந்தை. வற்றாப்பளை அம்மனின் பொங்கலுக்குப் போனவன் விளையாட்டுத் துவக்குக்காய் அப்பாவிடம் அடம்பிடித்து வாங்கினான். வரும் வழியில் சோதனைக்காய் மறித்த சிப்பாய் ஒருவன் கேசவனின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்தபோது அம்மாவும், அப்பாவும் விறைத்துப்போய் நிற்க, தன் விளையாட்டுத் துவக்கை அந்தச் சிப்பாய்க்கு நேராய் நீட்டி 'நீ சுட்டா நானும் சுடுவன்' என்று அவன் சொன்னதை அம்மா இப்போது சொல்லும்போதும் நடுங்கினாள். சின்னஞ்சிறு வயதில் அவனுள் இருந்திருந்த அந்த உணர்வு எங்களுக்கு வியப்பைத் தந்தபோது, இந்திய இராணுவம் அவனின் அப்பாவையும் அயலவர்களையும் பிடித்துச்செல்லும் போதெல்லாம் தான் கேசவனையும் தூக்கிக் கொண்டு அழுதபடியே அலைந்து திரிவதாய் அம்மா சொன்னாள்.

சிறுவயதுமுதலே அவன் கண்ட அவலங்கள், அர்ப்பணிப்புக்கள் எல்லாம் அவனை பொறுப்புணர்வுள்ள மனிதனாய் மாற்றியது. அதன் விளைவு படிப்பு, விளையாட்டு, பொது நிகழ்வுகள் எல்லாவற்றிலுமே அவனை முதன்மையடைய வைத்தது. அவன் எல்லாத் துறைகளிலும் பெற்றுக்கொண்ட தொகையான சான்றிதழ்களை அம்மா பத்திரமாய் வைத்திருந்தாள்.

கேசவன் குட்டிப் பொடியனாய், அரைக்காற்சட்டையுடன் தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத மேடையில் ஏறி அழுதழுது கவிதை வாசித்ததையும், அவனது உருக்கமான வரிகளுக்கு அனைவரும் வசப்பட்டு நின்றதையும் அனுபவித்தவர்களே சொன்னபோது, அவனுள் இருந்த உணர்வுப் பூகம்பத்தை புரிந்துகொள்ளமுடிந்தது. இறுதியாய் பொறுமையிழந்து தானும் போராட வேண்டுமென இயக்கத்திற்குப் போவதற்காக கேசவன் எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பதை அம்மா கண்ணீர்ததும்ப பெருமையுடன் நினைவுகூர்ந்தாள்.

1998இல் கேசவன் தன் நாட்டிற்காக முதன்முதலில் வீடுவிட்டுப் புறப்பட்டான். ஆனாலும், அவனுக்கு அதற்கான வயது வந்திருக்கவில்லை. அவன் இயக்கத்தால் வீட்டிற்கே திருப்பிவிடப்பட்டான். பொய்யாக வயதை சொல்லியாவது தான் ஒரு போராளியாக மாறிவிட வேண்டுமென்ற தவிப்போடு இருந்தவன், தன்னை இனங்காணாதபடியிருக்க இயக்கத்தில் வெவ்வேறு முகாம்களுக்குப் போய் தன்னை இணைத்துக்கொண்டான். இப்படி மூன்று தடவைகள் அவன் தன் உறவுகளைப் பிரிந்து போராட்டத்திற்காய் போனானாம். ஆனால் அவனை திரும்பவும் திரும்பவும் வீட்டிற்கே அனுப்பிவைத்தது இயக்கம். கேசவன் நான்காவது தடவையாக இயக்கத்திற்கு வந்தபோது, அவன் வயதுத் தகுதிபெற இன்னமும் ஒரு மாதம் கழிய வேண்டியிருந்தது. அப்போது தன்னையும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேதனைகளை வெல்லும் பெருமையும் தந்து...

பயிற்சி முகாமிற்கு ஏத்தும்படி அடம்பிடித்தவனிடம் 'வேணுமெண்டால் இயக்கத்தில் இருந்து ஒருவருடத்திற்குப் படிபிறகு எடுக்கலாம்' என பகிடியாகச் சொன்னபோது, 'படிக்கிறதுக்கு நான் படிப்பை விட்டிட்டு இயக்கத்திற்கு வரேல்லை' என்றுவிட்டு அவன் அழுதழுது வீடுதிரும்பியது என் நினைவிற்கு வந்தது.

கடைசியாய் வீட்டிற்கு வந்தவன் அம்மாவிடம் சொன்னானாம், 'அம்மா எனக்கு போராட வயது காணாதாம், இன்னும் ஒரு மாதம் போனாத்தான் என்னையும் எடுப்பினம். எனக்கு நல்ல சத்தான சாப்பாடு சமைச்சுத்தா அம்மா' தன் மகன் விட்டுச்சென்ற அந்த வேதனை நினைவை செரிக்கமுடியாதவளாய் அம்மா அழுதாள். 'நான் பகிடிக்குச் சொல்லுறான் எண்டு நினைச்சன் தம்பி, அவன் எந்தவித மாற்றமும் இல்லாமல் வழமைபோலவே ஆர்வமா படிச்சான், விளையாட்டு, நிகழ்ச்சிகள் எண்டு ஓடியாடித்திரிஞ்சான். அதாலதான் அவன் சொன்னதில அக்கறைப்படேல்ல. ஆனா, அவன் சொன்ன மாதிரியே தன்ர அடுத்த பிறந்தநாளை ஒரு மாதத்தால முடிச்சுக் கொண்டு போட்டான்' அம்மாவின் கண்கள் கண்ணீர் சொரிந்தன. தேசம் காக்கும் கடினமான யுத்தகளமொன்றிலிருந்து 'அம்மா வீட்டிலிருக்கும்போது நாலு கோப்பை சாப்பிடுவன். இப்போது ஒரு கோப்பையே சாப்பிடப் பசிக்காது' என்று அவன் பின்னர் எழுதிய கடித வரிகள்தான் அம்மாவின் நினைவில்நின்று வேதனையைக் கிழறியபடியே இருந்தன.

தன் வீரமகனின் நினைவுகளால் வேதனைப்படும் வேளைகளிலெல்லாம் தனக்கு ஆறுதலளிக்கும் தன் மகனின் சொத்தொன்றை பெருமையாய் வைத்திருந்தாள் அம்மா. களத்திலிருந்து தன் வீரமகன் எழுதிய அந்தக் கடிதத் தாள்களை பொலித்தீன் பைகளை விலக்கிப் பத்திரமாய் எடுத்து நீட்டினாள். அம்மாவிற்கு ஆறுதளிக்கும் அந்த மகனின் வரிகளைப் படிக்கத் தொடங்கினேன்.

'அம்மா! இப்போது நானிருக்கும் இடம் சாவகச்சேரி. கல்வயல் முன்காவலரணிலிருந்து இக்கடிதம் எழுதுவதற்கு சில நாட்கள் முன்புதான் இராணுவம் எமது நிலைகள் ஊடாக முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொண்டது. என்னோடு பயிற்சி எடுத்த பல போராளிகள் வீரச்சாவு. அன்று அதிகாலை 5 மணிக்கு பல்குழல் பீரங்கிகளின் செல்வீச்சை ஆரம்பித்தவன் ஏழுமணிக்கெல்லாம் 'பவள்', 'ராங்'குகளுடன் முன்னேறி வந்தான். எதிரியின் செல்வீச்சிலே என் பொயின்ரில் வோக்கியோடு எமக்குப் பொறுப்பாக நின்றவர் காயப்பட்டுப்போய்விட்டார். நானும் என்னோடு இன்னுமொரு போராளியும், எல்லைப்படை ஐயா ஒருவரும்தான் அவன் முன்னேறி வந்தபோது நின்றோம்.


எமக்கு 15 மீற்றரில் 'பவள்' போகும்போது, நானும் அந்த ஐயாவும் எமது ரவை முடியும்வரை அசையாது நின்று போரிட்டோம். முடிந்தவுடன் அப்பொயின்ரை விட்டு வெளியேறி, பக்கத்துப் பொயினிற்குச் சென்றோம். அவர்களும் வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் அடுத்த பொயின்ரிற்குச் சென்று அங்கிருந்த பொறுப்பாளருடன் சேர்ந்து தாக்குதலை ஆரம்பித்தோம். அங்குவந்து சேர்ந்த ஐந்து நிமிடங்களில் நாங்கள் வெளியேறிய பொயின்ருகளுக்கு இராணுவம் வந்துவிட்டான். எம்மோடு நின்ற பலர் காயப்பட்டுவிட்டனர். சிலர் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சைசெய்தனர். வேறுசிலர் காயங்களுடனும் போரிட்டனர்.

முன்னேறும்படி உத்தரவு வந்தபோது, நானும் வேறு சிலரும் ஒரு அண்ணனுடன் சேர்ந்து தாக்கினோம். அந்த அண்ணனும் காயப்பட்டிருந்தார். அந்தப் பொறுப்பாளர் வோக்கியில் அறிவிக்க எமது செல்கள் வந்துவிழ வந்த எதிரிகளலெல்லாம் ஓடிற்றாங்கள். பின் இழந்த பொயின்ரைப் பிடிக்க ஆட்கள் இல்லை. பலர் வீரச்சாவடைந்தும், காயமடைந்தும் இருந்தனர். நானும் சில போராளிகளும் காயமேற்படாத நிலையில், சண்டை முடிய பொறுப்பாளரும் வேறுபலரும் திறமையாகச் சண்டைபிடித்தாயென்று என்னைப் பாராட்டினர். அம்மா என்னை எண்ணிக் கவலைப்பட வேண்டாம்'

எனது கண்கள் கடிதத்தின் ஒவ்வொரு வரிகளையும் கடந்து சென்றபோது, அம்மாவின் கண்கள் என் முகத்தில் எதையோ தேடியபடி இருந்தன. அம்மாவின் மனது பெருமையால் நிமிர்வதாய் உணர்ந்தேன். மீண்டும் அதே களத்தில் மூண்ட மற்றுமொரு பெருஞ்சமரில் தன் வீரமகன் வீழ்ந்தபோது, எப்படியெல்லாம் போரிட்டிருப்பான் என்று அறியும் அவாவுதலுடன் இருந்தாள். தன்னிடம் வரும் போராளிகளிடமெல்லாம் அம்மா அதையேதான் கேட்பாளாம். தன் வேதனைகளை வெல்லும் பெருமையையும் கூடவே தன் மகன் தன்னுள் விட்டுச் சென்றதாய் அம்மா உணர்கிறாள். தன் புதல்வனின் நினைவுகளால் துன்புறும்போதெல்லாம் அந்தக் கடிதத்தையே அம்மா திரும்பத்திரும்பப் படிப்பாளாம்.



www.tamilarangam.net



# குழந்தைப் பருவத்தைப் ப

யுத்தம் இந்த உலகிற்குப் புதியதல்ல. தமது இருப்பை நிலைப்படுத்திக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட இனக்குழுப்போர்கள், மதப்போர்கள், சாம்ராஜ்ய விஸ்தரிப்புப் போர்கள் என்று போரும் வாழ்வுமாகவே மனித சமூகம் இத்தனை நூற்றாண்டுகளைக் கடந்திருக்கின்றது. ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்கவும், கம்யூனிசத்தை ஒடுக்கவும், அதிகார சமனிலையைத் தக்கவைக்கவும் என கடந்த நூற்றாண்டின் அரைப்பாதியில் இரு உலகப் போர்களை இந்த உலகம் சந்தித்தபோது, இடம்பெற்ற எண்ணற்ற மனித அழிவுகளில் (முக்கியமாக யூத இன அழிப்பு, ஹிரோசீமா குண்டுவீச்சு) குழந்தைகள் பற்றி எவருமே கருத்தில் கொள்ளவில்லை. அதேசமயம், அடக்குமுறைக்குட்பட்டு தமது உரிமைகளை மீட்டெடுக்கவென கடந்த நூற்றாண்டின் மறு அரைப்பாதியில் தொடங்கி, இன்றுவரை தொடரும் விடுதலைப் போராட்டங்களில் மட்டும் சிறுவர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக, சிறுவர் உரிமைகள் தொடர்பாக, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக திட்டங்கள், சாசனங்கள், புள்ளிவிபரங்கள் என்று 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கும் சர்வதேச சமூகத்தின் கருத்துக்களை செவிமடுக்கும் அதேசமயம், யுத்தம் இன்றியே முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கால் அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களினால், வெகுசனத்தொடர்புச் சாதனங்களின் தவறான பயன்பாட்டினால் அதிகரித்துச் செல்லும் மனித வக்கிரங்களினால் சிறுவர் உலகம் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படுகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

மனித வாழ்வில் மிக முக்கியமான பருவமாகக் கருதப்படுவது குழந்தைப்பருவம். 'இன்றைய குழந்தை நாளைய மனிதனின் தந்தை, தாய்' என்ற கூற்றுக்கமைய ஒரு மனிதனின் குணவியல்புகள் அவன் குழந்தைப் பருவத்தில் எதிர்கொள்ளும் வாழ்க்கை முறையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. நாளைய சமூகத்தை வழிநடத்தும் வழிகாட்டிகளாக, நாளைய உலகைத் தாங்கும் தூண்களாக, நாளைய அறிவியல் தொழில்நுட்ப உலகின் சிருஷ்டி கர்த்தாக்களாகக் கருதப்படுபவர்கள் குழந்தைகள். அதேசமயம் மனிதநேய அமைப்புக்களால் போர்க்கால உலகின் 'சமாதான வலயங்களாக' (Peace of Zone) கணிக்கப்படுபவர்கள். உலக மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு பங்குக்கும் அதிகமான அளவை பிரதிநிதித்துவப்படுத்தும் இவர்கள்தான் உலகில் இடம்பெறும் வன்முறை வடிவங்கள் அனைத்தையும் மிக அதிகளவிலும், மோசமாகவும் சுமப்பவர்கள்.

குழந்தையின் தன்மையும், முதிர்ச்சியடைந்த ஒரு மனிதனின் இயல்பும் வேறுபட்டவை என்ற சிந்தனை அறவே எழாத 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து விடுபட்டு, குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்க்கப்பட வேண்டியவர்கள் என்ற சிந்தனைத் துடிப்பு தோற்றம் பெற்ற மத, இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்தை மெல்லக் கடந்து, குழந்தையின் மூளை வளர்ச்சி, உளவியல் தாக்கம், குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பு, குழந்தைக்கும் சக குழந்தைகளுக்குமிடையிலான தொடர்பு, குழந்தையின் நடத்தை மாற்றம், அதற்கான சமூக சூழல் பற்றிய அதிகளவிலான கேள்விகளும் ஆய்வுகளும் அக்கறைகளுமாக ஒரு நூற்றாண்டைச் செலவழித்து, சிறுவர் உரிமைகளும், நலன் பேணும் திட்டங்களும் வெறும் உபதேசமாகப் போய்விடுமோ என்ற வினா எழும்பும் நிலையில், 21ஆம் நூற்றாண்டில் காலடி வைத்திருக்கின்றது மனிதசமூகம். 15 வயதிலேயே குழந்தைக்குத் தாயாகும் சிறுமியரையும், குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பொறுப்புள்ள சிறுவர்களையும் தம்முன்னே காணும் சிறுவர் நலனில் அக்கறை கொண்டவர்களுக்கு, 18 வயதுக்குட்பட்டவர்கள் அனைவருமே 'குழந்தைகள்' என கணிக்கப்பட வேண்டியவர்கள் என்ற ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகடனம் அதிர்ச்சியூட்டும் ஒரு செய்தியாகவே கருதப்படுகின்றது.

தாயின் கருவிலிருந்தே குழந்தைகள் மீதான வன்முறையின் தாக்கம் தொடங்குகின்றதெனினும், விடயத்தின் விரிவு கருதி வளரிளம் பருவத்தினர் மீது அதிகூடிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வன்முறை வடிவங்கள் பற்றிய உலகளாவிய ஒரு பார்வை இங்கு கருத்திற்கொள்ளப்படுகின்றது.

உலகின் சனத்தொகை 600 கோடி என மதிப்பிட்டால் 5 பேருக்கு ஒருவர் வளரிளம் பருவத்தினர் ஆவர். குடும்பத் தலைவர்களாக, சகோதரர்களாக, பெற்றோராக, சமூக உறுப்பினராக என்று பலதரப்பட்ட பங்களிப்பை இவர்கள் வகிப்பதன் காரணமாக அடுத்துவரும் சந்ததியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். ஒரு சமூகத்தில் பயன்படுத்தப்படாத வளம் மட்டுமன்றி, கவனிப்பாரற்ற வளமாக இருப்பதும் இவர்கள்தான்.

## பிஞ்சு மனங்களில் நஞ்சு விதைகள்

குழந்தைத்தனமும், குதூகலப் போக்கும் நிறைந்தவர்கள் கொலைக்குற்றம் புரியும் வன்முறையாளர்களாக மாற முடியுமா? ஆம்! முடியும் என்கின்றது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் அண்மைக்காலமாக பெருகிவரும் சிறுவரால், சிறுவர் மீது மேற்கொள்ளப்படும் கொலைக்குற்றங்கள். இரு வருடங்களுக்கு முன்னர், தன்னுடன் ஊர் சுற்றுவதற்கு வரமறுத்த சிறுமியை பழிவாங்குமுகமாக ஒரு ஆசிரியை உட்பட சிறுமிகளை இராணுவ சுரிகுழல் துப்பாக்கியால் பாடசாலைக்குள் வைத்துச் சுட்டுக்கொன்ற 11, 13 வயதுடைய இரு அமெரிக்கச் சிறுவர்கள், 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்லிக் கொண்டே தன்னிடமிருந்த பிஸ்டலினால் 6 வயது சிறுமியைச் சுட்டுக்கொலை செய்த அதே வயதுடைய அமெரிக்க முன்பள்ளிச் சிறுவன், The basketball diaries என்ற ஆங்கிலப்படத்தின் கதாநாயகன் செய்வது போன்றே தனது வகுப்புத் தோழர்களில் 8 பேரைச் சுட்ட இன்னோர் 14 வயது அமெரிக்கச் சிறுவன், வன்முறையாளராக மாறிக் கொண்டிருக்கும் அமெரிக்கக் குழந்தைகளுக்கான ஒருசில எடுத்துக்காட்டுக்கள் இவர்கள். குற்றவாளிகளில் ஒருவரான கோல்டன் என்ற 11வயதுச் சிறுவன், 6 வயதாய் இருக்கும்போதே துப்பாக்கியின் சுடுகுழலுக்கூடாக பார்ப்பதுபோன்று, நியூயோர்க்கில் 'டெயிலி நியூசில்' வெளியிடப்பட்ட புகைப்படமே அமெரிக்க மண்ணில் துப்பாக்கிக் கலாச்சாரம் எவ்வளவு வேகமாக வளர்ந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. 11 வயது சிறுவன் ஒருவன் 100 யார் தூரத்தில் இராணுவ சுரிகுழல் துப்பாக்கியால் 2 டசின் ரவைகளைக்கொண்டு ஒரு நிமிடத்தில் 15 பேரை இலாவகமாகத் தாக்கி 5 பேரை உயிரிழக்கச் செய்வதென்பது சுடுதிறனின் அசாதாரண திறனையே வெளிப்படுத்துகின்றது என்பது எமக்குத் தெரிந்தாலும், வேட்டையில் தேர்ச்சிபெற்ற அமெரிக்கர்களுக்கு அது ஒரு சாதாரண விடயம் என 'நியூஸ்வீக்' சஞ்சிகையின் சிறப்பு அறிக்கை கூறுகின்றது. இதிலிருந்து ஒருவிடயம் தெளிவாகின்றது. துப்பாக்கியைக் கையாளுவதில் குழந்தைக்குக் கொடுக்கப்படும் பயிற்சி மனித உயிரையே இலக்குவைக்கும் அளவுக்கு மாறியிருப்பதானது, உலகச் சிறுவர்களின் நலன் பேணுகிறோம் என்று பக்கத்துவீட்டுக்குள் மூக்கை நுழைத்து அடுத்தவன் விவகாரத்தில் கவனம் செலுத்துவதைவிட, தனது தேசிய எல்லைக்குள் வன்முறையாளர்களாக மாறும் குழந்தைகளின் நடத்தைக் கோலங்களை மாற்றியமைப்பதற்கான வழிவகைகளில் விரைந்து இறங்க வேண்டிய அவசியத்தைக் கோடிகாட்டி நிற்கின்றது. அமெரிக்காவில் வருடாவருடம் 20 இலட்சம் இளங்குற்றவாளிகள் வரை கைது செய்யப்படுவதும், இவ்விடயத்தில் அமெரிக்கா எடுக்கவேண்டிய தீவிர அக்கறையை வலியுறுத்துகின்றது.

தொலைக்காட்சிப் படங்கள், விளையாட்டுக்கள், கேலிச்சித்திரங்கள் போன்றவற்றில்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திப்பது யுத்தம் மட்டுமா?

■ அர்த்தநாரீ ■

இடம்பெறும் வன்முறைக்காட்சிகளைப் பார்த்ததும் ‘உலகமே இப்படித்தான். இதையேதான் ஒவ்வொருவரும் செய்கின்றனர். எனவே தாமும் செய்யலாம்’ என்ற தோற்றப்பாட்டை சிறுவர்கள் பெறுவதும் வன்முறை இங்கு அதிகரிக்க ஒரு காரணம் எனப்படுகின்றது. இதைவிட பாரிய விடயம் அமெரிக்க மக்களின் துப்பாக்கிப் பாவனைதான். கிட்டத்தட்ட 20 கோடி துப்பாக்கிகள் அமெரிக்க மக்களின் பாவனையில் இருப்பதுடன் இவற்றில் பாதிக்குமேல் சிறுவர்களின் கைக்கெட்டும் தூரத்தில், பாதுகாப்பாக பூட்டி வைக்கப்படாமல், ரவையேற்றப்பட்ட நிலையில் இருக்கின்றது. அத்துடன், ‘சுடுதல் அல்லது வேட்டையாடுதல் என்பது மீன்பிடித்தல் போல் ஒரு விளையாட்டுத்தான்’ என்று சிறுவர் படுகொலை தொடர்பாக மாநில மேயர் ஒருவர் கருத்துக் கூறுவதிலிருந்து ஒன்றை உணரமுடிகின்றது. மிருக வேட்டையைப் பொழுதுபோக்காகக்கொண்ட அமெரிக்கக் கணவன் மனைவியரோ அல்லது தந்தை பிள்ளைகளோ மனித வேட்டையை பொழுது போக்காகக் கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பதைத்தான் அண்மைக்காலப் படுகொலைகள் உலகிற்கு உணர்த்துகின்றன.

ஐரோப்பிய நாடுகள்கூட வன்முறைக்காக கைதுசெய்யப்படும் இளங்குற்றவாளிகளை அதிகமாகக் கொண்டிருக்கின்றன. இங்கு 1980களைவிட 90களில் இளம்பிள்ளைகளின் வன்முறைக் குற்றங்கள் 50 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது. ஸ்பெயினில் வங்கிக் கொள்ளைகள், கடை உடைப்புக்களில் ஈடுபடும் இளம் சிறுவர்களில் 90 வீதமானோர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்கள். இத்தாலியில் இளங்குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம் அதிகரித்துவரும் வேலையின்மையாகும்.

### கொடிகளே கொழுகொம்பாகும் அவலம்

செழிப்பும், பொருளாதார வளர்ச்சியும், குழந்தை வளர்ப்பு தொடர்பான அதீத கவனமும் ஏற்படுத்தும் அதிக வாய்ப்பு வசதிகளின் காரணமாக போதைப்பொருட் பாவனை, குடி, கொலை, கொள்ளை, சிறுவர் விபச்சாரம் போன்ற வன்முறைக் குற்றங்களில் பணக்கார நாட்டுச் சிறுவர்கள் அகப்பட்டு சீரழிந்து கொண்டிருக்கும் போக்கு ஒருபுறமிருக்க, இதற்கு நேர்மாறாக வசதி வாய்ப்புகள் எதுவுமின்றி வறுமை, பசி, பட்டினி, போசாக்கின்மை, கல்வி அறிவின்மை என்பவற்றின் காரணமாக குழந்தையிலேயே குடும்பப்பாரத்தைச் சுமக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஏழை நாடுகளில் வாழும் சிறுவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

பெற்றோரின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டு, பள்ளிப்பருவத்தின் அனைத்து சந்தோசங்களையும் அனுபவிக்க வேண்டியவர்கள், அவை மறுக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளராக மாறியிருப்பது வறுமை இவர்களுக்கு அளித்திருக்கும் பரிசு. உலகத்தொழிலாளர் தாபனத்தின் தரவின்படி, வளர்முக நாடுகளில் 5-14 வயதுக்குட்பட்ட 25 கோடி சிறுவர்கள் வேலை பார்ப்பதாகவும் இவர்களில் 5-6 கோடியினர் அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது. தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டும் 2-4 கோடி சிறுவர்கள் தொழிற்சாலைகள், பெருந்தோட்டத் தொழில்கள், கைத்தறி ஆலைகள், கல் உடைத்தல், பீடிசுற்றுதல், காற்பந்து தைத்தல், கம்பளம் பின்னுதல், பட்டாசுகளுக்கு வெடிமருந்திடல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

20ஆம் நூற்றாண்டின் ஆற்றல் மிகுந்த பொருளாதாரத் தோற்றப்பாடாக கருதப்படும் உலகமயமாக்கம் (Globalization) நாடுகளின் எல்லைகளை ஊடறுத்து பரவியுள்ளமையானது, ஏழை பணக்கார நாடுகளுக்கு மட்டுமன்றி, ஏழை பணக்காரனுக்கிடையிலுமான இடைவெளியை மேலும் அதிகரித்திருப்பதானது குடும்பப்பாரத்தினால் குழந்தை முதுகுகளும் கூனல் முதுகுகளாகும் அவலத்திற்குக் காரணமாயுள்ளது.


உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் பல ஆபிரிக்க, தென் கிழக்காசிய சிறுவர் சிறுமிகளின் தலையில் குடும்பப் பாரத்தை சுமத்தியிருக்கின்றது. 13 மில்லியன் சிறுவர்கள் ஆபிரிக்க நாடுகளில் எயிட்சினால் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். இறந்து கொண்டிருக்கும் பெற்றோரைப் பராமரிக்கும் பொருட்டு ஒரு கோடி சிறுவர்கள் பாடசாலையைவிட்டு விலகியிருக்கின்றனர்.

### இயங்கும் சுரண்டல்

வளர்முக நாடுகளில் சிறுவர் உழைப்பைப் பயன்படுத்தி வளரும் துறைகள் பெரும்பாலும் குடிசைக் கைத்தொழில்களாக, இருப்பதனால் குழந்தைத் தொழிலுக்கெதிராக நடவடிக்கையை மேற்கொள்ளுதல் சிரமமானதாய் உள்ளது. குழந்தைத் தொழிலாளரை அதிகம் கொண்ட நாடு இந்தியா. மிக இளம் பருவத்திலேயே குடும்ப உழைப்பில் குழந்தைகள் இணைந்து கொள்வது இங்கு பண்பு. கம்பளம் பின்னும் தொழிலில் கிட்டத்தட்ட 3 இலட்சம் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். இவற்றில் பெரும்பாலானோர் பெற்றோர் வாங்கிய கடனை அடைக்கும் பொருட்டு அடிமைகளாக விற்கப்படுகின்றனர். கடன் பெறுதல், முற்பணம் பெறும்பொருட்டு கட்டாய தொழிலில் ஈடுபடுதல், ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈடுபடுதல், சாதாரண கூலியிலோ அல்லது கூலியின்றியோ தொழிலில் ஈடுபடுத்தல். வெளியே செல்லும் சுதந்திரம் மறுக்கப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தல் என்று இந்த அடிமை நிலை பலதரப்படும். இருவருடங்களுக்கு முன்னர் தமிழ்நாடு வேலூர் மாவட்டத்தில் 18 சிறுவர் உட்பட 1974 நபர்கள் இத்தகைய அடிமைநிலையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது, இந்த அடிமை நிலை தொடர்பான உண்மை விபரங்கள் வெளிக்கொணரப்பட்டதென புரொன்ட்லைன் சஞ்சிகையின் கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது.

தகப்பன் வாங்கிய 1500 ரூபா கடனை திருப்பிச்செலுத்துவதற்கு ஒரு சிறுவனோ, சிறுமியோ ஒருநாளுக்கு 1500 பீடி சுற்ற வேண்டுமெனவும், இதற்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்தளவு சட்டரீதியான கூலி 30 ரூபா 90 சதமாக இருக்க, 9 ரூபா மட்டுமே கொடுக்கப்படுவதாகவும் தெரியவந்தது.

தொடரும் ...






தமிழ் தேசிய ஆவணச் சுவடகம்

www.tamilarangam.net

# வெற்றிக்குப் பின்னால் தெரிகின்ற உண்மைகள்

## எது? எதனால்? எப்படி?

தோல்வியடையும் எந்த ஒரு நாட்டுக்கும் உலக நாடுகள் சார்பாக நிற்காது, தனக்கு இலாபம் இல்லாதுவிட்டால் எந்த நாடும் எத்தகைய விடுதலைப் போராட்டங்களையும் ஆதரிக்காது. உலகத்தின் வரலாற்று நடைமுறை இதுவாகத்தான் இருக்கின்றது.

புதிய உலக ஒழுங்கை வல்லாண்மை நாடுகளின் உற்பத்தி நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. வல்லாண்மை நாடுகளின் பௌதீக ஆக்கிரமிப்புக்கள் யாவும் முடிவுக்கு வந்தபின் உலக ஒழுங்கு மாறிவிட்டது. தங்களுடைய கருத்தினை ஏனைய சிறு நாடுகள் மீது திணிப்பது அடுத்த கட்டம். அவர்களின் கருத்தே சிறிய நாடுகளின் கருத்தாகவும் இருக்கவேண்டும் என்பதே இதன் அடிப்படை. இந்த கருத்தாக்கிரமிப்பின் ஒருவகைதான் கலைக் கோட்பாடுகளை பரப்புதலும், இவை சிறிய நாடுகளின் சுயகலை வடிவங்களைத் திசைதிருப்பும்.

இன்று, வல்லாண்மை நாடுகளின் உற்பத்தி நிறுவனங்கள், தமது சந்தையாக சிறிய நாடுகளைப் பயன்படுத்துகின்றன. இது புதிய ஆக்கிரமிப்பு வடிவம். கலைக்கோட்பாடும் இந்த ஆக்கிரமிப்பினுள் அடங்குகின்றது. 'பின் நவீனத்துவம்' என்ற கலைக்கோட்பாடு புதிதாக இவ்வாறுதான் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு பல்தேசிய நிறுவன முதலாளியின் பணிப்பின் பேரில் உருவாக்கப்பட்டது. இந்தக் கோட்பாடு உருவான மேற்குலகில் இன்று இறந்துவிட்டது. ஆனால் சிறிய நாடுகளில் இது பெரும் சர்ச்சைக்குரியதாகிவிட்டது. இதுதான் ஆக்கிரமிப்பாளரின் நோக்கம். பின் நவீனத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு, சிறு இனங்களின் தனித்துவச் சிந்தனை, தேசியங்களையும் மீறி பொதுச் சிந்தனையை உருவாக்குவது என்ற போர்வையிலான ஆக்கிரமிப்பு இது. இன்று உலகின் புதிய ஒழுங்கின்படி தனது சந்தைக்கு இடமளிக்கும் நாடுகளையே வல்லாண்மை நாடுகள் ஆதரிக்கின்றன. இந்த நாடுகளின் உற்பத்தி நிறுவனங்களின் சந்தைப்போக்கு எதுவித இழப்பும், சேதமுமில்லாது ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதே அவற்றின் நோக்கு.



சிறீலங்காவிலும் இந்த நிறுவனங்கள் பெருமளவில் வேரூன்றியுள்ளன. இந்த நிறுவனங்களின் இலாபமான செயற்பாட்டிற்கு அமைதி நிலவவேண்டும். 3ஆம் ஈழப்போரில் யாழ்ப்பாணத்தை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்தபோது, அமைதியை போர்மூலம் கொண்டுவருவதாக அரசு நம்பிக்கையளித்தது. இதன்மீது நம்பிக்கை வைத்து மேற்படி நிறுவனங்களின் நாடுகள் போருக்கான நிதி உதவியை வழங்கினர். இதனடிப்படையில் சத்ஜய, ஜெயசிக்குறு, எடிபல, ரணகோச, றிவிபல, வோட்டர்செட் என படைநடவடிக்கைகளில் நீண்ட வன்னியின் பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டன. சிறீலங்கா அரசு போர்மூலம் அமைதியைக் கொண்டுவந்து (அவர்களின் கருத்துப்படி புலிகளை ஒழித்தால் அமைதி வந்துவிடும்) தமது நிறுவனங்கள் இலாபங்களுடன் இயங்கும் சூழலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை அந்த நாடுகளிடம் வளர்ந்தது. வெளிநாட்டு நிறுவனங்களில் ஒன்றான 'மோட்டரோலா' தனது தொலைபேசி நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்து இலாபமீட்டி வருகின்றமையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இத்தகைய சூழலில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் திட்டமிடலில் அவரின் நேரடி நெறிப்படுத்தலில் ஆரம்பமான ஓயாத அலைகள்- 3 நடவடிக்கை, வடபகுதியில் பெருமளவிலான இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்டுள்ளது. யாழ். குடா படையினரின் ஆனையிறவு நுழைவாயில் பெருந்தளம் உட்பட்ட





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எது? எதனால்? எப்படி?

தி. தவபாலன்



யாழ்ப்பாணப் பகுதிகள் மற்றும் வன்னியின் பெரும் பகுதிகள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. இதனால் சிறீலங்கா அரசு படுதோல்வியைச் சந்தித்துள்ளது. மீளமுடியாத பொறியில் இராணுவம் சிக்கியுள்ளது. விடுதலைப் புலிகள் இராணுவ மேலாண்மையை பெற்றுள்ள சூழலில் தமிழீழத்தின் வெற்றி இலக்குகள் நெருங்குகின்றன. இந்தச் சூழலில் சிறீலங்கா அரசு இராணுவம் மூலம் அமைதியைக்கொண்டு வருவதாக வல்லாண்மை நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் யாவும் பொய்த்துவிட்டன. அந்த நாடுகள் சிறீலங்காவின் வாக்குறுதிகளை நம்பவும் தயாராகவில்லை. இந்தச் சூழலில் சிறீலங்கா மற்றும் தமிழீழம் தொடர்பாக புதிய ஒழுங்கை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு அந்த நாடுகள் தள்ளப்பட்டுள்ளன.

வியட்நாமில்-தியன்-பியன்பூ தளத்தை பிரான்ஸ் இழந்தபோது அதன் தோல்வி உறுதிசெய்யப்பட்டுவிட்டது. அப்போது பிரான்ஸ் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் உதவிகோரியது. ஆனால் அவை உதவவில்லை.

அதேபோன்ற நிலையில்தான் தற்போது சிறீலங்காவும் உள்ளது. வல்லாண்மை நாடுகள் சிறீலங்கா தமக்குச் சாதகமானதாக இருந்தும்கூட அதன் இராணுவத் தோல்வி காரணமாக அதன் மீதான நம்பிக்கையை இழந்துவிடுகின்றன. தோல்வியைத்தழுவும் நாட்டுக்கு எந்தநாடும் துணை நிற்கப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை ஒழிக்கலாம் என்ற திட்டத்தில் தனது பெரும் படைப்பலத்தை சிறீலங்கா அரசு செலவிட்டது. நாட்டின் பெரும் பொருளாதாரமும் போரிற்கு இறைக்கப்பட்டது. 1995 முதல் சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகள் உச்சக்கட்டத்திலேயே இருந்துவந்தன. 1999 செப்டெம்பர் வரை உச்சக்கட்டத்தில் இருந்த படை நடவடிக்கைக்காக சிறீலங்கா தேசத்தின் பெரும் பொருளாதாரவளம் செலவிடப்பட்டது. சிறீலங்காவின் போரிடும் வலுக்கொண்ட முழுமையான இராணுவ வளமும், தமிழர் நில ஆக்கிரமிப்பில் பயன்படுத்தப்பட்டன. ஓயாத அலைகள்- 3 நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவத்தின் போரிடும் வலுக்கொண்ட படைகளின் வலிமையைச்





சிதறடித்துள்ளனர். இழக்கப்பட்ட தளங்களையும் மீட்டுள்ளனர். ஆட்லெறிகள் உட்பட பலநூறு கோடிகள் ரூபா பெறுமதியான போராயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். மீள உயிர்பெறக் கடினமான சூழலில் இராணுவம் உள்ளது. தமது பொருளாதார இலாபங்களுக்காக உலகின் பல நாடுகள் சிறீலங்காவுக்கு ஆயுத தளபாடங்களை வழங்கினாலும்கூட, மனவுறுதி சிதைந்த படைகள் புதிய ஆயுத தளபாடங்களால் வெற்றிகளை ஈட்டலாம் என்பது கடினமான காரியமாகிவிட்டுள்ளது.

இந்தச் சூழலில் உலக நாடுகள் சிறீலங்காவுக்கு வழங்கும் ஆதரவு குறித்து மறுபரிசீலனைகளை செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு விடுதலைப் புலிகளின் உயர்ந்த மேலாண்மையே காரணமாக அமைந்துள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மரக்கறி க்கூடையை தலையில் சுமந்தபடி சின்னாச்சி ஓட்டமும் நடையுமாய் தன் வீட்டை நோக்கிவேகமாய் போய்க்கொண் டிருந்தாள். அவளின் நடையின் வேகத் தைவிட அவளின் மன வேகம் பல மடங்கு அதிகமாக இருந்தது... அவளின் சிந்தனை யாவும் அக்கிராமத்தின் எல்லைப்புறத்தில் இருந்த பழைய காளிகோவிலின் வடக்கு வீதியில் உள்ள முதலியாரின் பழைய வீட்டையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது. அவள் மனதில் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி, ஓர் உத்வேகம் 'வேளைக்குப் போய் இந்த மரக்கறியையும் வீட்டிலை நிக்கிற கோழிச்சாவலையும் பிடிச்சு நல்ல கறி சமைச்சு வடிவாய்க் கொடுக்கவேணும்.... பாவங்கள் எத்தனை நாள் சாப்பிட்டுச் சுதுகளோ' என்று நூறு தடவை சொல்லிக் கொண்டது அந்தத் தாயுள்ளம்.

ஆனால், சின்னாச்சியோ கணவனோ... பிள்ளைகுட்டிகளோ... இல்லாத தனிக்கட்டை.

வேகமாக நடந்த சின்னாச்சியின் மூளையில் ஓர் பொறி தட்டியது... வாடிக்கையாக மரக்கறி கொடுக்கும் போஸ்மாஸ்ரர் கந்தசாமி ஐயா வீட்டுக்கு மரக்கறி கொடுக்க வேணுமே... என்று சிந்தித்தவாறு கந்தசாமி ஐயா வீட்டை நோக்கி நகர்ந்தாள் சின்னாச்சி...

'இஞ்சருங்கோப்பா இன்னும் சின்னாச்சியைக் காணலை ஒருக்காப் போய் சந்தைக்கை பார்த்துக் கொண்டு வாங்கோவன்' என்று செல்லமாக கட்டளை இட்டாள் கந்தசாமி ஐயாவின்ரை மனைவி பூரணம்.

'இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை விடிய மரக்கறி வியாபாரம் சூடுபோல, அதுதான் சின்னாச்சி பிந்துதுபோல கிடக்கு' என்று தட்டிக்கழித்துவிட்டு அன்றைய பத்திரிகையை விரித்தார் கந்தசாமி ஐயா...

மேலோட்டமாக பத்திரிகைத் தலைப்பைப் பார்வையிட்ட கந்தசாமி யருக்கு முன்பக்கத்தின் இடையில் கட்டம்கட்டி போடப்பட்ட செய்தியில் கண்குத்தி நின்று படிக்கத் தொடங்கினார். 'புலிகளின் நடமாட்டங்கள் மறைவிடங்கள் பற்றிய செய்திகளை இராணுவத்திற்கு வழங்கினால் தகுந்த சன்மானங்கள் வழங்கப்படும் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு' என இருந்த செய்தியை மனதில் உள்வாங்கிக் கொண்டார்.

கந்தசாமியரின் மூளை குறுக்கு வழியில் பல திசையிலும் ஓடத் தொடங்கியது. 'காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்ற பழ மொழியும் நினைவில் வந்துபோயின.

சின்னாச்சியும் கந்தசாமி ஐயாவின்ரை கேற்றைத் திறந்தபடி களைப்புடனும், மனதிலும் தலையிலும் பாரச் சுமையுடனும் வந்து வீட்டுப் போட்டிக்கோவின் படியில் அமர்ந்தாள். அந்த மகிழ்ச்சியான நல்ல பங்களிப்பைச் செய்வதற்காக வேகமாக நடந்து வந்ததனால், அவள் உடம்பு வியர்வை யால் நனைந்து இருந்தது.

'என்ன சின்னாச்சி பிந்திப்போச்சுது' என்றவாறு பூரணம் குசினிக்குள் இருந்து சின்னாச்சியை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

'இல்லை அம்மா.... இன்டைக்கு நான் சந்தைக்கை வியாபாரமும் செய்யல்லை.... அவசரமாய் வீட்டை போறன்.... என்று இழுத்தாள் சின்னாச்சி.

'என்ன விசயம் சின்னாச்சி வியாபாரம் செய்யேல்லை எண்டுறாய் நல்ல புதுப்புது மரக்கறி எல்லாம் கனக்க வீட்டைகொண்டு போறாய்' என்று புதினம் புடுங்க வெளிக் கிட்டார் கந்தசாமியர்.

வஞ்சகம் சூது அறியாத அந்த ஏழைத்தாய் உள்ளம் மனக்கதவை திறந்துவிட்டது. இரைக்காகக் காத்துக் கிடந்த பிணம் தின்னும் கழுகுக்கு நல்ல இரை கிடைத்துவிட்டது.

'முதலியார் வீட்டை எல்லாமா எத்தினை பேர் இருப்பினம்' என்று மேலும் பிடுங்கினாள் பூரணம்மா.

'அது தெரியாது பிள்ளை எல்லாம் பெரிய ஆட்கள் போல கிடக்கு' என்று பெருமிதத்தோடு கூறினாள் சின்னாச்சி.

'அப்ப அவையள் எல்லாருக்கும் இண்டைக்கு நீதான் சாப்பாடு போல கிடக்கு' என்று பெருமை யோடு இழுத்தார் கந்தசாமியர்.

'ஓம் ஐயா பெற்ற பிள்ளைகள் இல்லாட்டியும் எல்லாம் என்ரை பிள்ளைகள் மாதிரித்தான் கிடக்கு...'

'அதுகள் வந்திட்டா நாங்களும் நிம்மதியாய் உறங்கலாம்தானே ஐயா...' என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டு பூரணத்தை நோக்கி 'பிள்ளை இதை வேறையாருக்கும் சொல்லிப்போடாதையுங்கோ...' என்று கூறிக்கொண்டு மரக்கறிக்கூடையை சுமந்தபடி வேகமாக வீடு நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள் சின்னாச்சி.

கந்தசாமியரின் மனத்திரையில் பத்திரிகையும், சின்னாச்சி சொன்ன தகவலும், தகுந்த சன்மானமும் மாறி மாறி வந்து போய்க்கொண்டிருந்தன...

'இஞ்சருங்கோப்பா... இவன் எங்கடை ராசன்ரை போக்கும் இப்ப வர வரச்சரியில்லை.. கண்டிச்சு வைக்கவேணும்.... அவன்ரை பழைய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறவை விட

## செந்தமிழ்க்கீரன்

ஆட்களும் வந்து போயினம் எண்டால் இவனுக்கும் ஏதும் பிரச்சினை வரப்பாக்கும்' என்று ஆலோசனை கூறினாள் பூரணம்.

கந்தசாமியற்றை மூளையில் அவளின் ஆலோசனை ஏறினதாய் தெரியவில்லை. அவர் உதயன் பத்திரிகையின் கட்டம் கட்டிய செய்தியைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு இருந்தார்...

'என்னப்பா.... நான் சொல்லுறன் நீங்கள் பேப்பரைப் பார்த்து யோசித்துக்கொண்டு இருக்கிறியள்' என்று செல்லமாகக் கடிந்துகொண்டாள் மனைவி பூரணம்.

'இப்ப ஏன் கத்துறீர், நல்லகாலம் பிறக்குதுபோல கிடக்கு இஞ்சை பாரும்' என்று பத்திரிகையின் முன்பக்க கட்டம்கட்டிய இராணுவ செய்தியைக் காட்டினார் கந்தசாமியர்.

வாங்கிப் படித்துவிட்டு.... 'இப்ப இதுக்கு என்ன செய்யப்போறியள்' என்று புரியாமல் கேட்டாள் பூரணம்.

'சின்னாச்சி சொன்ன முதலியார் வீட்டுப் பெரிய ஆட்களை காட்டிக்கொடுத்தால் பெரிய சன்மானமும் பதவி உயர்வும் எடுக்கலாம்...' என்று தன் திட்டத்தை மெல்ல அவிட்டுவிட்டார் கந்தசாமியர்...

'உங்களுக்கு விசரே பிடிபட்டால், உயிரே மிஞ்சாது... நேர்மையாய் உழைச்சு பதவி உயர்வு எடுக்கலாம்' என்று சற்று பதறியபடி கூறினாள் மனைவி.

கந்தசாமியர் தன் திட்டத்தில் உறுதி அடைந்துவிட்டார். மனைவியை திருப்திப்படுத்த பல யோசனைகளைச் சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு, எழும்பும்போது வீட்டுக் கதவு தானாகத் திறந்துகொண்டது. இருவர் மனதிலும் இடி விழுந்தால்போல் கிடந்தது.

திரும்பிப் பார்த்தபோது, ராசன் பொறிகக்கும் விழிகளோடு தாய் தந்தையரைப் பார்த்தபடி நின்றான். அவன் நின்ற நிலையும், பார்த்த பார்வையும் தாய் பூரணத்திற்கு பதற்றத்தைக் கொடுத்திருந்தது. கந்தசாமியர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு.... மகனை கண்டிப்போடு பார்த்தார். தாய் தந்தை போட்ட துரோகத்தனமான திட்டத்தை கதவுக்குப் பின்னால் நின்று கேட்டுக்கொண்டு நின்றதால், ராசன் சூடு ஏறி நின்றான்.

அவனின் கைகால் ஆத்திரத்தில் நடுங்கிக்கொண்டு இருந்தன. நா தளதளக்க 'உந்த துரோகச் செயலை செய்ய அனுமதிக்கமாட்டன்....' என்று முழங்கினான்.

தனது அருமையான திட்டம் தவிடுபொடியாகிவிடுமே என்று பயந்த கந்தசாமியர் அவனை அதட்டி அடக்கப்பார்த்தார். மண்மீது பற்றும், மனதில் உறுதியும் கொண்ட நாட்டுப்பற்றாளனாகிய ராசன் தனது தாய் தந்தையர் இவ்வளவு கேவலமானவர்கள் என்று நினைத்துக் கவலையும், ஆத்திரமும் கொண்டு எப்படியாவது முதலியார் வீட்டைக் காப்பாற்றவேண்டும் என்று துடியாய்த் துடித்தான். பணமும் பதவி உயர்வும் கைநழுவிப் போய்விடுமே என்று கந்தசாமியர் புழுங்கினார். 'இருதலைக்கொள்ளி எறும்பாக' பூரணம் துடித்தாள். அந்த வீடு நாட்டுப்பற்றுக்கும் சுயநலத்திற்குமான போராட்டக் களமாக மாறி உச்சக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

இறுதியாக கந்தசாமியர் மகனையும் மீறி தனது திட்டத்துடன் வெளியேற முடிவெடுத்து, செயல்படவும் துணிந்தார். ராசனின் மனத்திரையில் முதலியார் வீட்டில் வந்து நிற்கும் மண்ணின் மைந்தர்களினதும், முக்கியஸ்தர்களினதும் முகங்கள் வந்துபோயின... யாழ். குடாநாட்டு மக்களின் விடிவிற்காக அவர்கள் ஆற்றப்போகின்ற அளப்பரிய உயிரிலும் மேலான பணியையும், தான் அவர்களுக்காக உயிரை துச்சமென மதித்து பெற்றுக்கொடுக்கும் தரவுகளையும், அவர்கள் தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் தனது தந்தையால் அவர்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்தையும் துரிதகதியில் சிந்தித்து கடுகதியில் செயல்படத் தொடங்கினான்.

இந்த இரண்டு உயிர்களா... லட்சக்கணக்கான உயிர்களா என மனப்போராட்டத்தில் குதித்தான். இறுதியானதும், உறுதியானதும் முடிவுடன் மேசையில் இருந்த வெள்ளிக் கத்தியை பாய்ந்தெடுத்தான். உலகம் வேகமாகச் சுற்றுவதுபோல் இருந்தது. தன் கையில்பட்ட இரத்தக்கறையை துடைத்துவிட்டு கதவை இறுக்கிச் சாத்திவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு லட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிய திருப்தியில் முதலியார் வீட்டை நோக்கி போய்க்கொண்டு இருந்தான் ராசன்...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மூடிமறைத்துவிட முடியாது போய்விட்ட



ஜெயரா

சிறீலங்கா இராணுவத் தலைமையினால் இதனை ஒரு தந்திரோபாயப் பின்வாங்கல் எனக்கூற முடியவில்லை. ஏனெனில் இத்தோல்வியை சிறீலங்கா இராணுவத்தால் மூடிமறைத்துவிட இயலவில்லை. தோல்வி அத்தகைய பெரியது. 'முன்னேறிய பிரதேசங்களில் மேலும் நிலைகொண்டால் பெரும் இழப்பு ஏற்படும் என்பதினால் பின்வாங்கினோம்' எனக்கூறும் அளவிற்கு இராணுவத்தின் இழப்பு பாரியதாக இருந்தது.

இதேவேளை சிறீலங்கா இராணுவத்தால் தோல்விக்கு இதனைவிட வேறு காரணங்கள் எதையும் கூறவும் இயலவில்லை. அதாவது ஆயுத தளபாடங்கள் போதிய அளவில் இல்லையென்றோ, ஆயுதப் படைத்தரப்பிற்கு பயிற்சியோ, ஊக்குவிப்போ கிடைக்கவில்லை என்றோ கூற முடியாதும் இருந்தது. ஏனெனில் இராணுவத்திற்குத் தேவையான அனைத்தையும் சந்திரிகா அரசாங்கம் செய்துகொடுத்திருந்தது. இப்பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவம் பாரிய படை நடவடிக்கையின்போது பின்வாங்கி ஓடியமை இது இரண்டாவது தடவையாகும். 1993இல் ஒப்பரேசன் யாழ் தேவி மேற்கொண்ட இராணுவமும் நூற்றுக்கு மேலான இராணுவத்தையும் நான்கு டாங்கிகளையும் இழந்த நிலையில் அன்றும் தப்பியோடியது. அதன் பின்னர் அக்கினிச்சுவாலை --1இன்போதும் இராணுவம் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது தப்பியோடியுள்ளது. ஆனால், இரண்டிலுமுள்ள வித்தியாசம் என்னவெனில் அன்று ஆனையிறவிற்கு ஓடிய இராணுவம் இன்று கிளாலி, எழுதுமட்டுவாள் நோக்கி ஓடியது.

அக்கினிச்சுவாலை- 1இல் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து இன்னமும் சரியான தகவல்கள் வெளியாகவில்லை. குறைந்தபட்சம் 400 படையினர் கொல்லப்பட்டும், 2000 படையினர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இதில் பலியான படையினர் 600ற்கும் அதிகமானதாக இருக்கலாம் எனவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் இதனைவிடப் பெரியதும் நீண்டதுமான படை நடவடிக்கைகள் நிகழ்ந்தது முண்டுதான், ஆனால் இப்படை நடவடிக்கை போன்று நீண்டகால திட்டமிடலும், தயாரிப்புடனும் கூடியதொரு படை நடவடிக்கை இது வரையில் சிறீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டதாக இல்லையென்றே கூறலாம்.

2000இல் ஆனையிறவில் இராணுவம் சந்தித்த பெரும் தோல்வியின் பின்னர், சிறீலங்கா ஆயுதப்படையின் தேவைக்கு அதிகமான நவீன போர்த்தளபாடங்களைப் பெற்றுக்கொண்டிருப்பதாக சிறீலங்கா இராணுவத்திற்கு போதனை செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ள இக்பால் அத்தாஸ் போன்ற இராணுவ விமர்சகர்களே எழுதுகின்றனர். ஆனையிறவுத் தோல்வியின் பின் சிறீலங்கா ஆயுதப்படையில் பல்குழல் எறிகணைச் செலுத்திகள், நவீன போர் டாங்கிகள், துருப்புக் காவிகள், மிக்-27 ரக குண்டுவீச்சு விமானங்கள், ஏவுகணை பொருத்திய போர்க்கப்பல்கள் என புதிய தளபாடங்கள் இணைக்கப்பட்டன. இதேசமயம் ஏற்கனவே இருந்த போர்த்தளபாடங்களும் தொகை ரீதியிலும் அதிகரிப்புச் செய்யப்பட்டன.

ஆயுத தளபாட ரீதியில் இவ்வாறாகப் பலப்படுத்தப்பட்ட அதேவேளை, இராணுவத்திற்கு சிறப்புப்பயிற்சி அளிக்கப்பட்டு அதன் தொழில்சார் திறனும் அதிகரிப்பட்டது. வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் குறிப்பாக அமெரிக்க ஆயுதப்படையினர் பயிற்சி வழங்கினர். இப்பயிற்சிகள் சிறீலங்காவிலேயே அதிகாரிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிப்பாய்கள் வரை வழங்கப்பட்டது. இவையாவற்றிற்கும் மேலாக அக்கினிச்சுவாலை -1 நடவடிக்கை அதாவது ஆனையிறவை நோக்கிய அன்றி ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நடவடிக்கைக்கென நான்கு மாதகால, மாதிரியுடன்கூடிய சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. யாழ். குடாநாட்டிலேயே நடாத்தப்பட்ட இப்பயிற்சி நடவடிக்கைகளை சில அமெரிக்க அதிகாரிகள் மேற்பார்வை இட்டதாகச் சில தொடர்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

இப்படை நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவத்தின் மூன்று டிவிசன் படைப்பிரிவுகள்- 52ஆவது, 53ஆவது, 55ஆவது பயன்படுத்தப்பட்டன. இதில், 52ஆவது டிவிசன் படைப்பிரிவு இப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த துருப்பினராகும். ஏனைய 53ஆவது, 55ஆவது டிவிசன் துருப்புக்கள் தாக்குதல் திட்டத்திற்கென நகர்த்தப்பட்டன.

இதேசமயம், சிறீலங்கா விமானப்படையும், கடற்படையும் நன்கு திட்டமிட்ட ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. இதுவரை ஒவ்வொரு இராணுவத் தோல்வியின் பின்னரும் விமானப்படையையோ அன்றி கடற்படையையோ குறைகூறும் இராணுவத்தரப்பு இம்முறை அவ்வாறான குற்றச்சாட்டு எதையும் முன்வைக்கவில்லை. மாறாக விமானப்படை தமது பங்கைத் திறம்படச் செய்ததாகவே இராணுவத்தரப்பால் பாராட்டப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிப்புச் செய்திருந்த ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் காலாவதியாவதற்கு (24ஆம் திகதி நள்ளிரவு) முன்னரே அதாவது 24ஆம் திகதி மாலையில் இருந்தே யுத்தகளம் ஒரு வகையில் சூடேறிவிட்டது. சிறீலங்கா இராணுவம் சரமாரியான எறிகணைத் தாக்குதல்களையும், விமானக்குண்டுவீச்சுக்களையும் நடத்தத் தொடங்கிவிட்டிருந்தது. இது ஆரம்பமாகப் போகும் நகர்விற்கு முன்னோடி நடவடிக்கையாக இருந்தது.

25ஆம் திகதி அதிகாலை அக்கினிச் சுவாலை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது மூன்று மையங்களில் இருந்து ஆனையிறவை நோக்கியதாகப் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது போன்றதொரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. அதாவது கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்து மேற்கு, தென்மேற்கு நோக்கியதாகவும், நாகர்கோவிலில் இருந்து தெற்கு நோக்கியதாகவும் தாக்குதல் தொடங்கப்பட்டது. ஆனால் நாகர்கோவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஒரு திருப்பு நடவடிக்கையாகவே இருந்தது. இந்நிலையில் கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்து படைநகர்வுகள் முழுவீச்சில் நடந்தது. ஏ-9 பாதையை மையமாகக்கொண்ட எட்டுக் கிலோமீற்றர் முன்னரங்க நிலைகளில் இரு டிவிசன் துருப்புக்கள் நடவடிக்கையை ஆரம்பித்தன. இதில் 53ஆவது டிவிசன் கிளாலி கரையோரத்தில் இருந்து ஏ-9 பாதைக்கு (மேற்காக) இடைப்பட்டபகுதியிலும் 55ஆவது டிவிசன் துருப்புக்கள் வீதியின் வடக்காகவும் தொண்டமானாறு கடல் நீரேரிக்கு இடையிலுமாக நகர்ந்தன.

பிரதான வீதிக்கு (ஏ-9) மேற்காக நகர்ந்த 53ஆவது டிவிசன் படையணியின் சிறப்புப் படையணி, எயார் மொபைல் போஸ் (53-1), மற்றும் 53-4வது பிரிகேட் ஆகியன புலிகளின் முன்னரங்க நிலைக்கு ஊடாக மூன்று முனைகளில் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் வரையிலும் முன்னேறியிருந்தது. இதில் கிழக்குக் கரையோரமாக சிறப்புப் படையணியும், அல்லிப்பளை வீதியை மையமாகக்கொண்டு 53-4 பிரிகேட் துருப்புக்களும் ஏ-9 வீதிக்கு அண்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையாக மேற்குப்புறமாக எயார் மொபைல் போசும் (53-1) முன்னேறின. இதேசமயம் கிளாலிக் கரையோரம் முன்னேறிய 53ஆவது டிவிசன் சிறப்புப் படையணிக்கு கடல் நீரேரிப் பகுதியில் இருந்து கடற்படையினரின் உதவியும் கிடைக்கப்பெற்றது. இதேசமயம் 55ஆவது டிவிசன் துருப்புக்கள் பிரதான வீதிக்குக் கிழக்காக இருமுனைகளில் உட்புகுந்து முன்னேறின. இது வீதிக்கு மேற்குப் பகுதியில் 53ஆவது டிவிசன் முன்னேறியிருந்ததைவிடச் சற்றுக்கூடுதலான தொலைவிற்கு நகர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா இராணுவத்தின் திட்டத்தின்படி இவ்வாறு முன்னேறிய படையணிகள் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில், அப்பிரதேசத்தை கிழக்கு மேற்காக நகர்ந்து மூடிக் கொள்வதாகும். இதன்மூலம் அப்பிரதேசத்திற்குள் அகப்பட்டுக்கொள்ளும் விடுதலைப் புலிகளை அழித்தொழித்த பின்னர், இதன் தொடர்பாக மேலும் நகர்ந்து பளைநகர் உட்பட்ட பிரதேசத்தையும் அதேபோன்று மூடிகைப்பற்றிக்கொள்ளுதலும் நோக்கமாகும். இந்நடவடிக்கையை 48 மணிநேரத்திற்குள் மேற்கொள்ளுதல் எனவும் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், போர்முனை சிறீலங்கா இராணுவம் எதிர்பார்த்ததுபோன்று செயற்பட இடமளிக்கவில்லை. முன்னரங்க நிலைகளைக் கடந்து முன்னேறிய இராணுவத்தால் திட்டமிட்டதற்கு ஏற்றவாறு மூடிக்கொள்ள முடியவில்லை. அதேசமயம் பிரதான வீதிக்குத் தெற்காக முன்னேறிய படையணிகள் புலிகளின் பிரதேசத்திற்குள் உள்நுழைந்த சிலமணி நேரத்திற்குள்ளேயே நெருக்கடிகளைச் சந்தித்தது. முன்னேறிய படையணியின் தொடர்பு பின்புறமாக விடுதலைப் புலிகளால் துண்டிக்கப்பட்டதோடு, அதன்மீது உக்கிரமான தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 53ஆவது டிவிசனின் முயற்சி, நகர்வு தொடங்கி 24 மணி நேரத்திற்குள்ளேயே முறியடிக்கப்பட்டது. இம்முறியடிப்புத் தாக்குதலுக்கென ஆட்லறி மற்றும் கனரக மோட்டார்களை புலிகள் பெருமளவில் பயன்படுத்தியதாகத் தகவல்கள் கூறுகின்றன. விடுதலைப் புலிகளின் எறிகணைகள் துல்லியமாக இராணுவத்தினரின் நகர்வு மார்க்கங்களைத் தாக்கியதாகவும், இதனால் சிதறியோடிய இராணுவத்தினர் நிலக் கண்ணிகளில் சிக்கியதாகவும், இதனால் இராணுவம் பெரும் சேதத்திற்கு உள்ளானதாகவும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேசமயம் கண்ணிவெடிகளில் சிக்கி இரு கால்களை இழந்தவர்களும், காலுடன் கைகளை இழந்தவர்களும் இருந்தனர் எனவும் கண்ணிவெடிகளில் சிக்கியவர்களை மீட்கமுடியாத நிலையில் இரத்தப்பெருக்கில் பலர் பலியானதாகவும் கூட தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு ஏற்பட்ட சேதம் காரணமாக குழப்பத்திற்குள்ளான இராணுவத் தலைமை அக்கினிச்சுவாலை-1 பூர்த்தியாகிவிட்டதாகவும், கைப்பற்றிய பிரதேசங்களை இராணுவம் பலப்படுத்திவருவதாகவும் கூறி யுத்தத்தைத் தணித்துக்கொள்ளப் பார்த்தது. ஆயினும் ஏ-9 பாதைக்கு



# சுவாலையின் படுதோல்வி!

வடக்காக முன்னேறியிருந்த இராணுவத்தை வெளியேற்றுவதில் உறுதியாக இருந்த விடுதலைப் புலிகள் அத்துருப்புக்கள் மீது உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் அப்படையணி பலத்த சேதத்தைச் சந்தித்த வண்ணம் இருந்தது. இதேசமயம் இப்படையினருக்கு உதவும் நடவடிக்கையும் புலிகளினால் முறியடிக்கப்பட்டன. இந்நிலையில் மேலும் ஈடுகொடுக்கவும், இழப்பையும் தாங்கிக்கொள்ள முடியாது இராணுவம் 27ஆம் திகதி இரவு பின்வாங்கி ஓடியது. விடுதலைப் புலிகள் இயக்கம் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட அக்கினிச்சுவாலை-1 நடவடிக்கையைவிட ஜெயசிக்குறு போன்ற மிகப்பெரும் இராணுவ நடவடிக்கையை முறியடித்திருப்பினும்கூட இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அக்கினிச் சுவாலை-1 நடவடிக்கை முறியடிப்பும் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றே ஆகும்.

அக்கினிச்சுவாலை-1 இராணுவ நடவடிக்கை சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட வழமையானதொரு நடவடிக்கையின் வரிசையில் அடங்கக்கூடியதல்ல. இந்நடவடிக்கையானது சிறீலங்கா அரசின் கௌரவத்திற்கானதொரு நடவடிக்கையாகவே அதனால் பார்க்கப்பட்டது.

ஏனெனில், இந்நடவடிக்கை பிரதேசத்திற்கானதொரு நடவடிக்கை. பளைப் பிரதேசத்திற்கானதெனத் திட்டமிட்டபோதும் ஆனையிறவுப் பிரதேசத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே இருந்தது. இந்தவகையில் ஆனையிறவை மீண்டும் கைப்பற்றுவதை தன்மானப்பிரச்சினையாகக் கொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்திற்கும், அரசிற்கும் இந்நடவடிக்கை முக்கியம் பெற்றதாக இருந்தது. மேலும் விடுதலைப் புலிகள் மீது பாரியதொரு தாக்குதலை மேற்கொண்டு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொண்டுவிடலாம் என்ற நம்பிக்கையை உருவாக்கியபோதிலும், விடுதலைப் புலிகள் மீது இராணுவ ரீதியில் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க முடியும் என்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்கும் நோக்கமும், கொண்டதாகும். இதற்கும் அப்பால் சிறீலங்கா இராணுவத்தின் மீதான நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்பவும், சிறீலங்கா இராணுவத்திற்குப் பெரும் தொகை நிதியை ஒதுக்கீடு செய்வதை நியாயப்படுத்துவதற்கும் இது அவசியமானதாக இருந்தது. இந்தவகையில் இராணுவ ரீதியிலான அனுகூலங்கள் இருக்கையில், அரசியல் ரீதியில் அரசாங்கத்தின் கைகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியமும் இருந்தது. அதாவது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படுமானால் அதில் அரசாங்கத்தின் கைமேலோங்கி இருத்தல் என்பது இந்நடவடிக்கை மூலம் உறுதிசெய்யப்படுதல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வாறாகப் பல நோக்கங்கள் கொண்ட இந்நடவடிக்கையின் தோல்வியானது சிறீலங்கா அரசின் முன்பும், அதன் இராணுவத்தின் முன்பும் பல கேள்விகளை எழுப்பியுள்ள அதேசமயம், இனப்பிரச்சினை நோக்கிய அரசின் அடுத்தகட்ட நகர்வு என்ன என்பதையும் எதிர்பார்க்கச் செய்துள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமயோ



'யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் ஒதுக்குப்புறமான கிராமம்.

அன்றும், வழமைபோல்.... அதே விடியல்.

இந்திய வல்லாதிக்கக் கரங்களில் இருந்து, அந்த இயந்திரத் துப்பாக்கிகளின் சடசடத்த குமுறல் அக்கிராமத்து மக்களைத் துயிலெழுப்புகின்றது.

ஆனால்.... எங்கும் மயான அமைதி.

அந்தக் காலைவேளையிலும், சேவல் கூவவில்லை....

காகம் கரையவில்லை....

கீச்சிடும் குருவிகள் இரை தேடிப் பறக்கவில்லை....

மறைவிடம் ஒன்றில் இருந்து, எமது வீரன் ஒருவன் சேதி அறிந்துவர வீதிக்கு வருகின்றான்.... வீதி வெறிச்சோடிக் கிடக்கின்றது. ஒரு தெருநாயைக்கூட வீதியில் காணமுடியவில்லை.

எமது தோழன் சுற்றுமுற்றும் அவதானித்துவிட்டு, சந்திக்கடையடிக்கு மெல்ல நடக்கலானான். கடையடியில் ஓரளவு ஜனசந்தடி காணப்பட்டது.

ஆனால் ஒவ்வொருவருடைய முகத்திலும் பயம் இழையோடியிருந்தது. அதிகாலையில் கேட்ட வெடிச்சத்தங்கள் ஏற்படுத்தியிருந்த பதற்ற நிலை, சற்றும் தணியாமல் இருந்தது.

எமது தோழன் கடைக்குள் சென்று, கடைக்காரரிடம் 'அண்ணை! என்னவாம் உங்கால சத்தம்....? ஆரையாம் சுட்டவங்கள்....?' என்று கேட்கவும், வேகத்துடன்கூடிய இரைச்சலுடன் வந்த ஒரு ஜீப் சந்தியடியில் நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த ஜீப்பிற்குள்....

இந்திய வல்லாதிக்கத்தின் ஆறேழு கவசத் தொப்பிகளும், இந்திய ஆக்கிரமிப்பாளனுக்கு அடிமைச் சேவகம் செய்யும் சில தேசத்துரோகிகளின் வெள்ளை உடைகளும் தெரிந்தன.

மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந்தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய

---

## தமிழர் விடுதலை வரலாற்றில் மே

### தமிழீழ விடுதலைப் புலிகள் என பெயர் சூட்டப்பட்டமை

1972ஆம் ஆண்டு முதல் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்டுவந்த தமிழ்ப் புதிய புலிகள் இயக்கம் 05.05.1976இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் சூட்டப்பட்டது.

### இரகசியப் பொலிசார் அழிப்பு

தேசத்துரோகி துரையப்பா அழிக்கப்பட்டது தொடர்பாக பல விடயங்களைச் சேகரித்து வந்ததோடு, பல காட்டிக்கொடுப்புக்களிலும் ஈடுபட்டு வந்த காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சண்முகநாதன் (பொலிஸ். இல 753), வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சண்முகநாதன் (பொலிஸ். இல 6105) ஆகிய இரு இரகசியப் பொலிசார் விடுதலைப் புலிகளால் 18.05.1977 அன்று இணுவிலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### கந்தர்மடம் வாக்குச்சாவடித் தாக்குதல்

18.05.1983 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கந்தர்மடம் தேர்தல் சாவடியில் கூட்டுக்காவலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 10நிமிட அதிரடித் தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஜெயவர்த்தனா கொல்லப்பட்டான். ஒரு இராணுவக் கோப்ரலும், 2 பெலிசாரும் காயமுற்றனர்.

### யாழ் நூலக எரிப்பு



மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கென வந்திருந்த அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியு முதலானவர்கள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகம் 1981 மே மாதம் 31ஆம் திகதி தீமூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்டதும் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பண்டைய நூல்களையும் ஏட்டுச்சுவடிகளையும் கொண்ட அழகிய அரிய கலைக் கருவூலம் எரியூட்டப்பட்டு இவ்வாண்டுடன் 20 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. சிங்களத்தின் எண்ணம் தமிழின அழிப்பு ஒன்றையே நோக்காகக் கொண்டது என்பதை தெட்டத்தெளிவாக இச்சம்பவம் என்றும் தமிழீழ மக்கள் மனதில் நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

### லெப்டினன் சீலனைக் காட்டிக் கொடுத்த பொலிஸ் அதிகாரி அழிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதலணித் தளபதியான லெப்டினன் சீலனின் மறைவிற்குக் காரணமாக விளங்கிய இனத்துரோகி பொன்னையா சுப்பிரமணியம் மீசாலையில் வைத்து 04.05.1984 அன்று விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தம்!

இராணுவம்....

'கிரனேட்' டுகளுடன் ஒரு விடுதலைப் புலி....

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப்போகிறது?... அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

ஜீப்பில் இருந்து திடுதிப்பெனக் குதித்த இராணுவத்தினர், அவ்விடத்தில் நின்றவர்களைப் பிடித்து வரிசையாக நிறுத்திச் சோதனையிட ஆரம்பித்தனர்.

நிலைமை மோசமடைந்து கொண்டிருப்பதை எமது தோழன் உணர்ந்து கொண்டான். அவனது கைகள் இடுப்பிலிருந்த குண்டுகளையும், கழுத்தில் தொங்கிய குப்பியையும் தொட்டுப் பார்க்கின்றன.

அவன் சிந்திக்கிறான். முடிவில் ஒரு தீர்க்கமான முடிவெடுக்கின்றான். என்னைச் சோதனையிடவும் ஒரு ஆக்கிரமிப்பாளன் வருவான். அப்போது 'கிரனேட்' டுக்களை வீசித் தாக்கிவிட்டுத் தப்பியோடிவிடலாம்.

அப்போது, இராணுவத்தினர் கடையை நோக்கி வரவும், ஆறுதலாக வந்துகொண்டிருந்த ஒரு சைக்கிள் கடைக்கு முன்னால் நிற்கவும் சரியாக இருந்தது.

சைக்கிளில் இருந்த பெரியவர் கடைக்குள் பார்த்தார். அவருக்கு நிலைமை புரிந்து விட்டது. திடீரென....

'எட தம்பி! உன்னையல்லோ சீனி வாங்க அனுப்பினனான்... இஞ்ச வந்து ஏமிலாந்திக்கொண்டு நிக்கிறாய்...? வா! வந்தேறு சைக்கிள்ள வீட்டை போவம்' என்றார் அந்தப் பெரியவர்.

பெரியவர் சொல்லியதன் 'அர்த்தத்தைப்' புரிந்துகொண்ட எமது தோழன், சைக்கிளில் ஏறிக்கொள்கின்றான்.

மெதுவாக நகர்ந்த சைக்கிள் அடுத்த வளைவு திரும்பி சில மீற்றர் தூரத்தில் நின்றது.

அப் பெரியவர்....

'தம்பி, நாங்கள் வயதுபோன கிழடுகள்தான். ஆனாலும், நாட்டுக் காகச் சாகிறவங்களுக்கு எங்களால் ஏலக்கூடியதைச் செய்வம். கவனம்! உதுவழிய வருவாங்கள், பார்த்துப்போ மோனை!'



சொல்லிவிட்டு பெடல் கட்டையை மிதித்தார்.

சைக்கிள் மெதுவாக நகரத் தொடங்கியது.

**வில்லுக்குளத்துப் பறவை**

*சம்பவம்-3*

## நினைவுக் குறிப்பு

### மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பு

10.05.1985 தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகளால் மன்னார் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. வெற்றிகரமாக நடந்து முடிந்த இத்தாக்குதலின் போது மன்னார் பொலிஸ் நிலையத்தின் 7கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பல பொலிசார் கொல்லப்பட்டனர்.

### சிங்களப் படைஅதிகாரி மேஜர் சிறிலால் மெண்டிஸ் பலி

12.05.1985 அன்று உடுப்பிட்டி பேருந்து நிலையத்தினுள் தமிழின அழிப்பிற்கென தயாராக இருந்த சிங்களப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகுண்டுத் தாக்குதலில் மேஜர் சிறிலால் மெண்டிஸ் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

### வவுனியாவில் இந்தியச் சிறையுடைப்பு

01.05.1989 அன்று வவுனியாவில் இந்தியப் படையின் சிறையை உடைத்து போராளிகளும் பொதுமக்களுமாக 42பேர் தப்பினர். இச்சிறையுடைப்பு நடவடிக்கையில் இரு போராளிகள் உட்பட நான்கு தேசத்தின் புதல்வர்கள் வீரச்சாவடைந்தனர்.

### அபித்தா கப்பல் தகர்ப்பு

கடலில் பல போராளிகளினது அழிவுக்கும், பல பொதுமக்களது அவல இறப்பிற்கும் காரணமாக இருந்த அபித்தா கட்டளைக்கப்பல் 04.05.1991 அன்று கடற்கரும்புலிகள் கப்டன் ஜெயந்தனாலும், கப்டன் சிதம்பரத்தாலும் அழிக்கப்பட்டது.

### ராஜீவ் கொல்லப்பட்டார்

8000 தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த இந்திய அமைதிப் படையை தமிழீழத்திற்கு அனுப்பி வைத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 21.05.1991 அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இவரது படைகளால் தமிழீழத்தின் பல கோடிப் பெறுமானமுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன, ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானமிழக்கப்பட்டனர்.

### தமிழீழ வைப்பகம் ஆரம்பம்

23.05.1994 அன்று தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்களில் ஒன்றான தமிழீழ வைப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

### ஓயாத அலைகள்-3 மே மாதத்தில் நகர்ந்த பாதை

10.05.2000 அன்று நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது. 11.05.200 அன்று தென்மராட்சிக் கோட்டத்தில் கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு படைத் தளங்கள் கைப்பற்றப்பட்டன. யாழ் மாநாகரை நோக்கிய நகர்வில் அரியாலைப் பிரதேசம், கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதி கைப்பற்றப்பட்டது. 16.05.2001 அன்று தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதி படைமுகாமகள் தகர்க்கப்பட்டன. ஓயாத அலைகள்-3 படையணிகளால் கைதடிச்சந்தியில் அமைந்திருந்த இராணுவத் தளம் விடுவிக்கப்பட்டது. 20.05.2000 ஓயாத அலைகள்-03 படையணிகளால் தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரி மீட்கப்பட்டது.

www.tamilarangam.net


நேர்காணல்



* எழுத்துலக ஆர்வம் ஏற்பட்டது பற்றியும், எழுத்துலக ஆரம்ப கால தங்கள் அனுபவங்கள் பற்றியும் கூறுங்கள்.

-சிறுவயதிலேயே வாசிக்கும் பழக்கம் பெற்றோரினால் ஏற்பட்டது. இதிகாச புராணக் கதைகளைப் படித்து அவற்றை நண்பர்களோடு பகிர்ந்து கொள்வதிலேயே இத்துறையில் முதலில் ஆர்வம் ஏற்பட்டது. பாடசாலை நாட்களில் நடித்த சோக்கிரட்டீஸ், சாம்ராஜ்ய அசோகன் நாடக அனுபவங்கள், அந்த நாட்களில் இலக்கிய அரட்டைகளில் பங்கேற்ற நண்பர்களான கணமகேஸ்வரன், ரவி, ஜெயம் மற்றும் கேசவமூர்த்தி உட்பட சில நண்பர்களின் உற்சாகமூட்டல், பின்னர் சிரேஷ்ட மாணவனாக இருந்த காலத்தில் தமிழ் ஆர்வத்தைப் பெருக்கிய செல்லத்துரை மாஸ்டர், தேவன்- யாழ்ப்பாணம், சிவராமலிங்கம், சொக்கன் முதலான எழுத்தாள ஆசிரியர்கள் எனது தமிழ் ஆர்வத்தை வளர்த்த அதேவேளையில், கருத்துரீதியாக என்னைக் கவர்ந்தவர் மு. கார்த்திகேயன் மாஸ்டர் அவர்களே. அவரது மனிதநேய வாழ்க்கை முறைகளும் சித்தாந்தங்களும் மாணவ சமுதாயத்தை அந்நாளில் பெரிதும் ஈர்த்தது. தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த மாமனிதர் அவர். எனது ஆரம்பகால எழுத்துலகப் பிரவேசத்தின்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியரான எழுத்தாளர் நந்தி அவர்களின் பழக்கம் எனக்குப் பெரிதும் உதவியது. அந்த நாட்களில் என்னை உற்சாகமூட்டிய தோழிகளான தமிழ்ப்புதல்வி, இந்து, யாழினி முதலானோரும், பின்னர் எனது மனைவியும், எனது எழுத்துலக முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக இருந்தனர். பொதுவாக பத்திரிகைகள் எனக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தன. ஆரம்ப நாட்களில் ஈழநாடு, தமிழக சஞ்சிகை தீபம் முதலானவை எனக்கு வாய்ப்பளித்தன. மல்லிகைப் பண்ணையில் மலர்ந்து முழுமையானேன். எனது நாவலைத் தொடராகப் பிரசுரித்த தாரகை, மித்திரன் வாரமலர் என்பனவும் எனது எழுத்தாற்றலைத் தூண்டின.

* இலக்கியத்துடனான உங்களது அறிமுகம் எப்படி அமைந்தது?

- எழுதும் ஆர்வம் ஆரம்பத்தில் இருக்கவில்லை. ஆனாலும், எழுதுகிறவர்களின் மீது ஒரு மதிப்பும் விருப்பமும் இருந்தது. வாசிக்கும் பழக்கமும் ஆர்வமும் அதிகமாக எனக்குண்டு. ஊரில் செ. கதிர்காமநாதன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர் ஒரு நல்ல எழுத்தாளராக இருந்தவர். அவர் பொதுவாகவே அதிகம் கதைக்கும் இயல்பு குறைந்தவர். ஆனால், யாருடனாவது பழகத் தொடங்கினால் நிறையப் பேசுவார். அவர் மூலம்தான் இலங்கை எழுத்தாளர்களைப் பற்றியும் ஈழத்துப் படைப்புகள் பற்றியும் நிறைய அறியக்கூடியதாக இருந்தது. அப்போது நான் எழுதியது பாடசாலை மட்டத்திலான ஒரு மலரில் ஒரு சிறுகதையை. அதுதான் அச்சில் வந்த என் முதல் படைப்பு. பிறகு எந்த எழுத்து முயற்சியும் இன்றியே இருந்தேன். இதன் பின்பு எங்களூர் சனசமூக நிலையம் ஒரு கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டது. கருணையூரான் என்பவரே அதை வெளியிட்டார். அதில் அவரது ஊக்கத்தினால் ஒரு சிறுகதையை எழுதினேன். அந்தக் கதை பலரிடமும் நல்ல கதை என்ற அபிப்பிராயத்தைப் பெற்றதால், அதை கருணையூரானின் தூண்டுதலால் தினகரன் பத்திரிகைக்கு அனுப்பினேன். தினகரன் அதைப் பிரசுரித்தது அந்த உத்வேகத்தால் தொடர்ந்து எழுதினேன். ஆனால், உடனடியாக வேகவேகமாக எழுதிய பல கதைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தபோதும் அவை பல இடங்களிலும் பிரசுரமாகாமல் போயின. பின்புதான் சிறுகதை வடிவம் பற்றியும் உள்ளடக்கம் பற்றியும் கதைகளின் தன்மை பற்றியும் கவனமெடுத்தேன்.

* அப்போதிருந்த இலக்கியப் போக்குகள் எப்படியானவை?

- 1977 இனக்கலவரத்தின் பின்புதான் எனது முறையான இலக்கியப் பிரவேசம் நிகழ்ந்தது. அது சாதி, சீதனம் மற்றும் வர்க்க முரண்பாடுகளைப் பேசும் முற்போக்குக் கதைகள், தேசியவாதச் சிந்தனைக் கதைகள் எல்லாம் கூடுதலாக இருந்த காலகட்டம். அதேவேளை, தமிழ்த் தேசியவாதச் சிந்தனையை பிரதிபலிக்கும் இலக்கியமும் இன்னொரு பக்கம் முன்வைக்கப்பட்டது. இந்த இரண்டு போக்குகளுக்கு இடையிலும் இரு அணி எழுத்தாளர்களுக்கிடையிலும் விவாதங்களும் மோதல்களும் நிகழ்ந்தன. எழுத்தாளர்களும் பிளவுபட்டு நின்றார்கள். நான் அப்போதுதான்

நேர்காணல்

## டாக்டர்.ச.முருகானந்தன்

டாக்டர். ச. முருகானந்தன் அவர்கள் இருபது வருடங்களாக, வன்னிப்பிரதேசத்தில், வன்னேரிக்குளத்தில் பணியாற்றி வருகின்றார். இவர் வடமராட்சி கரணவாய் பிரதேசத்தைச் சொந்தஊராகக் கொண்டவர். மருத்துவத் துறையில் சேவையாற்றுகின்றபோதும் இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர். சிறுகதைப் படைப்பாளியாக அடையாளப்படுத்தும் ச. முருகானந்தன் ஒரு குறுநாவலையும் மற்றும் ஆறு நாவல்களையும் எழுதியிருக்கின்றார். பத்திரிகைகளில் தொடராக அவை வெளிவந்திருக்கின்றன. மருத்துவக் கட்டுரைகள், வானொலி நாடகங்கள், கவிதை என பிற படைப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள இவரின் சில சிறுகதைகள், பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 'மீன்குஞ்சுகள்' என்ற பெயரில் ஒரு சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கின்றது.

நெருக்கடி மிக்க காலங்களிலெல்லாம் சளைக்காது மக்களுக்குச் சேவையாற்றியுள்ள ச. முருகானந்தன், எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக தனது எழுத்தையும் மருத்துவத் தொழிலையும் எமது மண்ணின் உணர்வுகளுடனும் தேவையுடனும் இணைத்துச் செயற்பட்டு வருகின்றார்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுத்துலகின் ஆரம்பத்திலிருந்தபடியால் எழுபதுகளின் ஆரம்பகாலப் படைப்புக்களின் தாக்கம் மற்றும் போக்குகளிலிருந்து விடுபட்டு படிப்படியாகத் தமிழ்த் தேசியத்தின் பக்கம் எனது படைப்புச் செயற்பாட்டைத் தொடர்ந்தேன்.

* நீங்கள் எழுத்தியக்கத்தில் கூடுதலாகச் செயற்பட்ட காலப்பகுதியில் தேசிய இனப் பிரச்சினையைச் சித்தரிக்கும் படைப்புக்களும் போராட்ட எழுச்சிப் படைப்புகளும் அதிகமாக எழுதப்பட்டன. போராட்டம் குறித்த புதிய சிந்தனைகளை முன்வைத்த பல கதைகள் இக்காலப்பகுதியில் வெளியாகின. உங்களுடைய 'தரை மீன்கள்', 'அலியன் யானை' போன்ற கதைகளும் இக்காலத்தில் எழுதப்பட்டன. ஆனாலும், ஈழத்துக் கவிதைகள் எங்களுடைய அரசியல் பிரச்சினையையும் போராட்டத்தையும் வெளிப்படுத்திய அளவிற்கு எமது சிறுகதைகள் வெளிப்படுத்தியது குறைவல்லவா?

- கதைகள் உடனடியாக மக்களிடம் சென்றடைகின்றன. அத்தோடு, சிறுகதைப் படைப்பாளிகளைவிடவும் கவிஞர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். எண்பதுகளிலிருந்து கவிதைக்கான களமும் கூடுதலாகவே இருந்திருக்கின்றது. எண்பதுகளின் ஆரம்பத்தில் எமது போராட்டம் தீவிரமடைந்த காலகட்டத்தில் போராட்டப் படைப்புக்களை எழுதும் எழுத்தாளர்களுக்கான பிரசுரகளம் குறைவாகவே இருந்தது. சிறுகதைகளில் பேசப்படும் முறை கவிதையைவிட வேறுபட்ட தன்மையுடன் தெரிவதால் கவிதை அதிகம் வெளிப்படும். சிறுகதைகள் குறைவாகவே எழுதப்பட்டன. கூடுதலான எழுத்தாளர்கள் அப்போது பேனாவை மூடிவைத்திருந்தார்கள். கவிதைக்கும் இது பொருந்தும் என்றாலும் அவற்றில் நாசூக்காக விடயத்தைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்தது.

அ.செ.மு. 1940களில் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே எமது சிறுகதைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் எங்களின் அரசியற் பிரச்சினைகளைப் பேசியே வந்திருக்கின்றன. மலையகத் தமிழரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட காலகட்டம், தனிச்சிங்களம் தேசிய மொழியாக்கப்பட்ட காலகட்டம், தமிழரின் அகிம்சைவழிப் போராட்டக் காலகட்டம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இராணுவப் பயங்கரவாத காலகட்டம், இனவன்முறைகள், பின்பு ஆயுதப்போராட்ட காலகட்டம், புலம்பெயர்வுகள், இடம்பெயர்வுகள் எனத்தொடர்ச்சியாக எல்லாக்காலகட்டத்திலும் பல காத்திரமான சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. கவிதைத் தொகுப்புகள் வந்ததைப்போல கூட்டுத்தொகுப்புகள் வந்திருந்தால் சிறுகதைகளும் உரிய கவனத்தைப் பெற்றிருக்கும். கவிதை ஆற்றிய பங்களிப்புக்கு குறைந்ததாக சிறுகதைப் பங்களிப்பை மதிப்பிட முடியாது. ஆனால், கவிதைபெற்ற கவனிப்பை சிறுகதை பெறவில்லையென்பது உண்மைதான்.

இந்தச் சந்தர்ப்பங்களில் எமது போராட்டத்துடன் இணைந்து பெண்விடுதலை, விழிப்புணர்ச்சி ஏற்பட்ட பல படைப்புகளும் வந்துள்ளன. பெண் எழுத்தாளர்கள் குறைவாக இருந்தாலும் கூடியவரையில் தம்முடைய படைப்புகளூடாக இந்தப் பிரச்சினையை வெளிக்கொண்டுவர முயற்சித்திருக்கின்றார்கள்.

* போராட்டம் பாய்ச்சலுற்ற அளவுக்கு எமது படைப்புகளெதுவும் சமவேகத்தில் பயணிக்கவில்லை என்ற கருத்துப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

- ஓரளவுக்கு இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எமது போராட்டம் யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு பல அர்ப்பணிப்புக்களுடனும், தியாகங்களுடனும் உருவாகி, வளர்ந்து செல்கின்றது. எழுத்தாளர்களில் வெகுசிலரே இதை, இந்த அர்ப்பணிப்புடன் எழுதக்கூடியதை நாம் காண முடிகின்றது. இராணுவ நெருக்கடிகாரணமாக தாம் சிந்திப்பதை எழுத்தில் கொண்டுவர முடியாத நிலையும் உண்டு. அனுபவம் மிக்க எழுத்தாளர்கள் நாட்டுக்குள்ளேயே சிதறிப்போனதும், புலம்பெயர்ந்ததும் ஒரு காரணம். போராட்டத்தின் முழுமையான தரிசனத்தை- கள அனுபவம் சார்ந்த விடயங்களில் இருக்கும் வெற்றிடம் காரணமாக- பெறாததால் போர்ப்படைப்புகளை எழுதுவதில் உள்ள மனத்தயக்கம் சிலருக்குண்டு. சற்றுத் துணிச்சலாக எழுதும் புதியவர்களுக்கு- போராட்டத்தின் பல பரிமாணங்களைத் தெரிந்துள்ள எழுத்தாளர்களில் பலருக்கு- படைப்புப்பற்றிய தெளிவும் படைப்பாற்றலின் மேம்பாடும் இல்லாததால் இந்தப் படைப்புகள் தேறாமல் போகின்றன.

இங்கே ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். 'போர் உலா' என்ற படைப்பு கள அனுபவமும் எழுத்து ஆளுமையும்இணைந்த ஒரு வெற்றிப்படைப்பாக அமைந்தது. இது போல இன்னும் கள அனுபவம் தெரிந்தவர்களின் எழுத்தில் ஆளுமையும், கலைத்துவமும் இருந்தால் தரமான படைப்புகள் பல கிடைக்கும்.

இதேவேளையில் சிறுகதை, கவிதை, நாவல் என்பதற்கப்பால் இசைப்பாடல்களும் வீதி நாடகங்களும் நல்ல பங்களிப்பை ஆற்றியுள்ளன, நல்ல வளர்ச்சியையும் பெற்றுள்ளன. எனினும், இராணுவத்தின் தமிழ்ப்பிரதேசங்களை தனது ஆக்கிரமிப்பின்மூலம் பிரித்தாளும் தந்திரோபாயத்தால் இந்தக் கலைத்துறைகளின் வளர்ச்சியை பிற பிரதேசத்தவருக்கு பரவலாக்க முடியாமல் போய்விட்டது. இதனால், இவற்றின் வளர்ச்சியையும், புதிய போக்குகளையும் மற்றவர்கள் அறியவோ மதிப்பிடவோ முடியாமற்போய்விட்டது. முக்கியமாக வெளி ஊடகங்கள், புலமையாளர்கள், விமர்சகர்கள் போன்றோர் இவற்றை அறியமுடியாமல் போனதால் இது பற்றிய அறிமுகம் கிடைக்காமற் போய்விட்டது.

* நீங்கள் மருத்துவத்துறையில் பணியாற்றுகிறீர்கள், அதுவும் வன்னியில் 10 வருடங்களாக சேவையாற்றி வருகின்றீர்கள். இந்த அனுபவங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.

- யாழ்ப்பாணச் சூழ்நிலையிலேயே பிறந்து, வளர்ந்து கல்விகற்று வாழ்ந்த அனுபவத்தோடிருந்த எனக்கு வன்னிப் பிரதேசத்தில் ஒரு பின்தங்கிய குக்கிராமத்தில் நியமனம் கிடைத்தபோது என் எதிர்பார்ப்புகளுக்கு முழு ஏமாற்றமாகவே இருந்தது. சின்னஞ்சிறு குடிசைகளும் காட்டுப்பிரதேசமுமாக இருந்த இடம் வழமையான வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. ஒருவருடத்தில் மாற்றம் தருவதாக மேலதிகாரிகள் தந்த வாக்குறுதியுடன் பணிபுரியவந்து இந்தப் பிரதேச மக்களுடைய வாழ்வின் சுகதுக்கங்களில் ஒன்றிணைந்து சேவையாற்றத் தொடங்கிய பின்னர் எனது மனநிலைப்பாடு மாறி, கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக இங்கேயே மனப்பூர்வமாக ஒன்றிணைந்து இந்தப்பிரதேசத்தவனாகவே இன்று உள்ளேன்.

ஆரம்பகாலகட்டத்தில் நான் இங்குவந்த போது, வைத்திய வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் மிகக்குறைவாகவே இருந்தன. மக்களிடம் பலவிதமான தெளிவற்ற சிந்தனையும் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டுவந்த அப்பாவித்தனமான நம்பிக்கைகளும் கூடுதலாக இருந்தன.

இந்த நிலைமையில் எமது மருத்துவத் துறையில் உள்ள நம்பிக்கையைவிட மூடநம்பிக்கைகளில் தெய்வக்குறைபாடு, செய்வினை, சூனியம் போன்றவற்றில் நாட்டம் கொண்டவர்களாக இருந்தார்கள். பெரும்பாலும் விவசாயிகளைக் கொண்ட இந்தக் கிராம மக்களின் கல்விநிலை மிகவும் குறைவாக- தாழ்ந்ததாகவே இருந்தது. மதுப்பாவனை மிக அதிகமாகவும் அது தொடர்பாக சண்டை, சச்சரவுப் பிணக்குகளும் மேலோங்கியிருந்த இடம். வறுமையும் இங்கே மிக அதிகமாக இருந்தது.

இந்த நிலமையில் நான் எழுத்தாளனாக இருந்த காரணத்தாலும், மருத்துவத்துறையின் இயல்பான மனிதாபிமான நேசிப்புக் காரணத்தாலும் இந்த மக்களைப் புரிந்துகொண்டு இவர்களுக்கேற்ற மாதிரி அணுகி இந்த மக்களுடன் என்னையும் ஒருவனாக இணைத்துக்கொண்டு அந்தக் கிராமவாசியாகவே பணியாற்றத் தொடங்கினேன். வன்னியின் கள அனுபவம் எனக்குப் புதியதாக இருந்ததால், எனது படைப்புக்களிலும் இதை வைத்து எழுதத் தொடங்கினேன். இந்த மக்களின் வாழ்நிலையை வைத்து 'வன்னேரி பொன்னேரியாகிறது' என்ற கதையை எழுதினேன். இந்தக்கதை எழுத்துலகில் எனக்கு நல்லபெயரைப் பெற்றுத்தந்தது. அதேவேளையில் ஊர்மத்தியில் ஒரு சிலரின் எதிர்ப்பையும் நான் சந்திக்கவேண்டியிருந்தது. இதே காலகட்டத்தில்தான் எமது போராட்டம் விரிவடைந்து மக்கள்மயப்பட்டு வந்தது. அப்போது மக்களிடையே ஏற்பட்டுவந்த விழிப்புணர்வும், போராளிகளின் சமூகநல நடவடிக்கைகளும் (கசிப்பு ஒழிப்பு போன்றவை) எனது செயற்பாடுகளுக்கு பெரிதும் உதவியாக இருந்தன.

இதன்பின்பு, 1983இல் நிகழ்ந்த இனவன் முறையின்போது பாதிப்புற்ற மலையகத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழர்கள் எமது பிரதேசத்துக்கு வந்தார்கள். அவர்கள் மிகவும் வறியவர்களாக இருந்தார்கள். புதிய சூழலில் வாழும் நெருக்கடிகள் காரணமாக புதிதாக காடுவெட்டி குடியமர்ந்தபோது பாம்பு, யானை, நுளம்பு போன்றவற்றின் தொல்லைகளால் மக்கள் பெரிதும் அவதியுற்றார்கள். அவர்களுக்கான சேவையென்பதும் ஒரு மறக்கமுடியாத அனுபவமே. அதில் மனநிறைவு அடைந்தேன். அடுத்தகட்டம் பல நிலையிலும் மருத்துவ வசதிகள் வளர்ச்சிகாணாத கால கட்டமாக இருந்தபோது, போரினால் ஏற்படும் மருத்துவத் தேவைகளுக்கு பல வசதியீனங்கள், இடர்களின் மத்தியில் பணியாற்றக்கூடிய நிலையும் ஏற்பட்டது. இதுகூட இவ்வாறான ஒரு நிலையில் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பு என்றுதான் கூறவேண்டும். இதுவும் எனக்கு ஆத்மதிருப்தியை அளித்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் இனஒடுக்குமுறையை உருவகப்படுத்தி 'அலியன் யானை' என்ற சிறுகதையை எழுதினேன். வன்னேரிப்பகுதியில் காட்டுயானை ஒன்று புரிந்துவந்த அட்டகாசத்தை உருவகமாக வைத்து சிங்களப் பேரினவாதத்தை வெளிப்படுத்தும் அந்தக் கதையை குறியீட்டு வடிவில் எழுதியிருந்தேன்.

* யாழ். இடப்பெயர்வு, கிளிநொச்சி இடப்பெயர்வு என இரண்டு பெரிய இடப்பெயர்வுகளின்போதும் பல வசதியீனங்களின் மத்தியில் பணியாற்றியிருக்கின்றீர்கள். இந்த அனுபவங்கள் எத்தகையன?

- இந்த இடப்பெயர்வுகளின் போதெல்லாம் வன்னியின் சிறுகிராமங்களனைத்தும் மக்களால் நிரம்பின. காடுகள் புதிதாக வெட்டப்பட்டு, புதிய குடியிருப்புகள் உருவாகின. குடிநீர்ப்பிரச்சினை, நுளம்புத்தொல்லை, வதிவிடப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகளால் போசாக்கின்மை போன்றவற்றாலும் புதிய சூழலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமலும் பலவித நோய்கள் மக்களைப் பாதித்தன. ஆனால், இவற்றுக்குரிய வைத்திய சேவைகளைச் செய்வதற்கு வைத்தியவசதிகள் போதியளவில் இருக்கவில்லை. மருந்துத் தட்டுப்பாடு ஒருபுறம், சேவையாற்றுவதற்கான ஆளணிப்பற்றாக்குறை மறுபுறம். இந்தநிலமையில் வைத்திய சேவைகளைப் பெற முடியாமல் மக்கள் பெரிதும் அவதியுற்றனர். நாய்க்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் பலர் வன்னிப்பிரதேசத்தைவிட்டு வெளியேற வேண்டிய அவலநிலையும் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பல அவலமான மரணங்களும் சம்பவித்தன. இரவுபகல் என்றில்லாமல் வன்னியில் இருந்த சகல மருத்துவர்களும் ஏனையவர்களும் மக்களுக்காகப் பாடுபட்டார்கள். இந்தக் காலகட்டத்தில் பணியாற்றியதை கிடைத்தற்கரிய பெரும்பேறாக உணர்கிறேன். இந்த உணர்வு இந்தத் துறைசார்ந்த பலரிடமும் இருப்பதை உணர்ந்திருக்கிறேன்.

* மருந்துத்தடை ஒருபுறம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதேவேளை, இங்கே ஆளணிப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு எமது இந்தப் பிரதேசத்திற்கு புதிய மருத்துவர்கள் அதாவது, புதிதாகப் படித்து வெளியேறுபவர்களும் ஏற்கனவே வெளியிடங்களில் சேவைகளிலுள்ளவர்களும் மனிதாபிமான அடிப்படையில் இங்கே வரலாமல்லவா!

- நிச்சயமாக உங்களுடைய எதிர்பார்ப்பு நியாயமானது. ஆனால், யதார்த்தநிலை மாறாக இருக்கின்றது. இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவதாக மனித நேயமென்பது பல தரப்பினரிடமும் குறைந்துவருகின்ற ஒரு நிலை. சேவைமனப்பாங்கோடு மருத்துவர்கள் பணியாற்றிய நிலைமாறி தமது சுக வாழ்விற்குப் பொருளீட்டுதல் மற்றும் அந்தஸ்து மேலாண்மைக்குமாகவே பலர் உயர் தொழில்களைப் பார்க்கின்றனர்.

இன்றைய எமது கல்விகூட இந்தக் கண்ணோட்டத்துடனேயே அமைந்திருக்கின்றது. இன்னொரு காரணம் யுத்தம் நடக்கின்ற இடத்தில் பணியாற்றுவதற்குப் பயம். இன்னொன்று யுத்தப் பிரதேசத்தில் வாழ்க்கை வசதிகள் குறைவாகவிருப்பது.

இதேவேளையில், வெளிநாட்டிலிருந்து வந்த சில மருத்துவர்கள் இங்கே யுத்தப் பிரதேசங்களில் எமது மக்களிற்கும் பணியாற்றுகின்றனர். இந்த நிலைமையில் எமது மருத்துவர்களும் துறைசார்ந்தவர்களும் தமது பங்களிப்பை தமது மண்ணிற்கு நிச்சயமாக ஆற்றவேண்டும்.

இன்றைய அவலநிலையில் மருத்துவ சேவையின் பாதிப்புக்கு பல சாட்டுப் போக்குகளை கூறுவதை விடுத்து, எமது மண்ணில் எமது மக்களின் பணத்தில் கல்வி பயின்று தகைமை பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது இந்த அவலப் படும் மக்களிற்குச் சேவையாற்ற வேண்டுமென்பது எனது பெரு விருப்பம்.

ஏன் என்னுடைய அனுபவத்தைக்கூடப் பாருங்கள், முதலில் இங்கே வரும்போதுதான் சிலவேளைகளில் மனத்தயக்கம் ஏற்படலாம். ஆனால், வந்து பணியாற்றத் தொடங்கி விட்டால் சேவையின் உயரிய பெறுமானம் என்பது மனநிறைவைத் தரத்தொடங்கிவிடும்.

இந்தப் பிரதேச மக்கள் இன்று இங்கு பணியாற்றும் வைத்தியர்களையும் ஏனையவர்களையும் மிக நன்றியுணர்வுடன் மதிக்கின்றனர்.

* மருந்துத்தடை, ஆளணிப்பற்றாக்குறை, மக்கள் அவலம் போன்றவை உங்களிற்குள் ஏற்படுத்தும் தாக்கங்கள், நீங்கள் ஒரு படைப்பாளியாகவும் இருப்பதால் வெளிப்பாட்டு உந்துதல் உங்களுள் அதிகம் ஏற்பட்டிருக்குமல்லவா?

- நீங்கள் குறிப்பிடுவது போலவே ஒரு தடவையல்ல, பல தடவைகள் படைப்பு உந்துதல் என்னுள் ஏற்பட்டிருக்கின்றது. மனதிலே கருக்கொண்டவைகள் உருக் கொள்ளமுடியாத அளவிற்கு வேலைப்பழு அதிகமாக இருப்பதும், அதனால் ஏற்படும் அசதியும் இந்தப்படைப்புக்களை எழுத முடியாமைக்குக் காரணமாக இருக்கின்றது. ஒரு சிறுகதையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி விமானக்குண்டு வீச்சால் பாதிப்புக்குள்ளான சம்பவத்தையும் அதன் பாதிப்புக்களையும் விபரித்திருந்தேன்.

ஒரு நாவலை எழுதக்கூடிய அளவிற்கு அனுபவங்களைப் பெற்றுள்ளபோதும் அதை எழுதக்கூடிய அவகாசம், வாய்ப்பு, நேரவசதி போன்றவை இல்லாதிருக்கின்றது.

* ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் விடுதலை கோரிப் போராடும் தரப்பினர் அனைவருக்கும் பல்வேறு பணிகள் உண்டு. போராட்டத்தின் வளர்ச்சியோடு அந்தப் பணிகள் இணைந்திருக்கும். போராட்டத்தின் இலக்கை எட்டும் வரை இப்பணியில் போராடும் மக்கள் பிரிவின் ஒவ்வொரு தரப்பினரும் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டுமல்லவா?

- ஆம்! விடுதலைப் போராட்டத்திற்குப் பக்கலமாக இருப்பதும், ஒத்துழைப்பான பணிகளைச் செய்வதும் சாதாரண மக்களின் பணிகளே. வியட்நாமியரின் அமெரிக்காவிற்கு எதிரான போராட்டத்தைத் திரும்பிப்பார்த்தால் பல விடயங்கள் புரியும். முதுகிலே உள்ள கூடையில் குழந்தை, தோளிலே துப்பாக்கி; தோட்டத்திலே வேலைசெய்யும் பெண்ணின் தோற்றம் இது. இன ஒடுக்குமுறைக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் உண்மை நிலை இதுதான். ஒடுக்கப்பட்டு அல்லலுறும் மக்கள் மத்தியிலிருந்து கிளம்பும் தவிர்க்க முடியாத விடுதலைப் போராட்டம் என்பதில் மக்களின் பணிகள் நிறைய உண்டு. ஒரு எழுத்தாளன் தனது பேனாவை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தலாம். வைத்தியர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றலாம். இப்படியே எல்லாத் தரப்பினரும் மண்ணில் நிலைத்துநின்று, தமது பணிகளைச் செய்ய வேண்டும். அவர்கள் சில மேலதிகப் பணிகளைச் செய்வதோடு, மேலதிகப் பழுவையும் சுமப்பது தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை வியட்நாமிய தேவ, தேவதைகளின் வெற்றிப் போராட்டம் கட்டியம் கூறி நிற்கின்றது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெந்த தீயும் வேளச் சமர்வும்



தடையெனும் விதியெழுதிப் போவோரே!
எமக்கொரு விடைசொல்வீர்...
'கடைவிரித்தீர் கொள்வாரில்லை'
எனவே கதவிழுத்துப் பூட்டுங்களென
அடுத்தெமக்குக் கட்டளையா இடுவீர்?
தடையெனும் விதியெழுதிப் போவோரே
எமக்கொரு விடைசொல்வீர்,
யாரும் குனிந்துகிடந்து தீர்ப்பெழுதாதீர்
இனியாயினும் நிமிர்ந்து பாருங்கள்.
முன்னரும் நீரெழுதிய தீர்ப்புகள் பல
மூச்சிழந்து கிடக்கின்றன.
இனியும் குனிந்து கொண்டு எழுதாதீர்
கொஞ்சம் நிமிர்ந்தும் பாருங்கள்.
சாளரங்களைத் திறந்து எங்கள் சாக்குரலைக்
கேளுங்கள்.
கதவுகளை அகலவிரித்து எங்கள் காற்றையும்
சுவாசியுங்கள்
பிணமெரிக்கும் வாடை அக்காற்றிலிருக்கும்.
உயிருரிக்கும் ஓலம் அக்குரலிலிருக்கும்.
கடல்களைக் கடந்து
கண்டங்களைத் தாண்டி
மலைகளையும், நதிகளையும் கடந்துவரும்
எங்கள் காற்றுடனும், கதறல்களுடனும்
கொஞ்சம் பேசுங்களேன்.
விழிதிறந்து எங்கள் திசைகளையும் பாருங்கள்,
தீயின் சுவாலையில்
பச்சைமரங்கள்கூட இங்கே பற்றியெரிகின்றன.
பூக்களின் தலையிலும்
பொன்வண்டின் நாவிலும்
ஆற்றிலும், அதன் கரைமருங்கிலும்கூட
பற்றியெரிகிறது பாவியரிட்ட பாழ்நெருப்பு.
திமிர் பிடித்த தீர்ப்புக்காரரே.
தீர்ப்பெழுத உங்கள் சிம்மாசனத்தில் குந்த முன்னர்
நீர்த்துப் போய்க் கிடக்கும் எங்கள் நிலத்தையும்
கொஞ்சம் நிமிர்ந்து பாருங்கள்.
முற்றம் உழுது போகிறான் ஒருவன்
அவன் காலடியின் கீழே
சிக்குண்டு கிடக்கிறது எம் தேசத்தின் உயிர்
சாட்டை எடுத்து விளாசுகிறான்
எம் தேகமெலாம் தோலுரிந்து தொங்கிறது.
ஏனடா எரிக்கிறாய் என்றோ
ஏனடா அடிக்கிறாய் என்றோ
அவனை எவனடா கேட்டீர்?
அடியென அவனுக்குச் சாட்டை கொடுத்தவனும்
சுடுவெனத் தோட்டா கொடுத்தவனும்
தடையென எமக்குத்தானே விதிக்கின்றனர்.
என்ன கொடுமையடா இது!
தாகத்துக்குத் தண்ணீர் கேட்டோம்
அவன் தரவில்லை.
பசித்த வயிற்றுக்கு ஒருபருக்கை சோறு கேட்டோம்
அவன் தரவில்லை.
சுருண்டுகிடக்க ஒருதுண்டு நிலம் கேட்டோம்
அவன் தரவில்லை
சுற்றம் சூழமகிழ்ந்திருக்க ஒரு நிலாக்காலம் கேட்டோம்
அவன் தரவேயில்லை.
தீர்ப்பெழுத வருவோரே
இவையெல்லாம் தெரியுமா உமக்கு,
தடைவிதிப்போரே
அழுதவிழிகளுக்கும் அடித்த கரங்களுக்குமிடையில்
எழுதமுடியுமா சமரசத்தீர்வு?
முன்னரும் நீரெழுதிய தீர்ப்புகள் பல
மூச்சிழந்து கிடக்கின்றன.
இன்னுமா தீர்ப்பெழுதும் ஆசையிற் திரிகின்றீர்?
எல்லைகளை விழுங்கி
நாடுகளை விழுங்கிச் செரித்து
வானத்தையும், கடல்களையும் விழுங்கி
விதானத்துக் கோள்களையும்
விழுங்கத் துடிக்கும் விழுங்கிகளுக்கு
உயிர்ப்பின் புள்ளிமேலேன்
இத்தனை கோபம்?
நெஞ்சுக்குழி நிறையக் கனவு சுமந்து
நெருப்புக் குளிக்கிறோம்.
எமக்கான விதியெழுதும் வலிமை எவருக்குமில்லை
நாமே நமக்கான நீதிபதிகள்.

-புதுவை இரத்தினதுரை




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரான்சுவா மித்தறோன்
# (François Mitterrand)



1981இல் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பெரும்பாலானவற்றில் மக்கள் வலதுசாரிகளையே தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்திருந்தார்கள். ஆனால் பிரான்சிய மக்கள் முற்றிலும் வித்தியாசமாக தமது முதலாவது சோசலிச இடதுசார்பு வேட்பாளரை தமது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரே மறைந்த திரு. பிரான்சுவா மித்தறோன் ஆவார். அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வாண்டுடன் இருபதாண்டுகள் பூர்த்தியாகின்றன.

பிரான்சுவா மித்தறோன் 1981 தொடக்கம் 1995 வரைக்கும் பிரான்சின் ஜனாதிபதியாக இருந்தார். இவர் பிரான்சின் (Charentes) மாநிலத்திலுள்ள Jarnac என்ற பட்டினத்தில் 26.10.1916 அன்று பிறந்தார். இவரது தந்தையார் ஒரு தொடருந்து நிலையமொன்றின் அதிகாரியாக இருந்தார். திரு. மித்தறோன் அவர்கள் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் இலக்கியமும், சட்டமும், அரசறிவியலும் பயின்றார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1939-1945) அவர் ஜேர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் பிரான்ஸ் நடத்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டார். பிரான்ஸ் படையில் பணியாற்றிய சமயம் ஜேர்மனியரிடம் கைதியாகப் பிடிபட்டார். பின்னர் சிறையிலிருந்து தப்பி 1943இல் ஜேர்மனியருக்கு எதிராக ஒரு தேசபக்த குழுவைத் திரட்டினார். ஜேர்மனிக்கு எதிராகப் போராடிய (Les Maquisard) லே மக்கிசார் எனப்படுகின்ற தேசபக்த குழுக்களின் முக்கிய போராளியாக விளங்கினார்.

பாரிஸ் நகரம் மீட்கப்பட்டதன் பின்னர் பத்திரிகையாசிரியராகக் கடமையாற்றிய மித்தறோன் பின்னர் 1946ஆம் ஆண்டு பிரான்ஸ் பாராளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் Nievre தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

திரு. Charles de Gaulle அவர்களின் தலைமையிலான தற்காலிக அரசில், மித்தறோன் முன்னைய போராளிகளின் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1950 - 1951 வரைக்கும் பிரான்சின் கடல்கடந்த காலனிகள் விவகார அமைச்சராகப் பணியாற்றினார். 1954-55 வரைக்கும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சராகப் பணியாற்றினார். நீதி அமைச்சராக 1956-1957 வரையில் பணியாற்றினார். இவ்வாறாக 1947ஆம்ஆண்டிலிருந்து 1958ஆம் ஆண்டு வரை 11 அமைச்சுப் பதவிகளை வகித்துவந்த மித்தறோன் 1959-1962 வரை செனெட் சபை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1965இல் நடைபெற்ற தேர்தலில் நவீன பிரான்சின் சிற்பியான Charles de Gaulle அவர்களுக்கு எதிராக வலதுசாரி எதிர்ப்பாளனாக நின்றார் மித்தறோன். 44.8 வீத வாக்குகளைப் பெற்றுத் தோற்றார்.

1971ஆம் ஆண்டில் புதிய சோசலிசக் கட்சியின் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார். பிரான்சினது புதிய சோசலிசக் கட்சியை உருவாக்கியவர்களுள் பிரான்சுவா மித்தறோன் முக்கியமானவர். 1974இல் பொதுவுடமைவாதிகளின் உதவியோடு ஜனாதிபதி தேர்தலில் நின்றார். Valery Giscard d Estaing என்ற வலதுசாரி வேட்பாளரிடம் சொற்ப வித்தியாசத்தில் தோற்றார்.

1981இல் திரு. மித்தறோன் அவர்கள் Valery Giscard d Estaing அவர்களைத் தோற்கடித்து பிரான்சின் 5வது குடியரசின் முதலாவது சோசலிஸ்ட் ஜனாதிபதியானார். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளோடு நாட்டின் கனரகத் தொழில்களான இலத்திரனியல், இரசாயன, உருக்கு தொழிற்சாலைகளை மேம்படுத்தவும் பாடுபட்டார். இது மாத்திரமின்றி மைய அரசிலிருந்து நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தினார். உள்ளூர் மற்றும் பிராந்திய சபைகளுக்கு மைய அரசின் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தார்.

தொழிலாளர்களுக்கு பல சலுகைகளை அளித்தார். அடிப்படைச் சம்பளத்தினை தொழிலாளர்களுக்கு அதிகரிக்கச் செய்ததோடு, சம்பளத்துடன்கூடிய வார விடுமுறையையும் தொழிலாளருக்கு வழங்க தொழில் கொடுப்போருக்கு உத்தரவிட்டார். பிரான்சிற்குள் வசிக்கும் பல சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு பல வதிவிட உரிமைகளை வழங்கினார். அரசியல் அகதிகள் விடயத்திலும் தாராண்மையோடு நடந்து கொண்டார்.

1982இல் பிரான்ஸ் பொருளாதார முடக்கங்களை எதிர்கொண்டது. பணவீக்கமும், வேலைவாய்ப்பின்மையும் தலைவிரித்தாடியது. இதனால் மித்தறோன் தமது கொள்கைகளில் சிலவற்றை மீளளெடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. சில வலதுசாரிக் கொள்கைகளை அனுசரிக்க வேண்டியதாயிற்று.


மித்தறோன் அவர்கள் தமது ஆளுமையாலும், நிர்வாகத் திறனாலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாதவர் எனும் பொருளில் Sphynx எனும் கிரேக்க புராண கால ஜந்துவின் பெயரால் ஆய்வாளர்களால் அழைக்கப்பட்டார். அவருடைய 50வருட பொது வாழ்வில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக, எதிராளிகளாலும் அவரது தலைமை மதிக்கப்படக்கூடிய அளவிற்கு அவரது தலைமைத்துவம் விளங்கியது. விமர்சகர்கள் சிலர் இவரை கடவுளைப் போன்று அனைத்தையும் தன்கையில் வைத்திருக்கின்றார் என்று விமர்சனம் செய்தாலும்கூட அவரது ஆளுமைக்கு அவர்களால் எதுவித வழுவும் கூற முடியாதிருந்தது.

1986இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது சோசலிஸ்டுகள் தமது பெரும்பான்மையை இழந்தனர். இதனால் மித்தறோன் வலதுசாரிகள் பெரும்பான்மையாக உள்ள பாராளுமன்றத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. 5வது பிரான்சியக் குடியரசின் வரலாற்றில் முதல்த் தடவையாக நாட்டு ஜனாதிபதியின் கட்சி பாராளுமன்றில் பெரும்பான்மை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. மித்தறோன் தமது அதிகாரத்தை வலதுசாரி பிரதமர் Jacques Chirac (தற்போதைய ஜனாதிபதி) உடன் பகிர்ந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. மித்தறோனின் வெளிவிவகாரக் கொள்கையினை Jacques Chirac ஏற்றுக்கொண்டு அதன் வழியே செயற்பட்டார். 1988இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் Jacques Chirac ஐத் தோற்கடித்து மீளவும் மித்தறோன் ஆட்சிக் கட்டில் ஏறினார். மித்தறோன் ஐரோப்பிய யூனியன் விவகாரத்தில் பிரான்ஸின் நிலைப்பாட்டை உறுதியாகப் பேணினார். அதன் உறுதியான உருவாக்க ஒருங்கிணைப்பிற்காகப்பாடுபட்டார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரம்பரை பரம்பரையாக பகைநாடாக விளங்கிய ஜேர்மனியோடு கைகோர்த்து அதனைப் பிரான்சின் பிரதான பங்காளியாக் கினார். இரு நாடுகளும் ஐரோப்பிய யூனியனின் இரு தூண்களாக விளங்க வேண்டும் என விரும்பி அதற்கான பூர்வாங்க முயற்சிகளுக்கும் வித்திட்டார்.

1991 மேயில் முதன்முதலாக பிரான்சிற்கு பெண் பிரதமர் ஒருவரை நியமித்தார். எடித் கிறெசன் அம்மையார் 1991 மே தொடக்கம் 1992 ஏப்ரல் வரைக்கும் பிரான்சின் பெண் பிரதமராகக் கடமையாற்றினார்.

5வது பிரான்சியக் குடியரசின் 14 ஆண்டு களை ஆட்சித் தலைவராக இருந்து பிரான்சை வழி நடத்திய திரு. மித்தறோன் 1995இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட திரு. மித்த றோன், தமது 79வது வயதில் 08.01.1996 அன்று இயற்கையெய்தினார். பிரான்சின் தற் போதைய ஜனாதிபதி திரு. Jacques Chirac அவர்கள் மித்தறோன் அவர்கள் மறைந்த வேளையில் கூறிய வசனமே திரு. மித்த றோனின் ஆளுமைக்குச் சான்றாகும். "மிகப் பெரிய மாமனிதம் ஒன்று எமைப் பிரிந்து விட்டது. நான் அவருக்கு மரியாதையாகவும் உளப்பூர்வமாகவும் எனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"





# MIG-27

## சிறிலங்கா அரசு தமிழின அழிவுக்குப் பயன்படுத்தும் யுத்த விமானம்

MIG விமானங்கள் Moscow Aircraft Production Organisation எனும் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றது. Mig-03, Mig-15, Mig-17, Mig-19, Mig-21, Mig-23, Mig-25, Mig-27 என்பன உலகப் பிரசித்திபெற்ற வடிவங்களாகும். Mig-27 வகை விமானங்களையே சிறீலங்கா அரசு கொள்வனவு செய்துள்ளது.

உலகிலே வழமையாக இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறுகின்ற யுத்தத்தின் போதே Mig-27 போன்ற கனரக போர்விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சிறீலங்காவோ தமது உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களிற்கு எதிரான போரில் மிகப் பாரிய அழிவுகளை விளைவிக்கவல்ல மிக்-27 போன்ற கனரகப் போர்த்தளபாடங்களைப் பயன்படுத் துகின்றது.

மிக்-27 சம்மந்தமான தரவுகள் இங்கு தரப்படுவது அது சம்மந்தமான பிரமிப்பை எமது மக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கத்தில் அல்ல. சிங்கள தேசம் தமிழரழிப்பு யுத்தத்திற்கு எந்தளவு முனைப்போடு செயற்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதே ஆகும்.

மிக்-27இன் மூக்குப்பகுதியில் லேசர் தூரம் காட்டியும், குறிப்பிட்ட இலக்குகளைத் தேடும் ராடர் கருவியும் இருக்கும். உயரம், காற்றின் வேகம் போன்றவற்றை அளக்கும் கருவிகளும் உண்டு. இவை மூலம் பெறப்படும் தரவுகள் இலக்குகளைக் குறிபார்க்கும் கருவிகளுக்கு வழங்கப்படுகின்றது.

முழு நீளம் - 16M
இறக்கை அளவு
(ஒடுங்கிய நிலையில்) - 8.17 M
(விரிந்த நிலையில்) - 14.25 M
கடல்மட்ட உயர்வேகம் - 725 Kts
தாக்குதல் ஆரைப்பரப்பு - 390 Km
உச்ச ஆயுத தளபாட நிறை - 4500 Kg
எரிபொருள் - 5750 லீற்றர்
(800 லீற்றர் மேலதிக தாங்கியில்) இவை எரிபொருளைச் சேமிப்பதற்காக மிக மிக உயரப் பறப்பையே மேற்கொள்கின்றன. இலக்கை அண்மித்ததும் தாழ்வாகப் பறந்து, தாக்கி மேல் எழுகின்றன.

விமான ஓட்டியின் அறையைச் சுற்றி டைட்டேனியம் உலோகத்தாலான கவசமுண்டு.

தாக்கவேண்டிய இலக்குகளைத் துல்லியமாகத் தாக்குவதற்கு AS-7 கெரி றேடியோ கொமாண்ட் வழிகாட்டி ஏவுகணைகள் பொருத்தப்படலாம். விமான ஓடுபாதைகளைத் தாக்குவதற்கு கிளஸ்டர் குண்டுகள் பொருத்தப்படலாம். 600 இறாத்தல் கிளஸ்டர் குண்டு ஒன்றில் 147 சிறிய குண்டுகள் இருக்கும். இவை விமான ஓடுபாதைக்கு மேல் பரசூட் மூலம் இறக்கிவிடப்படுகின்றன. கொங்கிரீட்களை உடைப்பதற்கு Concrete dibber குண்டுகள் பயன் படுத்தப்படலாம். இவைதவிர 6 குழாய்கள் கொண்ட Cannon கள் பொருத்தப்படலாம். பொது வாக 23 m.m Cannon பொருத்தப்பட்டிருக்கும். இவை நிமிடத்திற்கு 4000-5000 வரையான ரவை களைச் சுடவல்லன. ஆனால், இவ்விமானங்களில் இவற்றிற்கான 700 ரவைகளையே ஒரு முறை கொண்டுசெல்லமுடியும்.

இவற்றின் இறக்கைகள் சுருங்கி விரியக்கூடியவை. உயர் வேகத்தில் பறக்கும்போது இறக்கைகள் சுருங்கியும், குறைந்த வேகத்தில் பறக்கும்போதும், ஏறும்போதும், இறங்கும் போதும் இறக்கைகள் விரிந்தும் இருக்கும். உயர் வேகத்தில் காற்றின்வேகம் காரணமாக விமானப்பறப்புப் பாதையிலிருந்து விலகல்களைக் குறைப்பதற்கே இறக்கைகள் சுருக்கப் படுகின்றது. இதனால் இலக்குகளைக் குறிபார்ப்பதில் அனுகூலங்கள் ஏற்படுகின்றன. 5750 லீற்றர் எரிபொருள்த் தாங்கி இதில் உள்ளது.

இதை ஒரு விமானியே ஓட்டிச் செல்வார். மிகவும் தேர்ச்சிபெற்ற ஒரு விமானியாலேயே Mig-27 இன் பயன் களைப் பெறமுடியும். ரஷ்யாவில் 'Sniper Pilot' பட்டம் பெற்ற விமானி களே மிக் விமானங்களைச் செலுத் துகின்றனர். நன்கு பயிற்றப்படாத திறமை குறைந்த விமானிகளால் இவ் விமானங்களின் பயனை முழுமை யாகப் பெறமுடியாது.




சிறிலங்கா விமானப்படையின் மிக்-27 விமனத்தின் தாக்குதலால் தென்மராட்சிப் பகுதியில் வீதியில் ஏற்பட்ட பெருங்குழி.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ வரலாறு

'ஈழம்' தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதை சிங்கள பௌத்தர்களின் வரலாறு கூறும் மகாவம்சம் மறைக்க முயன்றாலும் வரலாற்றுச் சான்றுகளும் பழந்தமிழ் இலக்கியங்களும் புட்டமிட்டுக் காட்டுகின்றன. தமிழ் மணம் பரவிக்கொண்டிருந்த ஈழத்திலே வட இந்தியாவிலிருந்து துஷ்டச் செயல்களைச் செய்தமைக்காக தந்தையால் நாடுகடத்தப்பட்ட விஜயனும், அவனது நண்பர்களும் வந்திறங்கினார்கள். வந்தாரை வரவேற்கும் சிறந்த பண்பின் சொந்தக்காரர்கள் வாழ்ந்த ஈழமண் அவர்களுக்குத் தஞ்சம் கொடுத்தது. இவற்றையெல்லாம் மூடிமறைத்து, தஞ்சமளித்த மண்ணின் சொந்தக்காரர்களையே வந்தேறுகுடி என்று கூறுமளவிற்கு வரலாறு திரித்துக் கூறப்படுகின்றது.

ஈழத்தின் உண்மையான பழங்கால வரலாறு வெளிக்கொண்டு வரப்பட வேண்டுமானால் தேரவாத பௌத்தத்தினதும், மகாவிகாரையினதும் புகழ்பாடும் புராணமான மகாவம்சத்தை, ஆயிரமாண்டுகளுக்குமேல் செவிவழி கேட்ட ஒருதலைப்பட்சமான செய்திகளின் தொகுப்பான மகாவம்சத்தை மையமாகக்கொண்ட வரலாற்று ஆய்வுப்போக்கை எமது வரலாற்று அறிஞர்கள் விலக்கிக்கொள்ளவேண்டும். எமது மண்ணின் மகிமையுள்ள வரலாற்று ஆதாரங்களை வெளிக்கொண்டுவர வேண்டும். மகாவம்சத்துக்கு முற்பட்டகால வரலாற்றையும் ஆய்வுசெய்ய முன்வர வேண்டும்.

## சங்ககாலமும் ஈழமும்

வடவேங்கட (திருப்பதி) மலைதான் தமிழ் கூறும் நல்லுலகின் வடக்கெல்லை எனவும், தென்குமரியைத் தெற்கெல்லை எனவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்திற்கு சிறப்புப்பாயிரம் வழங்கிய அவரது முதன் மாணாக்கராகிய பனம்பாரனார்

*வடவேங்கடம் தென்குமரி*
*ஆயிடைத்*
*தமிழ்கூறும் நல்லுலகத்து*

என்று சிறப்புப் பாயிரத்தின் முதலடியிலேயே கூறியுள்ளார். அவர் தமிழகத்தின் தெற்கெல்லையை குமரி என்று குறிப்பிட்டாரேதவிர குமரிமுனை என்று கூறவில்லை. இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே அன்றிருந்த பெரும் நிலப்பரப்புக்கப்பால் பாய்ந்த குமரியாற்றைத்தான் அவர் குறிப்பிட்டார் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஏனெனில், இன்றைய தமிழகத்திற்குத் தெற்கே பாண்டியராட்சிக்குட்பட்ட ஏழ்பனை நாடு, ஏழ்தெங்கு நாடு உட்பட 49 நாடுகளைக்கொண்ட ஒரு பெரிய நிலப்பரப்பாகச் சங்ககாலத் தமிழகம் இருந்ததென்றும், பின்னர் கடல்கோளினால் அப்பகுதிகள் கடலினுள் மூழ்கிவிட்டதென்றும் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டிருக்கின்றார். குமரி ஆறு பாய்ந்த அந்தப் பெரிய நிலப்பரப்பு கடலினுள் மூழ்கியதைத் தான்

*பஃறுளி யாற்றுடன் பன்மலை*
*அடுக்கத்துக் குமரிக் கோடும்*
*கொடுங்கடல் கொள்ள*

என்று சிலப்பதிகாரம் (11:19-20) கூறுகின்றது.



தென்னிந்தியாவிற்குத் தெற்கே பரந்திருந்த லெமூரியாவிற்றான் முதன் முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ் இனமே தமிழ்நாட்டின் ஆதிக்குடிகள் எனவும் லெமூரியாக் கொள்கையினர் கருதுவர். லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்துவந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்துவருகின்றார்கள்.

இவர்களிடம் இன ஒற்றுமை, மக்கள் உடற்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை காணப்படுகின்றன என்று வரலாற்றாசிரியரான டாக்டர் கே.கே.பிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள். (தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்)

இவ்வாறு, கடல்கொண்ட தென்நாடுதான் குமரிக் கண்டம் என்றும், லெமூரியா என்றும் வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றது. இக்கடல்கோள் பற்றி காலவழிச் செய்திக் கோவையான மகாவம்சமும் எடுத்துக் கூறுகின்றது.

மறைந்துபோன குமரிக்கண்டத்திலிருந்த 49 நாடுகளில் ஏனைய நாடுகளெல்லாம் அழிந்துபட ஏழ்பனை நாட்டின் ஒருபகுதி ஒரு தீவாக மாறியதென்றும், அதனால்தான் அத்தீவு ஈழம் என்ற பெயர் பெற்றதாகவும் வரலாற்றறிஞர்கள் பலர் கருதுகின்றனர். ஏழ்பனை நாடு என்ற பெயரே ஈழம் எனத் திரிபடைந்ததாகவும் முதலியார் இராசநாயகம் (யாழ்ப்பாணச் சரித்திரம் அதி.2) குறிப்பிடுகிறார். தென்னிந்தியாவைப்பற்றி எழுதும் கிரேக்க அறிஞர் 'மெகஸ்தெனிஸ்' இலங்கையை தப்ரபேன் என்று கூறுவதுடன், அஃது இந்தியாவினின்று தாமிரபரணி என்ற பொருநை ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள கடற்பகுதி அன்று நிலப்பகுதியாக இருந்தகாலத்தில், அந்த நிலத்தை ஊடறுத்து இலங்கையில் உள்ள புத்தளம்வரை தமிழகத்திலுள்ள தாமிரபரணி ஆறு பாய்ந்திருக்க வேண்டும். இலங்கையில் விஜயன் வந்திறங்கியதாகக் கூறப்படும் புத்தளத்திற்கருகே உள்ள பகுதிதான் தப்ரபேன் என்று பல வரலாற்றறிஞர்கள் கருதுகிறார்கள்.

விஜயன் இலங்கையில் வந்திறங்கிய இடம் தம்பபாணி என்று மகாவம்சம் கூறுகின்றது (6:47).

சிந்துவெளி நாகரீகத்தின் சொந்தக்காரர்களான தமிழர்கள் முதலாம், இரண்டாம் தமிழ்ச்சங்க காலங்களிலே தென்மதுரையும், கபாடபுரமும் உள்ளிட்ட குமரிக்கண்டத்தில் சிறப்புற்று வாழ்ந்ததை வரலாற்றுக் குறிப்புகளும், சங்க இலக்கியங்களும் சுட்டிக்காட்டி நிற்கின்றன. கடைச்சங்கம் இருந்த பாண்டி நாட்டில் நிலப்பரப்பு கி.மு. 2500 அளவில் கடல் கொள்ளப்பட்டபோது, ஈழத்தின் பெரும் பகுதியையும் கடல்கொண்டது.



கொற்றவை வழிபாட்டை விளக்கும் சோழர் காலச் சிற்பம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*'நாக நன்னாட்டு நானூறு யோசனை*
*வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்'*

எனும் மணிமேகலை வரிகள் (9:21-22) குமரிக்கண்டத்தின் கடல்கொண்ட பகுதியில நாகநாடு இருந்தது என்பதையும், அந்த நாடு நானூறு யோசனை (ஏறத்தாழ 4000 மைல்கள்) அளவுக்கு பரந்துபட்ட பெரிய நாடாக விளங்கியது என்பதையும் உறுதிசெய்கின்றது.

சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, ஈழத்தில நாகர்கள் சிறப்புற ஆட்சி செலுத்தி வந்ததாகவும் புத்தர் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்தபோது நாகதுவீபம் என்னும நாகநாட்டில நாகமன்னர் குடும்பத்தில் அரசகட்டில் தொடர்பாக எழுந்த பிணக்கைத் தீர்த்துவைத்ததாகவும் மகாவம்சம் (1:45-70) கூறுகின்றது. இதை மணிமேகலையும்,

*'வேக வெந்திறல் நாகநாட்டரசர்*
*சினமாசு ஒழித்து, மனமாசு தீர்த்தாங்கு,*
*அறச்செவி திறந்து, மறச்செவி அடைத்துப்*
*பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம்*
*உரைக்கும்'*

என்ற பாடல் வரிகளின் மூலம் (9:58-61) உறுதிசெய்கின்றது.


அந்த நாகநாடு 500 யோசனைக்குப் பரந்திருந்தது என்று மகாவம்சம் கூறுகின்றது. (1:48)

புத்தர் மூன்றாவது தடவையாக இலங்கைக்கு வந்தபோது கல்யாணியில் (இன்று தென்னிலங்கையில் உள்ள களனியில்) நாகர்கள் அரசு இருந்ததாகவும், அந்தநாட்டு மன்னனும் நாகதீப மன்னனும் உறவினர்கள் என்றும் மகாவம்சத்திலேயே (1:63-78) கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து விஜயன் வருகைக்கு முன்னர் இலங்கைத்தீவின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் நாகர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகின்றது.

புத்தர் மூன்றாவது தடவை இலங்கைக்கு வந்துசென்று 37 ஆண்டுகளின் பின்னர்தான் விஜயன இலங்கைக்கு வந்தான் என்பதும் மகாவம்சத்தின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே, சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் வருவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே இலங்கைத்தீவு முழுவதும் நாகர் குடிமக்கள் சிறப்புற வாழ்ந்து ஆட்சி நடத்தி வந்தார்கள் என்பது ஐயத்திற்கு இடமற்றது.

## நாகர்கள் தமிழர்களே


கடல்கொண்ட குமரிக்கண்டத்திலும், இலங்கையிலும் அன்று வாழ்ந்த நாகர்கள் தமிழக குடிமக்களே என்பதை பலவேறு வரலாற்றுச் சான்றுகளும், இலக்கிய நூல்களும் எடுத்தியம்புகின்றன. நாகர்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையே திருமணத் தொடர்புகள் நீண்டகாலமாக இருந்துவந்திருக்கின்றது. நாகர் சோழர்களுக்கிடையேயான திருமணத் தொடர்பு


திரைகடல் ஓடியும் திரவியம் தேடுகின்ற தமிழரின் பண்டைய துறைமுக நகர்களில் ஒன்று

பற்றி மணிமேகலையும் (24:28-60) எடுத்தியம்புகின்றது.

சங்ககாலத்தில் சங்கத்தமிழ்ப் பாக்களைப் பாடிய நாகர் என்னும் பெயர்கொண்ட 18 புலவர்களைப் பற்றி சங்கப் புலவர் வரிசையிலிருந்து எம்மால் அறியமுடிகின்றது. முதற் சங்ககாலத்து முரிஞ்சியூர் முடிநாகனார் தமிழர்களே. கல்வியறிவிலும், நாகரீகத்திலும் இவர்கள் மிகச் சிறந்தவர்களாகவே விளங்கியிருக்கின்றனர். ஏனெனில், தமிழில் பெரும் புலமை இல்லாதவர்களாயிருந்தால் இவர்களால் சங்கத் தமிழ்ப் பாடல்களை இயற்றியிருக்கமுடியாது.

அதுமட்டுமன்றி, ஈழத்துப் பூதந்தேவனார்




தொடக்கம் அம்மெய்யநாகனார், இளநாகனார், இனிசந்தநாகனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், தீன்மதிநாகனார், நன்நாகனார், மதுரைக்கடையத்தார் மகன் வெண்ணாகனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பூதனிளநாகனார், மதுரைப் பெருமருதிளநாகனார், மருதனிளநாகனார், முப்பேர் நாகனார், விரிச்சியூர் நன்நாகனார், வெள்ளைக்குடிநாகனார் என்னும் பதினாறு ஆண்பாற் புலவர்களும், அஞ்சியத்தை மகள் நாகையார், நன்நாகையார் எனும் இரு பெண்பாற் புலவர்களும் நாகர்குடிவழிவந்த என்னும் புலவரும் சங்கத் தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். ஈழத்தைச் சேர்ந்தவரான இப் புலவரின் தமிழ்ப் புலமையே ஈழத்தில் அவர் காலத்திற்கு முன்பே (சங்க காலத்திற்கு முன்பே) தமிழ்மொழி சிறப்புற விளங்கியமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தொடரும்

ஆதாரம்
அறிவொளி சஞ்சிகை
தமிழீழம்



www.tamilarangam.net

# இப்படியும் ஒரு காலம்

அ. இரவி

தமிழர்களின் உரிமைப் போராட்டம் வலுப்பெறத் தொடங்கியதும் அதை அடக்க சிங்களப் பேரினவாதம் அரசபடைகள் மூலம் வன்முறையைப் பிரயோகித்தது. இதற்கெதிரான ஆயுதப் போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டம் பரிணமித்தது. இந்தப் பரிணமிப்பு நிகழ்ந்த காலகட்டத்தைச் சித்தரிக்கின்றது. 'இப்படி ஒரு காலம்' சிறீலங்கா இராணுவம் எமது கிராமங்களில் திரிந்த காலத்தில் எமது இயல்பும், வாழ்வும் எப்படி மாறின என்பதைச் சொல்கிறது இக்கதை. இது 1985இல் எழுதப்பட்டது. 1989இல் 'திசை' வாரப் பத்திரிகையில் வெளியானது.

இப்பொழுதெல்லாம் பின்னேரங்களைத் துக்கமாகக் கழிக்கவேண்டியிருக்கிறது. ஊரில் ஒருவருமில்லை, இருப்பவர்கள் நெருங்கிய நண்பர்களுமல்ல. தோழர்கள் வேறுவேறு ஊர்களாக அமைந்துவிட்டார்கள். நண்பர்கள் எதற்கோவெல்லாம் கடல் கடந்து போய்விட்டார்கள். ஊரும் நாடும் அப்படியே இருக்கின்றது. 'அப்படியல்ல நாடு மாறித்தான் போச்சு' என்று யாரேனும் ஒருவன் சொல்லக்கூடுமெனில், அதுவும் உண்மைதான். என்னவோ தெரியவில்லை, ஒவ்வொருவரும் பீதிகொண்ட முகங்களுடனேயே வாழ்கிறார்கள். ஒரு உண்மையை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள், தங்கள் மரணம் அகாலமாகவே நிகழுமென்று. ஒவ்வொரு நாளும், கிழக்கில் வானம் வெளுத்து, சூரியனும் வெளிக்கிளம்பி, புதிது புதிதாகப் பிறப்பது உண்மையேயாகிலும் பீதியுடனேயே கழிகின்றது. இதுபற்றி ஒன்றும் அதிகம் சொல்லத் தேவையில்லை. காலம் அப்படித்தான் ஆயிற்று!

றோட்டு குண்டும் குழியுமாகி உள்ளது. ஒரு வாகனம் செல்லுமென்றால், தொடர்ந்து புழுதிப் படலமும் செல்கின்றது. அதிலும் இராணுவ வாகனங்களென்னும் போது, புழுதிப் படலம் பின்னால் நீட்டி இருக்கும் துப்பாக்கிகளை மறைத்துக்கொண்டு செல்லும். ஒருமுறை அவை சடசடத்தால்தான், புழுதியும் போம் எல்லாம் போம்.

அநேகமாக பயணங்கள்கூட இப்பொழுது ஒழுங்கைகளால்தான் மேற்கொள்ளப்படுகின்றன. ரவுணிற்குப் போவதென்றால் ரெயில்வே லைனை ஒட்டிப்போகிற பாதை சௌகரியமாக உள்ளது. அப்பாதை சில இடங்களில் தோட்டங்களுக்கூடாக ஊடறுத்து வளைந்து சென்றாலும் பிறகும் வந்து ரெயில்வே லைனுடன் ஒட்டிக்கொள்கின்றது. றோட்டால் போகமுடியாது பலர் அதனைப் பாவிக்கின்றார்கள். நிறைய நாட்களாகப் புகையிரத வண்டி ஓடாததால் சிலிப்பர் கட்டைகளுக்கிடையிலும் தண்டவாளத்தருகிலும் புற்கள் உயரமாகவும், செழிப்பாகவும் வளர்ந்து உள்ளன. புகையிரத வண்டி ஒரு திடகாத்திரமான, போர்க்குணம் மிக்க வாகனமாகவே தெரிகின்றது.

அன்று இரவுத்தங்கல் உதயனின் அண்ணர் வீட்டில், பின்னேரங்களைத் துக்கமாகக் கழிக்க வேண்டியிருக்கின்றது என்று சொன்னபோது இதனையும் சொல்லியிருக்க வேண்டும். இரவு எங்கு தங்குவது, எப்படித் தங்குவது, இதுதான் சுதந்திரமான கடைசி இரவா என்று யோசிப்பதனாலும் அருமையான மாலைப்பொழுது துக்கத்தைத் தருகின்றது. 'ஹெலி' இரவில் வெளிச்சப் பொட்டைப் பாய்ச்சியபடி வரும்போது, இந்த வெளிச்சப் பொட்டின் பாய்ச்சல் தன்னைத் தேடத்தானோ என்பதும் ஒரு திகிலைக் கொடுக்கின்றது. அந்த வெளிச்சப்பொட்டு யன்னலுக்கூடாக அறைகளையும் துழாவியபடி செல்லும். ஒரு நாளிரவு தண்ணீர்த் தாங்கியின் கூரைமீது படுத்திருக்கும்போது ஹெலியின் சடசடப்புக்கேட்டது. திடுக்கிட்டு முழித்தபோது தன்மீது பனித்துளி படிந்திருப்பதை உணர்ந்தான். ஹெலியின் வெளிச்சப் பொட்டிலிருந்து தப்புவதற்காக தண்ணீர்த் தாங்கியிற்குள் குதித்தான், சள சளத்தது. ஹெலி போனபிறகு தண்ணீர்த் தாங்கியிற்குள் தன் உடல் விறைத்திருப்பதை உணர்ந்தான். நித்திரை வராத இரவுகளில் இதுவும் ஒன்றானது.



தோட்டங்களினூடாக ஊடறுத்துச் செல்கின்ற பாதையால் உதயனின் அண்ணர் வீட்டிற்குச் செல்ல வேண்டும். தோட்டங்களுக்கிடையில் வெள்ளைமண் போட்ட பாதை இருந்தது. பனைகளுக்கும் பற்றைகளுக்கும் இடையில் சின்னத் தேவாலயம் அதன் சிலுவையுடன் தெரிந்தது. தோட்டக்காரர் சோர்வில்லாமல் உழைத்தார்கள்.

போனபோது உடன் ரீ தந்தார்கள். சிமிளி துடைத்து, லாம்பு ஏற்றி பிறகு இராச்சாப்பாடாக அரிசிப்பிட்டும் வாழைப்பழமும் தந்தார்கள்.

ராம் படித்துக் கொண்டிருந்தான். 'நாளைக்குச் சோதினை'

'என்ன பாடம்?'

'கணக்கு....'

'விளங்காத கணக்கு இருந்தால் கேள்' என்று அருகில் இருந்தான். ராம் கூச்சப்பட்டான்.

'காலையில் கலண்டருடன் புறப்பட்டான் ராம். இந்த நேரம் கோபியும் பாடசாலைக்குப் புறப்பட்டிருப்பான். அவன் தனியாகச் சோகத்துடன் செல்வான் என்றுதான்பட்டது. காலை வெயிலுக்கு அவன் அதனை அனுபவித்துச் செல்வான். ஒருமுறை நிறைய நாட்களுக்குப் பிறகு ஊருக்கு வந்தபோது பாடசாலைக்குக் கிட்ட பனைகளுக்கூடான ஒற்றையடி ஒழுங்கையில் தனித்துக் கோபியைக் கண்டான். 'மாமா...' என்றான். கொஞ்சம் கண் கலங்கியதாகத்தான் இருக்க வேண்டும். 'ராத்திரியும் ஆமிக்கார..' என்று அச்சமூட்டும் ஒரு செய்தியைத்தான் சொன்னான்.

'நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகேல்லை.. உங்களோடைதான் வரப் போறன்...' என்று சிணுங்கினான் அவனைத் தூக்கிக் கொஞ்சிவிட்டு சைக்கிளில் ஏற்றி னான்.

'உங்களிற்கு ரோகினி ரீச்சரைத் தெரியுமோ?' என்று கேட்டான் கோபி.

'தெரியும்...' என்றான்.

'அவ உங்களைக் கேட்டவா... மாமா சுகமாக இருக்கிறாரோ என்று...'

ரோகினியைத் தெரியாதா? ஒல்லியாகச் சின்னவளாக, தவணை விடுமுறைக்கு அம்புலிமாமா, ராஜாராணிக் கதைகளை வாசித்துவிட்டு பள்ளிக்கூடம் தொடங்க, ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கதை யாகச் சொல்கிறவள். பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் மூன்று நாள் உல்லாசப் பயணத்துக்குப் போகும்போது, இவனு க்குப்போக வசதிப்படாததனால் புறப்படு கின்ற அன்று காலையில் பள்ளிக்கூடம் போய், பஸ்ஸில் எல்லோரும் ஏறியவுடன் முகம் கறுத்துக் கையாட்டிப் போன ரோகினியைஇவனுக்கு மறக்கமுடியுமா? பிறகு வந்து உல்லாசப் பயணம் பற்றி ஒருவரிதானும் மறந்தும் சொல்லாமல் அம்புலிமாமாக் கதைகளையே பிறகும் சொன்ன ரோகினியா, இன்றைக்கு ரீச்சர்?

'ரோகினி ரீச்சர் நல்லாக் கதைகள் சொல்லுவாவோ?' என்றான். 'ஓம் நெடுகக் கதைதான் சொல்லுவா, எங்களுக்கும் கேக்க ஆசையாயிருக்கும்' என்றான் கோபி. கோபிக்கு இன்றைக்குப் பரீட்சை இருக்கும், கலண்டர் கொண்டு போவான்.

வாழைஇலையில் சூரியன் பச்சைப் பரப்பில் தெரிந்தான். முந்தநாள் கொத்தப் பட்டு நிலம் சிவப்பாக இருந்தது. வெங் காயத்தாள்களின் நுனியில் பனித்துளி மினுங்கியது. ஒரு கிழவர் மிசினை சைக்கிளில் உருட்டிச் சென்றார். முற்றத் தில் இருந்த கனகாம்பரம் பூத்து இருந் தது. 'அம்மா போட்டு வாறன்' என்றபடி தலையிலிருந்து எண்ணெய் வழிய ராம் கலண்டரை ஆட்டியவாறு சென்றான்.

பாஸ்கரனும் கலண்டரை ஆட்டிய படியே வருவான். சேட் பொக்கற்றுக்குள் கூரான பென்சில் இருக்கும். பள்ளிக்கூட முற்றத்தில் குனிந்து 'கஞ்சல்' பொறுக்கும் போது அவனின் கை பொக்கற்றைப் பொத்தியபடி இருக்கும். சிவபெருமானின் படம் போட்ட கலண்டர்தான் அவன் நெடுகலும் கொண்டுவருவான். ஆனால், சிவராசா சரஸ்வதி படம் போட்ட கலண்டர் கொண்டுவந்து சோதினை எடுத்தாலும், நல்ல மாக்ஸ் எடுப்பதில்லை. அதன் கார ணம் என்னவென்று தெரியவில்லை. அவன் என்னதான் இருந்தாலும் சோதினைக்கு முதல் வருகிற வெள் ளிக்கிழமை அம்மாள் கோயிலுக்குப் போவான். சோதினைக்குவாற கால மையும் கோயிலுக்குப் போய் கற்பூரம் கொழுத்திவிட்டுத்தான் வருவான். நெற்றி யில் விபூதி இல்லாவிட்டாலும் (எண்ணெய் வழிவதால் அழிந்துவிடும்) காதில் பூ இருக்கும். அந்தப் பல்லுமிதந்த ராணிப் பெட்டைதான் பாவம். ஒருநாளும் சோதினைக்கு கலண்டர் கொண்டுவாறேல்லை. இத்தனைக் கும் குடிசை வீட்டிலிருந்தாள். அதுதான் காரணமாகவும் இருக்கவேண்டும்.

ஒருக்கால் வெங்காயம் கிண்டுக் காலத் தில் நடந்த சோதினைதான் நன்றாக ஞாபகம் இருக்கிறது. சோதினைக் காலங்களுக்குத் தான் சிவராசா, முருகையா, கனகரத் தினம், விசயபாலன் ஆக்கள் ஒரு பக்க மாகவும் விசயன், மணி, ஜீவன், ஜெயம், குமார், பாஸ்கரன் ஆக்கள் ஒரு பக்கமாகவும் நின்று பிடித்த சண்டையில் மணியின் கலண்டர் கிழிந்துபோனது. சண்டை பிடிக்க வேண்டிய உற்சாகத்தை விசயன்தான் கொடுத்தான். 'நீ அடி பிறகு நான் வாறன்' இந்தச் சண்டையும் போனமுறை நவராத்திரிப் பூசைக்குள்ளேயே தொடங்கிவிட்டது. ரேடியோ பற்றரி எடுத்து, ஆர் சுவாமிக்கு லைற் போடு வது என்பதுதான் அடிப்படைப் பிரச்சினை. அடிப்படைப் பிரச்சினைபற்றி ஒன்றும் தெரி யாமலே மணியின் கலண்டர் கிழிந்து போனது. அழகிய பூக்களும், புன்னகை கொண்ட குழந்தையினதும் படம் உள்ள கல ண்டர் அது. கிழிந்துபோனதையிட்டு மணிக்கு நிரம்பிய துக்கம். அழுகைகூட வந்தது. அவ னால் யாரை ஏசமுடியும்? அல்லது யாரிடம் தன் குறையைச் சொல்லி அழ முடியும்? இந்த வருடம் முடிய அந்தக் கலண்டரைத்தான் எடுத்துப் பெட்டிக்குள் பூட்டி வைப்பமென்று தான் அவன் யோசித்தான். ஆனால் கலண்டர் இஃதென்றும் யோசிக்காமல் கிழிந்துபோய் விட்டது. இன்னும் சொல்லப்போனால் இந்தக் கலண்டர் கிழிந்ததையிட்டு அவனுக்குப் பயம் வேறு. ஆனால், நல்ல காலம், அன்றைக்கு மணியின் காணியில் வெங்காயக் கிண்டு.

அப்பா காணியோடேயே மினக்கெடுவார். அம்மாவிற்கு கலண்டரைப்பற்றிய அக்கறை இல்லை. மணி கலண்டரை எறிந்துவிட்டுக் காணிக்குள் போனான். ஒரு பக்கத்தில் வெங் காயக் கிண்டு நடக்க அப்பா மறுபக் கத்தில் வெங்காயத்திற்கு தண்ணி கட்டிக் கொண்டிருந்தார். அப்பா நன்றாக வியர்த் திருந்தார். மணியும் குனிந்து வெங்காயம் கிண்டினான். வெங்காயத்தாள் அறுந்து கொண்டிருந்தது. வெங்காயம் கிண்ட பாரை தரச்சொல்லி நாகம்மாவைக் கேட்டான். சரசுகூட பாரைகொடுக்க மறுத்துவிட்டாள். அப்பா 'உந்த வேலையை விட்டுப்போட்டு எனக்குப் போய் சாப்பாடு வாங்கிக்கொண்டு வா' என்றார். பிறகு 'நீ சாப்பிட்டியோ?' என்று கேட்டார். மணி தலையை ஆட்டினான். 'நீயும் சாப்பிட்டிட்டு எனக்கும் கொண்டுவா' என்றார். போகும்போது 'அண்ணையையும் வரச் சொல்லு....' என்று கத்தினார்.

சாப்பாட்டுக்கு மீன்குழம்பும் தக்காளி வெள் ளைக்கறியும் இருந்தது. மணிக்கு இரண்டும் ஏனோ பிடிக்கவில்லை. கொஞ்சமாகச் சாப் பிட்டான். அண்ணையையும் வரச்சொல்லி விட்டு பிறகு தோட்டத்திற்குப் போனான்.

தோட்டத்திற்கு அங்கால்ப்பக்கம் சின்ன மணியின் கள்ளுக்கொட்டில் இருந்தது. பனையினதும் இலந்தைமரத்தினதும் நிழலில் இருந்தது அது. சின்னமணியின் கள்ளுக்கொட் டிலோ பஞ்சனின் கள்ளுக்கொட்டிலோ திறம் என்றுகூட பாலனிடம் ஒருமுறை சண்டைபிடித்திருக்கிறான். இவ் வளவிற்கும் மணி சின்னமணியின் சொந் தக்காரன் இல்லை. ஆனால், பாலன் பஞ் சனின் சொந்தக்காரன். சிலவேளை, மணியின் தோட்டக்காணிக்குப் பக்கத்தில் சின்னமணி யின் கள்ளுக்கொட்டில் இருந்ததுதான் இத் தனைக்கும் காரணமாக இருக்கலாம்.

சின்னமணியின் கள்ளுக்கொட்டில்தான் திறம் என்று, சின்னமணி கள்ளை வடிதட்டில் வடித்துக்கொடுக்கிறார் என்பதனை ஆதார மாக வைத்தே, மணி சொன்னான். ஆனால், பாலன் சொன்னது விசித்திரமாகவும் ஒரு வராலும் ஏற்கமுடியாததாகவும் இருந்தது. அவன் சொன்னது இதுதான், பஞ்சன் பன்னாடையில் அல்லது தும்பில் கள்ளை வடித்துக்கொடுக்கிறான் அத்துடன் பஞ்சனின் கள்ளுக் கொட்டிலுக்கு வருகின்றவர்கள் பெரிய மீசை உள்ளவர்கள். அவர்கள் அதனாலும் வடித்துக் குடிப்பார்கள் என்பதே யாகும். பெரிய மீசை ஆண்மையின் சின்னம். வீராச்சாமியண்ணைக்குப் பெரிய மீசை. ஒற்றைக் கையாலேயே நவரத்தினமண் ணையை அடித்து விழுத்தி எழும்ப விடாமல் பண்ணினவர்.

சிலவேளை, இதிலும் நியாயம் இருக்கும் என்றுதான் பட்டது மணிக்கு. என்றாலும், அவன் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை.

சின்னமணியின் கள்ளுக்கொட்டிலடியில் இலந்தை மரம் நின்றது. சின்னுாட்டிப் பழ த்தை அது தரும். (ஒருமுறை சிவராத் திரிக்கு, முழித்து 'பூதத்தம்பி' கூத்துப் பார்த்த போது நிறைய நேரமாகக் காற்சட்டைப் பொக்கற்றுக்குள் வைத்து இலந்தைப் பழத் தைத் தின்றுகொண்டிருக்க முடிந்தது) ஆனால், நிறையவும் இருக்கும், இனிப் பாகவும் இருக்கும். இனிப்பாக இருந்தமைக்கு என்ன காரணம்? அருளண்ணையின்ரை, செல்லப்பா அண்ணற்றை, நாகமணி அப்பு வின்ரை தோட்டக் கிணத்திலை உள்ள சூத்திரத்திலை ஏறி நின்றுகொண்டு நிறைய நேரம் சுத்தலாம்.... 'உம்பா, உம்பா' என்று மாட்டைக் கலைக்கலாம், சூத்திரத்தை வளைக்கிற நாதன் சண்டிக்கட்டுக்குள் இருந்து புளுக்கொடியலும், தேங்காய்ச் சொட்டும் எடுத்துத் தருவான்.

இந்த இலந்தை மரம் இனிப்பாக இருந் தமைக்கு அநேகமாக இதுதான் காரண மாக இருக்கவேண்டும். குடிக்கிற கள்ளின்ரை அடிமண்டியெல்லாம் இலந்தை மரத்தினடி யில்தான் ஊற்றுவார்கள் ஆனால், கள்ளு இனிப்போ தெரியவில்லை. ஆனால், குடிக்கிறவையளின்ரை முகச்சுளிப்பைப் பார்த் தால் அது புளிப்பாகத்தான் இருக்க வேண்டும்.

ஒருக்கால் இந்திரனிடம் விஸ்தாரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அவன் இரகசியமாகக் கள்ளுக்குடிப்பதாக ஊரில் பேசிக்கொள்கின்றார்கள். ஆளும் கொஞ்சம் முரடன்தான். ஆனால், நல்லவன். பள்ளிக்கூடத் திற்கு வருவதும் குறைவு. அநேகமான



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இப்பொழுதும் இருக்கலாம்

நாட்களில் பட்டி மேய்க்கப்போவான். அவன் மௌத்ஓகனும் கொண்டுதான் போவான். (இந்த மௌத்ஓகன் எங்கேயாகிலும் களவெடுத்ததாகத்தான் இருக்கவேண்டும்) அவன் சுடலை மடத்திலிருந்து அதனை ஊதுவான். நிரம்பவும் ஆச்சரியமான விஷயம் அவன் மத்தியம் சரியாகப் பன்னிரண்டு மணிக்கும்கூட சுடலையில் இருப்பான் என்பதே. அவன் பேய்கள் ஆடுவதை தான் கண்டதாகச் சொல்லுவது நம்பும்படியாக இருக்கும். ஒருமுறை நூறு வயதுக்குமேல் வாழ்ந்த வள்ளிப்பிள்ளைப் பெத்தாச்சியின் பேயையும், தான் கண்டதாகச் சொன்னான். அந்தப் பேய் 'போயிலைக் காம்பு' வாய்க்குள் போட்டு அதக்கியது என்றும் சொன்னான். அதனால்தான் அது வள்ளிப்பிள்ளைப் பெத்தாச்சிதான் என்று உறுதியாக நம்புகிறதாகவும் சொன்னான். அவன் என்னவோ அச்சம்தரும் ஒன்றுக்கும்கூடப் பயப்படுவதில்லை. ஆனால், மணி இவன் கதை சொன்ன அன்று இரவு படுக்க முன்னர் நன்றாகக் கும்பிட்டு விபூதியும் அப்பிக்கொண்டு அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையில் படுத்தான். அவன், கனவில் போய் வரக்கூடாது என்று பிரார்த்தித்தான்.

இந்தக் கள்ளுக் குடிக்க தொந்தி உள்ளவர்கள்தான் அதிகம் வருவதுண்டு. அதிலும் கனகராசண்ணருக்குப் பெரிய தொந்தி. ஆனால், ஒருநாள் பொழுதுபட இலந்தைப் பழம் பொறுக்கப் போனபோது தான் தொந்தி இல்லாத நிறையப்பேர் கள்ளுக்குடிப்பதைக் கண்டான். அவர்களில் அநேகமானோர் மண்வெட்டி சுமந்து வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் பாட்டுப் படித்தான்.

தோட்டத்து வாய்க்காலில் காகம் குளித்து, சூரியன் மறைந்துபோய் நிறைய நேரத்திற்குப் பிறகும் அவன் பாடிக் கொண்டதை நின்றபடியே கேட்டான். அவன் பாடல் எல்லாவற்றையும் அசைவற்று நிற்கப் பண்ணியது. மணி மனதுக்குள் என்னவோ செய்வதாக உணர்ந்தான். அழுகை வரும் போல இருந்தது. எதற்கு அழவேண்டும்? எல்லோரும் மௌனமாகி இருக்க அவன் தொடர்ந்து பாடினான். அவன் ஒரு கூத்திலுள்ள பாட்டைத்தான் அப்படிப் பாடினான் போல. பாடியவனுக்கே இறுதியில் அழுகை வந்தது. சின்னமணி லாம்பைக் கொளுத்தி வைத்தார். செல்லன் கொண்டுவந்த கள்ளை பெரிய பானைக்குள் ஊற்றிக்கொண்டார். பாடியவன் இன்னொரு போத்தல் கள்ளை வாங்கி 'மடக் மடக்' என்று குடித்தான். முகம் சுளிக்கவில்லை. இனித்திருக்க வேண்டும்.

அம்மா, 'மணி,,,ஈ' என்று கத்திக் கூப்பிட்டார். முகம் கழுவி, தேநீர் குடித்த பிறகு, மஞ்சளாக உயிரிழந்து கொண்டிருந்த லாம்பின் வெளிச்சத்தில் படித்திருக்கும்போது அந்தப் பாட்டு என்னவோ செய்வதாகத்தான் உணர்ந்தான். அவன் தலையை அசைத்துப் பாடினான். அவன் முன்னால் கும்பி மணலில் புதைக்கப்பட்ட பிளாவில் கள்ளு இருந்தது. அவன் பாடிக்கொண்டு போனான். அவனுக்குத் தன்னைத் தெரியவில்லை உலகத்தைத் தெரியவில்லை, எது தெரிந்திருக்க வேண்டும்? அவன் கரிய மேனியனாக இருந்தான். லாம்பின் சாடையான வெளிச்சத்தில் அவன் மேனி பளபளத்தது. அவன் பக்கத்தில் மண் வெட்டியும் கத்தியும் இருந்தன. பாடி முடித்த பிறகு கள்ளை மடக்கென்று குடித்தான். அது ருசித்திருக்க வேண்டும், அது இனித்திருக் கலாம். இனிக்குமா, புளிக்குமா என்கிற சமாச்சாரமெல்லாம் அப்புறம் பத்துப் பதினைந்து வருஷத்திற்குப் பிறகுதான் தெரிய வந்தது மணிக்கு. அதெல்லாம் ஒரு கடற்கரையில் நடந்தது. (அரிபனைக் கள்ளு எப்படி இனிப்பென்பதும், காய்வெட்டிக் கள்ளு ஆளை எவ்வாறு மடக்குமென்றும், மார்க்கண்டப்புவின் நாளுக்குத்தக்க ஆளுக்குத்தக்க, தண்ணிக் கலப்புப் பற்றியும், கள்ளுக்குடிப்பதற்கு சிரட்டையா, பிளாவா இனிமையானது என்பது பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லலாம்)

முதன்முதலாகக் கள்ளுக் குடித்தபோது மோகனும் இருந்தான். ஒரு முட்டி கள்ளை கிருபா எங்கிருந்தோ கொண்டுவந்தான் அன்றைக்கு இன்னொரு உலகம் தெரிந்தது. துக்கம் தெரியவில்லை, விரக்தி தெரியவில்லை, இழப்பு துரோகம் ஒன்றும் தெரியவில்லை. வஞ்சிக்கப்பட்டதும்கூடத் தெரியவில்லை. தெரிந்தவையும் புறங்கையால் தட்டிவிடக்கூடியவையாக இருந்தன. அல்லது மனம் விட்டு அழுது தீர்க்கலாம்போல இருந்தது. இன்னும் சொல்லப்போனால் துக்கத்தை, விரக்தியை, இழப்புக்களைத் தந்தவர்களின், துரோகியாக இருந்தவர்களின், வஞ்சிப்புச் செய்தவர்களின், முகங்களில் காறித் துப்பியதுபோல இருந்தது.

சரி, அவ்வளவுதானா? இத்துடன் முடிந்ததா? வாழ்க்கை இன்பம் இல்லையா? இன்பம் தான் எப்படி அது மறைந்தது? யாரைக்கேட்டு இன்பத்தைத்தொலைத்தார்கள்? வாழ்க்கையில் நம்பிக்கை எப்படி அற்றுப்போயிற்று? அற்றுப் போயிற்றுத்தானா? இதிலிருந்து பிய்த்துக் கொண்டு எழப்போகிறவன் யார்? இனி, இனி துக்கமான சம்பவங்களை நினைவூட்ட வேண்டியதாக இருக்கின்றது.

அன்றைக்கு மோகன் இந்தியாவிற்குப் போகப் போகிறேன் என்று கடலுக்குள் நடக்கத் தொடங்கினான். 'என்னாலை ஏலாது. அவனை இழுத்துக்கொண்டு வா. அவன் இப்படியே கடலுக்கை போய் செத்துப் போவன்' என்று பாலா கத்தினான். சிரித்தபடி மோகன் போனான். ஒருபெரிய அலையுடன் திரும்பி வந்தான் ஆயினும் என்ன, அவன் இப்ப இங்கு இல்லை. அந்தக் கடற்கரைக்கு ஒருவரும் போகவும் முடியாது. இந்த இடத்தில் ஒரு துயரக்கதை சொல்லவேண்டும். மோகன் கடல் கடந்து இந்தியாவிற்குத் தப்பிப் போயிருக்கிறான். அவன் எப்படிப் போனான் என்று சொல்லத் தெரியவில்லை. அவன் போவதற்கு முதநாள் இதனைச் சொன்னான், 'எனக்கு எங்கன்ரை நாட்டை விட்டுப்போக ஏதோ விருப்பமே? போக வேண்டியிருக்குது, நான் போனாலும் திரும்பி வருவன். இது எங்கன்ரை நாடு. நீதான் கவனமாக இருக்க வேணும்...' வைரவர் கோயிலுக்கு ஐயர் வந்து பின்னேரப் பூசை செய்துவிட்டுப் போன கொஞ்ச நேரத்தில்தான் றோட்டையும் அடிக்கடி பார்த்துக்கொண்டே இதனைச் சொன்னான்.' இது எங்கன்ரை நாடுதான் இதில் யாருக்கும் சந்தேகமில்லை. கடல் அப்படியே இருக்கின்றது. எங்கள் மீனவர்கள் அதில் மீன் பிடிக்கின்றார்கள். நிலம் அப்படியே இருக்கின்றது. உழவர்கள் அதனை உழுகின்றார்கள், விதைக்கின்றாக்கள், அறுவடை செய்கின்றார்கள். பனை அப்படியே இருக்கின்றது. எங்களவர்கள் அதில் கள்ளிறக்குகின்றார்கள். இது எங்கன்ரை நாடுதான். அதிலும் யாருக்கும் சந்தேகம் வரக்கூடுமோ?

பாவம் மோகன் அவன் ஏன் இந்தியாவிற்கு ஓடவேண்டியிருக்கிறது? தாயையும் தகப்பனையும் மொட்டுப்போல அருமையான ஒரு தங்கையையும் விட்டுவிட்டு இந்தியாவிற்குச் சென்றிருக்கிறான். அவன் அங்கு போய் எப்படி நிம்மதியாகச் சீவிக்க முடியும்? எவ்வளவு இரவுகளுக்கு அவன் அழப் போகிறான்? தூக்கம் வராத இரவுகள் அவனுக்காகக் காத்திருக்கின்றன.

எல்லோரும் நித்திரையாக இருந்த ஒரு சாமம், புரிபடா மொழியின் கூச்சலுடன் இராணுவத்தினர் அவன் வீடுபுகுந்தனர். பிறகு இரண்டு, மூன்று நாட்கள் விட்டு விட்டு வந்தனர். அவன் ஒருநாள் மாத்திரமே நெஞ்சில் முள்ளுக்கீற, நான்கு வேலி பாய்ந்து, பற்றைகள் நிறைந்த வெளிதனில் பாம்புக்கும் அஞ்சாது ஓடினான். பிறகுவேறு குடில்களில் கிடந்தான். இனி ஓட இயலாது என்று களைத்த நேரத்தில் இந்தியாவிற்கு ஓடிவிட்டான்.

இப்படித்தான் இவைகளைச் சொல்ல முடிகின்றது. மோகனுக்கு என்ன நேர்ந்தது. அவனை ஏன் இராணுவம் தேடியது? அவை அப்புறமான, தினசரியான சமாச்சாரங்கள். எல்லாவற்றையும் தொடர்பாகச் சொல்ல முடியாவிட்டாலும் இப்படித்தான் துண்டு துண்டாக அறுந்து போனதுபோல சில செய்திகளைச் சொல்ல வேண்டியதாகின்றது.

அநேகமான மாலை வேளைகளில் உயரப் பனங்கூடல் கள்ளடிப்பதற்கு நல்ல இடமாகத் தெரிந்தது. 'பரடைசிற்குப் போவமா?' என்று கேட்டபடி நெடுத்துக் கறுத்த குலம் வருவான். உக்கிரமாக வீசுகிற சோளகக் காலங்களில்தான் அதுவும் அதிகம். 'காத்து நல்லா ஏத்தும்' என்றுதான் ஐயப்பன், பனையிலிருந்தபடியே சொல்லிக்கொள்வார். மிகவும் காற்றோட்டமாக இருந்த வெளிகளில் தூரத்துக் கோயில் திருவிழாக்களில் இருந்து பாட்டு இடையிட்டு, இடையிட்டுக் கேட்கும். ஐயப்பனும்கூட அம்மாள் கோயில் திருவிழா என்றால் பிந்தித்தான் தருவார். ஐயப்பனின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெற்றியில் அப்போது சந்தனம் இருக்கும்.

தோட்ட வெளிகளை மேவிய காற்று, பக்கம் பக்கமாகச் சரிந்து காவடி ஆடுகிற பனைகள். தூரத்தில் விட்டு விட்டுக் கேட்கிற பாடல். சிலவேளை தணிந்து மெல்லச் சேதி சொல்லும் காற்று, கொஞ்சமென்றாலும் காதலி கோபித்த கதையைச் சொல்கின்ற குலம். ஆகாவென்று சிரித்தபடி விஜி. பராசூட்டி, மோகன், வெண்நுரை ததும்புகின்ற கள்ளு வேறென்ன வேண்டும் இந்த மாலைப் பொழுதுக்கு?

அவ்வாறு அற்ற சூழலில்தான் இதுகூட ஒரு சின்னச் சோகமாக இருந்தது. சூரியன் மேற்குப் பக்கமாகச் சரிந்து கொண்டிருந்த ஒரு மாலைப் பொழுதில் யாவரும் அதனை உணர்ந்தார்கள். ஆட்டு மந்தைகள் தெற்கு நோக்கிப் போயின. ராசன் அதனை மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் என்னவோ சோக வடிவாகத் தோன்றினான். அந்த அந்தி நேரத்தில் அவன் அனாதையாகி நின்றான். எல்லோரும் இதனை ஆமோதித்தார்கள். அவன் தனித்து ஒருவனாக நின்றான். சோகத்துடன் கூடி மெலிதாகப் புன்னகைத்தான். அவன் துக்கப்பட்டுச் சொல்லும் கதைகளை அந்த ஆட்டுமந்தை மெல்லக் கேட்பது போல இருந்தது. அவன் பிறகொரு நாளைக்கென்றொரு செய்தி வைத்திருந்தான். பிறகொரு நாளைக்கென்றொரு செய்தி வைத்திருந்தோர் அநேகம் பேர். ஒவ்வொருவராக நினைவூட்டவேண்டியதில்லை. அந்நியக் கால்கள் பதிந்த காலம் இது. அவ்வளவுதான், எல்லோரும் சிதைந்துபோனார்கள். அவர்கள் மனது ஒருவழிப்படவில்லை. இன்றைக்கு 'இங்கால்' பக்கம் செக்கிங் என்று 'அங்கால்' பக்கம் ஒளித்திருக்கிற மகனுக்கு தகப்பன் சாப்பாடு கொண்டு போய்க் கொடுக்கிறார்.

எதை யோசிக்க? எதில் நின்று நிலைக்க?

ஹெலி சுற்றிச் சுற்றி வருகிறது. மேலே பச்சைக் கூடையைக் கவிழ்த்துவிட்டது போல் இருந்தது. மரவள்ளித் தோட்டத்தில் இளைஞர்கள் பதுங்குகிறார்கள். ஹெலி விட்டு விட்டுப் போகிறது. அல்லது சடசடவென்று குண்டுகளைத் தீர்க்கிறது.


இதில் எதைச் சொல்ல?

'பங்கார், நடந்து வாறாங்கள்.... தம்பி பின் வளவுக்குள்ளாலை ஓடணை அப்பு...' என்று பதறிச் சொல்கிற நாகம்மாக் கிழவிக்கு செவி மடுத்து வேலி பாய்ந்து, முள்ளுக்கீறி, ஓடி 'பத்தை நாகதம்பிரான்' கோயிலிலை தஞ்சம் அடைந்து அவலப்பட்டு, 'அப்பாடா' என்று இளைத்திருக்க, மற்றப் பக்கத்திலும் ஓடி வருகிற இளைஞர்கள் 'இந்தப் பக்கத்தாலும் வாறாங்கள்' என, பத்தைதான் வெறும் தஞ்சம்!

'பத்தை நாகதம்பிரான்' கோயிலை ஒருக்கால் யோசித்துப்பார். முன்னர் பகலில் வரவே எவ்வளவு பயம்! ஆகலும் கடும் கோடையில் வரும் பங்குனித் திங்கள் குளிர்த்திக்கு மாத்திரம் வந்து சாப்பிட்டுவிட்டு 'நாகதம்பிரானை'யும் திரும்பிப் பார்க்காமல் ஓடுகிற காலம் ஆனால், இந்தக் காலம் இவ்வாறுதான் இருந்தது.

மிகவும், மிகவும் துயரைத் தருவாதாகவும், அவரவர்களின் லேசான புன்னகைக்குள் ஒளித்திருந்த கனவுகளையும், நம்பிக்கைகளையும் சிதைப்பதாகவும் காத்திருந்த செய்திகளைப் பற்றி அதிகம் சொல்ல என்ன இருக்கிறது?





எதிர்பாரா ஒரு நாள் இந்தக் கிராமத்தின் ஒருபகுதி சுற்றிவளைக்கப்பட்டது. சுற்றிவளைத்ததன் பின் எது நடக்குமோ அது நடந்தது.

அட, ஒன்றுக்கும் பயப்பிடாமல் திரிந்த இந்திரன் செம்பட்டையாய் மினுங்குகிற தலைமயிரைத் தடவி விட்டுக் கொண்டிருப்பான். (அது பற்றி முன்னர் சொல்லவில்லையா?) அவன், அந்த இந்திரன் அன்றைக்கு இறந்து போனான்.

இறந்து போனான் என்பது வெறும் வார்த்தை! இது சும்மா ஒரு சொல்லில் செல்லிவிட்டுப்போக முடியாது. அவன் முழு உருவத்தையும் குணாதிசயங்களையும், அதன் பரிமாணங்களையும் சேர்த்துக் கொண்டுதான் அவன் இறந்து போனான். அவனுக்கும் ஏணை கட்டி, தாலாட்டுப் பாடித்தான் தாய் தூங்க வைத்திருப்பாள். மெத்தென்ற தன் நெஞ்சில் பால் சுரக்க வைத்திருப்பாள்.

பேய்களைக் கண்டபோது ஒருபோதும் அவன் பயந்ததில்லை. பேய்களையே எதிர்கொண்டு சவாலுக்கு அழைத்திருப்பான். ஆனால், அன்றைக்குச் சாரம் அவிழ, அவிழ ஓடியிருக்கிறான். சுடலை மடத்துக்கு அருகில்தான் அது நிகழ்ந்தது. அவன் சுடப்பட்டிறந்தான். பனங்குற்றியுடன் தலைகுப்புறக் கிடந்தான். என்னவோ 'மௌத்ஒகனை'க் காணவில்லை. சிலவேளை, சண்டிக்கட்டுக்குள் இருந்திருக்கலாம். ஆனால், ஒரு கண்ணைக் காணவில்லை. மந்தைகளுடன் மெதுவாகச் சோகத்தைப் பகிர்ந்து கொண்டிருந்த ராசன்- அன்றைக்குத்தான் கிணற்றுக்கட்டில் தலை அறைபட்டுக் கொல்லப்பட்டான். அவன் சோகத்தைக் கேட்பதற்கு அங்கு ஒருவருமில்லாதிருந்தனர். பீநாறிப் பத்தைகளும், ஆமணக்கம் செடிகளும் மாத்திரமே இருந்தன. அட, அவன் சோகத்தைப் பகிர்ந்து கொண்டிருந்த இந்த மந்தைகள்கூட எங்கேயோ ஓடிவிட்டன. சோகமான புன்னகை அவன் முகத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

எல்லோர் மனங்களிலும் பீதி குடிகொண்டிருக்கிறது. அவரவர்கள் தங்கள் ஒவ்வொரு அசைவுகளையும், கவனித்தே வைத்தார்கள். மிகவும் நெருக்கடியான நாட்கள் அவை. ஊரிலெல்லாம் அந்நியக் கால்கள் பதிகின்றன.

இப்படித்தான் எவ்வாறோ மணி பல நண்பர்களை இழந்து விட்டிருந்தான்.

அம்மா 'மணி ஈ..' என்று கத்திக் கூப்பிடவில்லை, கூப்பிடத் தேவை இருக்கவில்லை. அப்பா தோட்டத்தில் நின்று கொண்டு 'சாப்பாட்டைக் கொண்டுவா.. தண்ணியைக் கட்டு' என்று அதட்டவில்லை, அதற்கும் தேவை இருக்கவில்லை.

ஆயினும், என்ன அன்றைக்கு முத நாளிரவுதான் மணி வீட்டில் தன் கடைசி இரவாக அறிந்துகொண்டான்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீங்காத நினைவுகள்...

## தமிழர் நெஞ்சைவிட்டகலா மே மாத இனப் படுகொலைகள்



**1958 இனக்கலவரம்** 22.05.1958ஆம் திகதி தொடரூந்தில் பயணம் செய்து கொண்டிருந்த 500ற்கும் மேற்பட்ட தமிழர்களை சிங்களக் காடையர்கள் தாக்கி இனக்கலவரத்தை ஆரம்பித்தனர். அப்போதைய சிறீலங்காப் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினது குண்டர்களாலும், சிங்களக் காவல்துறையினராலும் தமிழர்களது வீடுகள், உடமைகள் யாவும் அழிக்கப்பட்டன. 300 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**வல்வெட்டித்துறைப் படுகொலை** 09.05.1985 அன்று வல்வெட்டித்துறை நகர்ப் பகுதியை சுற்றி வளைத்த சிறீலங்காப் படைகளால் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 50 பொது மக்கள், பொது நூல்நிலையத்தினுள் அடைத்து வைக்கப்பட்டு குண்டுவைத்துக் கொல்லப் பட்டனர். தெருக்களில் வைத்தும் பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். எல்லாமாக 90பொதுமக்கள் ஜே.ஆரின் ஆயுதப்படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.



**குமுதினிப் படுகொலை** 15.05.1985 அன்று நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் பகுதி நோக்கி குமுதினிப் படகில் வந்த 46 தமிழ் மக்கள் சிறீலங்காக் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள், தாய்மார்கள் உட்பட வயது பால் வேறுபாடின்றி இப்படகில் வந்த பொதுமக்கள் கடற்படையால் கத்தியாலும், கோடரி, வாள் முதலியவற்றால் கண்ட துண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.



**நாய்ப்பட்டிமுனைப் படுகொலை** 1985.05.17 அன்று தென்தமிழீழத்தின் நாய்ப்பட்டிமுனைக் கிராமம் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனாவின் தலைமையிலான சிறீலங்கா விசேட அதிரடிப்படையால் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது சிறீலங்கா விசேட அதிரடிப்படையால் 23 தமிழிளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக் கொன்று புதைக்கப்பட்டனர்.



**வற்றாபளைக் கோயில் படுகொலை** 18.05.1992 அன்று செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சிறீலங்கா இராணுவத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர், வற்றாப்பளை ஆலயத்திற்கு வருடாந்த பொங்கல் உற்சவத்திற்குச் சென்ற பொதுமக்கள்மீது முல்லைத்தீவில் ஆக்கிரமித்து நின்ற இராணுவத் தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் 15 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 30ற்கு மேற்பட்ட தமிழர்கள் படுகாயமடைந்தனர்.

**சித்தாண்டிப் படுகொலை** 11.05.1996 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவங்கேணி, சித்தாண்டிப் பகுதியில் சிறீலங்காப் படைகள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் 18 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 30பேர் படுகாயமடைந்தனர்.



**சங்குப்பிட்டி படுகொலை** 12.05.2000 அன்று சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதிக்கு அருகே உள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சிறீலங்கா விமானப்படை கிபீர் ரக மிகை யொலித் தாரை விமானங்கள் குண்டுகள் வீசி மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது எண்ணிறைந்த தமிழர் வாழிடங்கள் அழியுண்டன, பல பயன்தரு மரங்கள் அழிக் கப்பட்டன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை இருமகன்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



**மட்டுநகர் படுகொலை** 17.05.2000 அன்று மட்டு நகரில் வெசாக்தினக் கொண்டாட் டங்களில் ஈடுபட்டிருந்த படையினர் மத்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினையடுத்து சிறீலங்காப் படையினர் வெறித்தனமாகச் சுட்டனர். இதன் காரணமாக ஆயித்தியமலை அநாதை இல்லத்தைச் சேர்ந்த 10 சிறுவர்கள் உட்பட 19 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதன்போது, ஆயித்தியமலை அநாதை இல்லச் சிறுவர்களை அழைத்து வந்திருந்த வணபிதா ஜெயரட்ணம் அடிகளார் உட்பட 54 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.



**வயோதிபர் இல்லப் படுகொலை** 19.05.2000 அன்று கைதடி வயோதிபர் இல்லத்தின்மீது சிங்களப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் 16 அப்பாவி வயோதிபர்கள் படு கொலை செய்யப்பட்டனர். 31 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். வயோதிபர் இல்லம் அமைந் துள்ள பகுதி என்பது நன்கு தெரிந்திருந்தும் சிங்களப்படை திட்டமிட்டே இவ் ஈனச்செயலைப் புரிந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரமாலையில் ஒரு மலராய்..

பூமிப்பந்தின்
எங்கோவோர் ஓரத்தினிலுள்ள
இம்மிப் பொட்டினுள் ஒழிந்திருக்கும்
எந்தன் தாயகதேசத்தின் விடுதலைக்காய்
நான் தினம் தினம் தவங்கிடக்கின்றேன்
சோறு பிசைந்து வாயிலூட்டிவிடும்
என் உயிரின் மூலாதாரத்தினுடைய
உறவைப் பிரிந்து; உணவை மறந்து
உயிரும் - உறுதியும் சுமந்து வாழுகின்றேன்
நான் முகிழ்விட்ட பெண்மைக் கொடியிலேயே
பூத்திட்ட என்னுயிர் பாசமலர்களின்
நேசம் தன்னை அறுத்துக்கொண்டு...
வனவிலங்குகளுக்கும், விஷ ஜந்துக்களுக்கும்
உரித்தான இயற்கை வீட்டினுள்ளே
நானும் புது உறவாய் குடிபுகுந்திருக்கிறேன்
கரடுமுரடான பாதைகளில் விழிகள் சிவக்க
பொழுதுகள் மறந்து நடக்கின்றேன்
இத்தனைக்கும் மேலாய்
'விடுதலை' 'சுதந்திரம்' என
வாழ்க்கைக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும்
எந்தன் இதயத்தினுள்ளும்
ஒரு காதற்பறவை சிறகடிக்கின்றதுதான்
ஆனாலும்....
இயற்கை தந்த ஜீவ வடிவங்களின்
அன்புக்காணிக்கைகளை அகத்தில் சுமந்து
நினைவலைகளை அசைபோட்டபடி பயணிக்கின்றேன்
எந்தன் தாயகமேனியில் போர்த்தப்பட்டிருக்கும்
அடக்குமுறை ஆடைகளை களைந்தெறிவதற்காய்
ஆம்
எந்தன் தாயகத்தின் கழுத்தினிலே
சுதந்திரமாலையை ஒரு நாள் தலைவன்
சூடுவான்
அப்போ... நான்
உறவுகள் புடைசூழ நின்று
தாயகத்தின் எழிற்கோலம் கண்டு மகிழ்ந்து சிரிப்பேன்
இல்லையேல்
தாயகம் மீது சூட்டப்பட்டிருக்கும் சுதந்திரமாலையில்
தொடுக்கப்பட்ட ஒரு மலராய் இருப்பேன்.



யாழ்வீரன்

www.tamilarangam.net





பிரான்ஸ், பாரிசில்



ஜேர்மனி, கம்பேர்க்கில்



நோர்வே, ஒஸ்லோவில்




சுவிற்சர்லாந்து, பிறைபேக்கில்

## எழுச்சி மாலை



தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் பணியக கலைபண்பாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் 28.04.2001 அன்று சனிக்கிழமை ஈகாஸ் நகரில் எழுச்சி மாலை 2001 சிறப்புற நடந்தேறியது. பேச்சு, எழுச்சி நடனங்கள், கவியரங்கம், நாடகம் என்பவற்றோடு தமிழீழ இசைக்குழுவின் எழுச்சிகானங்களும் எழுச்சி மாலை நிகழ்வை அணி செய்தன.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









ஒட்டாவா வாழ் தமிழ் மக்களின் நலன்களிற்காக உழைத்து மறைந்த திரு. ரங்காநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறந்த சேவையாளர் விருதினை, அவரது மனைவிக்கு ஒட்டாவா மேயர் திரு. போப் சராலி வழங்குகின்றார்.



மே.31.2001 அன்று கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் தமிழீழ மக்களால் புதுவருட இராப்போசன விருந்து கனடிய அரச பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் ஒட்டாவா நகர மேயர் திரு. போப் சராலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கனடிய வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர்கள் மற்றும் பல்லின கலாச்சாரப் பிரதிநிதிகள் ஆகியோரும் இவ்விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர். ஒட்டாவாவில் உள்ள கிரவுண் பிளாசா ஒட்டலில் இந்நிகழ்வு இடம்பெற்றது. கடந்த வருடம் இந்நிகழ்வு கனடாவின் வர்த்தகத் தலைநகரும், கனடாவில் தமிழீழ மக்கள் அதிகமாக வாழும் நகரமான ரொறன்டோவில் நடைபெற்றது. இதில் கனடிய நிதி அமைச்சர் திரு. போல் மாட்டீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டது யாவரும் அறிந்ததே. அதே போன்றதொரு விருந்துபசாரமே இம்முறை கனடியத் தலைநகரில் கொண்டாடப்பட்டது. இவ்விருந்துபசார நிகழ்வில் ரொறன்டோ, மொன்றியல், கோண்வால் வாழ் தமிழீழ மக்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் கனடிய மண்ணில் தமிழீழ மக்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய சிறு ஒளிப்படத் தொகுப்பு ஒன்றும் காண்பிக்கப்பட்டது.

## நூல் அறிமுகம்

### முகமறியா வீரர்களுக்காக

நூலாசிரியர்:
மட்டுவில் ஞானக்குமரன்
முதல் பதிப்பு: 2000
வெளியீடு: ஞானம் பதிப்பகம், ஜேர்மனி




கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் அணிந்துரையோடு மட்டுவில் ஞானக்குமரனின் முதல் நூல் வெளிவந்துள்ளது. நேர்த்தியான வகையில் வெளிவந்துள்ள இந்நூலின் கவிதைகள் பல ஏற்கனவே புலம்பெயர் மண்ணில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்தவை என்பதும் குறிப்பிடத் தக்கது.

### உள்மன யாத்திரை

நூலாசிரியர்: நவீனன்
முதற்பதிப்பு: 13.11.2000
வெளியீடு: வைகறை பதிப்பகம், ரஸ்சியா




நவீனன் தாம் வாழும் ரஸ்சிய மண்ணிலிருந்து தாயகத்து விடுதலை அவாவி நின்று அதனைப் பல கவிகளில் பாடு பொருளாய்க் கொண்டு உள்மன யாத்திரை எனும் தலைப்பில் அகம், முகம் எனும் இரு அத்தியாயங்களாக 32 கவிதைகளை யாத்து, தொகுத்து வெளியிட்டுள்ளார். ஆக்கியோனின் கவிநடையில் ஏற்கனவே அவர் பத்திற்கும் மேற்பட்ட கவி நூல்களின் சொந்தக்காரர் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

### புலராதபொழுதோடு

நூலாசிரியர்:
இரா.ரவிசங்கர்
முதல் பதிப்பு: சித்திரை 2001
ஜேர்மனி



ஜேர்மனியைச் சேர்ந்த இரா. ரவிசங்கரின் புலராதபொழுதோடு எனும் தலைப்பிலான கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. தேசப் பற்றும் மண்வாசமும் சிந்த வெளிவந்துள்ள இக்கவிதைத் தொகுப்பின் முன்னட்டை தமிழர் வீரத்தை சுட்டும் விக்டர் கவச எதிர்ப்பு அணியினரைத் தாங்கியும் பின்னட்டையில் தேசியத் தலைவரையும் தாங்கி வெளிவந்துள்ளது. இது போன்ற ஆக்கவியல் முயற்சிகள் இன்னும் ஆழமாய் தமிழ் மொழியில் வெளிவர வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தளபதிகள், போராளிகள் கௌரவிப்பு

06.05.2001 அன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறப்பாக ஒழுங்கு படுத்தப்பட்ட நிகழ்வில் அக்கினிச்சுவாலை-1 முறியடிப்புச் சமரினை வழிநடத்திய தளபதிகளுக்கும், சமரில் பங்கு கொண்ட போராளிகளுக்கும் தேசியத் தலைவர் அவர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு சோதியா படையணியைச் சிறப்புற வழிநடத்திய லெப்.கேணல் துர்க்கா அவர்களுக்கு கேணல் நிலை வழங்கப்பட்டு கௌரவ விருது வழங்கப்பட்டது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை சிறப்பாக வழிநடத்தி சிறப்பாகச் செயற்பட்ட மேஜர் கோபித்திற்கு லெப் கேணல் நிலை வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

## கனடா உயர்ஸ்தானிகர் வன்னி விஜயம்

கனடா உயர்ஸ்தானிகர் திருமதி .ருத் ஆர்ச்சிபால்ட் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப .தமிழ்ச்செல்வன் அவர்களை கடந்த 09.05.2001 அன்று மல்லாவியில் வைத்துச் சந்தித்தார். கனடா இராஜந்திரி ஒருவர் வன்னியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவது இதுவே முதல்த் தடவையாகும்.






## தமிழ் ஊடகவியலாளர் கருத்தரங்கு

தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் 13.05.2001 அன்று கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கு கொழும்புத் தமிழ்ச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் திரு. பி. மாணிக்கவாசகம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர் திரு. டி. சிவராம், கொழும்பு பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் திரு வி.ரி தமிழ்மாறன், தேசிய சமாதான சபையின் தலைவர் திரு. ஜெகான் பெரேரா, உட்படப் பலர் உரையாற்றினர்.

## வன்னியில் நோர்வேயின் சமாதானக் குழுவினர்

17.05.2001 அன்று வன்னி மல்லாவியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் நோர்வே சமாதானக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. மாலை 3மணிக்கு ஆரம்பமாகிய பேச்சுக்கள் இரவு எட்டுமணிவரை நீடித்தது.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி, காவற்றுறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தங்கன், விடுதலைப் புலிகள் முக்கியஸ்த்தர்கள் திரு. புலித்தேவன், திரு. ஜோர்ச் ஆகியோர் கலந்து கொண்டனர். நோர்வே அரசு சார்பில் விசேட தூதுவர் திரு. எரிக் சொல்கைம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் திரு. ஜோன் வெஸ்ட்போர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த செல்வி. கோர்ஸ்டி ஆகியோர் பங்குபற்றினர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








**சுயநிர்ணயஉரிமையை வலியுறுத்தும் தென் தமிழீழ ஆசிரியர்கள்**

மட்டுநகரில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடும் பேரணியும் 25.05.2001 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் 3000ற்கும் அதிகமான ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்துகொண்டனர். இம்மாநாட்டில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், தமிழ் மக்களிற்கு என்று ஒரு பிரிக்கமுடியாத தாயகம் உண்டு, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் ஆகிய மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பிக்குமார் மீது குண்டாந்தடியடிப் பிரயோகம்




"இம் என்றால் வனவாசம், ஏன் என்றால் சிறைவாசம்" இதுதான் சிறீலங்காவின் ஜனநாயகம் இதற்கு பௌத்த பிக்கு மாரும் விதிவிலக்கல்ல. கடந்த 17.05.2001 அன்று சிறீலங்கா அரசாங்கம் பல்கலைக் கழகங்களைத் தனியார் மயமாக்கும் முடி வினைக் கண்டித்து, வித்தியோதய, வித் தியாலங்கார பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பிக்கு மாணவர்கள் ஆர்ப்பாட் டங்களை நடத்த முற்பட்டனர். இவ் ஆர்ப் பாட்டத்தினை சந்திரிகா அம்மையாரின் பொலிசார் குண்டாந்தடியடிப் பிரயோ கம் செய்து கலைத்தனர்.

## 20 சிறீலங்காக் கடற்படையினர் பலி

23.05.2001 அன்று திருமலை மாவட்டத்தில் சிறீலங்காக் கடற்படையினரின் வாகனத் தொடரணி மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டு, மேலும் 28 பேர் படுகாயங்களுக் கும் காயங்களுக்கும் இலக்காகியுள்ளனர். திரு மலை கபரணை வீதியில் இச்சம்பவம் இடம்பெற் றது. கடற்படையினர் பயணம் செய்த பேருந்து முற்றாகச் சிதைந்த நிலையில் தூக்கி வீசப்பட்டுள்ளது.




## நினைவுச் சுவடி திறப்பு

தமிழ் மக்களின் தாகம் சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகம், தனித் தேசிய இனம் என்பதை வலி யுறுத்துமுகமாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத்தால் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் இம் மூன்று கோட்பாடுகள் பொறிக்கப்பட்ட உருக்கிலான ஏட்டுச்சுவடி 28.05.2001 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழிகளிலும் இந்த வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்தினால் 17.01.2001 அன்று முன் வைக்கப் பட்ட பொங்குதமிழ்ப் பிரகடனம் இதுவென்றும் குறிப்பிடப்பட்டுள் ளது. மஞ்சள் பின்னணியில் சிவப்பு நிறத்தில் இவை பொறிக் கப்பட்டுள்ளன. யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலை வர் எஸ். கஜேந்திரன் இவ் நினைவுச் சுவடியினைத் திறந்து வைத்தார்.

## எஸ்.எம்.கோபாலரத்தினம் கௌரவிப்பு



தினக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான எஸ்.எம்.ஜீ என அழைக் கப்படும் எஸ். எம் கோபாலரத்தினம் கைலாசபதி விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டுள்ளார். இலங்கை பத்திரிகை யாளர் சங்கத்தினால் ஆண்டுதோறும் விருது வழங்கும் திட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஊடகவி யலாளருக்கான விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 15.05.2001 அன்று கொழும்பு மவுன்ற் லவேனியா கோட் டலில் வைத்து இவ்விருது வழங்கப்பட்டது. ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான எஸ்.எம் கோபாலரத்தினம் வீரகேசரி, யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகை, காலைக் கதிர், செய்திக்கதிர், ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய நாளிதழ் களின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

**இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிராக கடந்த 18 வருடங்களுக்கு மேலாக நடைபெறுகின்ற போர்காரணமாக ஏற்பட்ட இழப்பீடுகள்.**

★70,000 தமிழர்கள் இலங்கைத்தீவில் கொல்லப் பட்டுள்ளனர். இலங்கைத்தீவில் வாழுகின்ற மொத்த தமிழர்களின் எண்ணிக்கையில் 3வீதமான தமிழர் கள் சிறீலங்கா அரசபடைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் சராசரியாக 9 தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். 50 தமிழர் களுக்கு ஒரு தமிழர் கொல்லப்பட்டுள்ளார்.

★250,000 தமிழ்ச் சிறுவர்கள் சிறீலங்கா அரசின் யுத்தமுனைப்புக்களால் கல்வி வாய்ப்பினை இழந்துள்ளனர். தமிழீழப் பகுதிகளில் உள்ள பாட சாலைகளில் பல சிறீலங்கா விமானப்படை விமா னங்களின் குண்டு வீச்சால் தகர்ந்து போயுள்ளன. பெருந்தொகையான பாடசாலைக் கட்டடங்கள் சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு படைத்தளங்களாகப் பாவிக்கப்படுகின்றன.

★ 460,000 தமிழர்கள் ஐரோப்பா மற்றும் ஏனைய புகலிட நாடுகளில் போர் காரணமாக தஞ்சமடைந்து வாழ்கின்றனர். இது மொத்த தமிழீழ மக்களின் தொகையில் 16 வீதமாகும்.

ஆதாரம்: தமிழர் மனித உரிமை மையத்தினால் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 57வது கூட்டத் தொடரின்போது சமர்பிக்கப்பட்ட அறிக்கை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபங்கள்

வீரவேங்கை பகீனுக்கு எப்போதும் சந்தேகம் இந்த சயனைட் வேலை செய்யுமாவென்று. தமது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள அடிக்கடி தனக்கு மேலுள்ள பொறுப்பாளரிடம் கேட்பார் "அண்ணை இது வேலை செய்யுமோ?" "அது வேலை செய்யும் போடா" என்று அந்தப் பொறுப்பாளரும் அவரை அனுப்பி வைப்பார். எத்தனை தரம் அந்தப் பொறுப்பாளர் பகீனிடம் கூறினாலும் அதில் அவருக்குத் திருப்தியில்லை.

ஒரு நாள் நள்ளிரவு களைத்துப்போன நிலையில் பகீனின் பொறுப்பாளர் படுக்கைக்குச் செல்கிறார். அப்போதும் பகீன் அந்தப் பொறுப்பாளரிடம் வினவுகிறார் "அண்ணை, இது வேலை செய்யுமோ?" பொறுப்பாளருக்கு வந்ததே எரிச்சல் "வேலை செய்யாது போலக் கிடக்கு, உன்னிலைதான் ரெஸ்ற் பண்ண வேணும் போலக் கிடக்கு.. போய்ப் படடா" என்று அதட்டிவிட்டு அயர்கிறார் அந்தப் பொறுப்பாளர்.

ஆனால் 18.05.1984 அன்று புதிய சாதனை படைத்து மண்ணின் விடியலுக்கு மறைந்தார் வீரவேங்கை பகீன். எந்த சயனைட் மீது சந்தேகப்பட்டாரோ அந்த சயனைட் அருந்தி எதிரியிடம் பிடிபட்டுவிடக்கூடாது என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் உயரிய இலட்சியத்திற்கு அமைய வீரச்சாவடைந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் சயனைட் அருந்தி களப்பலியான முதல் வீரவேங்கையாக வரலாற்றில் பதிந்து கொண்டார்.





**வீரவேங்கை பகீன்/செல்வம்**

அன்னலிங்கம் பகீரதன்

மண்டைதீவு

**02.05.1959–18.05.1984**

அன்னலிங்கம் பகீரதன் இது வீரவேங்கை பகீனின் சொந்தப் பெயர். மண்டைதீவைச் சேர்ந்தவர். குடும்பச் சூழல் காரணமாக ஜேர்மனியில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். தமிழீழத் தேசியத் தலைவர் மீதும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் அளவிலா பற்றும் விசுவாசமும் மிக்க பகீன் ஜேர்மனியில் வசித்த காலத்திலேயே விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாக வேலை செய்தார். பின்னர் இங்கிலாந்திற்குச் சென்று அங்கிருந்தவாறும் தாயக விடுதலைக்கு வலுச்சேர்த்தார். 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழீழம் சிங்களக் காடையர்களால் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது தாங்கிக் கொள்ள முடியாத இந்த வேங்கை பறந்து வந்தது தாயகம் நோக்கி. தாயகத்தில் தலைவனின் அணியில் இணைந்து பணியாற்றியது.

1983/1984 காலகட்டம் தமிழீழ வரலாற்றில் மிகவும் நெருக்கடி மிகுந்த காலம் தமிழீழத் தேசமெங்கும் சிங்களத்தின் கொடும் படைகளும், காட்டிக்கொடுப்போரும் நிறைந்த கால கட்டம். யார் வல்லவர், நல்லவர், நயவஞ்சகர் என்பது பிரித்தறிய முடியாத காலம். ஒரு விடுதலைப் போராளி இனங்கண்டு தரமறிந்து தன் செய்கருமம் ஆற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. சுற்றும் சிறீலங்கா இராணுவ வல்லூறுகளுக்கு மத்தியில் தனது உந்துருளியில் சுழன்று பணியாற்றினார் பகீன்.

18.05.1984 அன்று அமைப்பின் அரசியல் பிரச்சார வேலைகளுக்காக வல்வெட்டித்துறையில் இவர் உந்துருளியில் சென்று கொண்டிருந்த போது அப்பகுதியை முற்றுகையிட்டது சிங்கள இராணுவம். நிராயுதபாணியாய் நின்ற நிலையிலும் நிலை கலங்காத இளவேங்கை வர்த்தக நிலையம் ஒன்றிற்குள் புகுந்து பாவனை செய்யத் தொடங்கினார். ஆனால் சிறீலங்கா இராணுவத்தால் இனங்காணப்பட்டு விட்டார். வெறிக்கூச்சலுடன் சூழந்து கொண்டனர் சிறீலங்காப் படைகள். தன்னைச் சித்திரவதை செய்து அமைப்பின் இரகசியங்களைக் கறந்துவிடக் கூடாது, அதனால் விடுதலைக்குக் கேடாக தான் அமைந்து விடக்கூடாது என்ற கடுகதியில் சயனைட் அருந்தி ஈழத்தாயின் மடியை முதன் முதல் சயனைட் அருந்தி முத்தமிடுகிறார்.

"இந்த சைனைட் எங்கள் கழுத்தில் தொங்கும் வரைக்கும் உலகில் எந்த சக்திக்கும் அஞ்சமாட்டோம்" என்று யாழ் மீட்ட வீரன் கேணல் கிட்டு ஒரு பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார். ஆம் எங்கள் பகீனும் இன்று விடியலின் துருவ நட்சத்திரங்களில் ஒன்றாய் அமைந்து பதினேழு வருடங்கள் கடந்து போயின. எனினும் பல ஆயிரம் பகீன்களின் பயணங்கள் இலட்சியத்தை நோக்கி நகருகின்றன.



போராட்டத்தின் நிழலில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஏப்ரல் 2001

**01.04.2001**

குருநாகலில் இடம்பெற்ற சிங்கள இசைநிகழ்ச்சியொன்றில் சிறீலங்கா அதிரடிப்படை சிப்பாய் ஒருவன் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டு இருநூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**05.04.2001**

சிறீலங்காப் படைகளின் காட்டுமிராண்டிச் சட்டங்களைக் கண்டித்து, இச் சட்டங்களால் தமது கற்றலும் கற்பித்தலுக்கும் உள்ள இடர்பாட்டை விளக்கி மட்டக்களப்பில் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து ஒருநாள் பகிஸ் கரிப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். இப்போராட்டத்தில் மட்டக்க ளப்பு மாவட்டத்திலுள்ள 55 பாடசாலைகளைச் சேர்ந்த இருபதினா யிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்

**10.04.2001**

மன்னாரில் இருகுடும்பப் பெண்கள் சிறீலங்காப் படைகளால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து தமிழீழப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட அனைவரும் கறுப்புப் பட்டியணியும் போராட்டத்தை நடத்தினர். இந்நிகழ்வில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களும் பங்குபற்றினர்.

**11.04.2001**

சிறீலங்காப் பாராளுமன்றத்தில் இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் ஒன்பது மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது.

**16.04.2001**

முல்லைக் கடற்பரப்பில் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற் புலிகளின் படகுகளை, சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோறா கடற்படைக் கலங்கள் வழிமறித்துத் தாக்குதலை மேற்கொண்டன. இதன் போது இடம்பெற்ற இரண்டு மணி நேர கடற்சமரில் சிறீலங்காக் கடற்படையின் டோறாப் பீரங்கிக் கலம் பலத்த சேதமடைந்தது. 7 கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

**20.04.2001**

அதிகாலை இரண்டு மணியளவில் முல்லைக் கடற்பரப்பில் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகளை சிறீலங் காக் கடற்படையின் 12 அதிவேக டோறாக் கலங்கள் வழிமறித்துத் தாக்குதல் நடத்தியபோது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் மேற் கொண்ட பதில்த் தாக்குதலில் டோறாப் பீரங்கிக் கலங்கள் இரண்டு சேதமடைந்தன. பல சிறீலங்காக் கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

**24.04.2001**

தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த நான்கு மாதகாலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் முடிவுக்கு வந்தது. “சிறீலங்கா அரசின் உதாசீனப் போக்காலும், கடும் போக்கான விட்டுக்கொடாத நிலைப்பாடு காரணமாகவும் தாம் இப்படியான வேத னையான முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக” விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டது.

**26.04.2001**

சிங்களப் படையினர் பூநகரிப் பகுதி நோக்கி மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்

**06.04.2001**



சிறீலங்காவிற்கான நோர்வே தூது வர் திரு.ஜோன் வெஸ்பேர்க் மற்றும் நோர்வே தூதரக அதிகாரியான திரு. தோமஸ் ஸ்ராங்லான்ட் ஆகி யோர் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்த்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் போது விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்கி யுத்த நிறுத் தத்தை மேற்கொண்டால் மாத்திரமே விடுதலைப் புலிகள் இயக்கம் சமா தானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் என விடுதலைப் புலி கள் தரப்பால் நோர்வேத் தூதுவரிடம் தெளிவாகவும் உறுதியாகவும் வலியுறுத்தப்பட்டது.

**07.04.2001**



தமிழீழத் தேசியத் தலைவர் அவர் களின் விசேட பணிப்பின் பேரில் விடுதலைப் புலிகள் தம்வசமிருந்த நான்கு யுத்தக் கைதிகளை விடு தலை செய்தனர்.

**17.04.2001**

வன்னி சென்று உண்மை நிலைமைகளை அறிந்து செய்தி சேகரித்து வவுனியா திரும்பிக் கொண்டிருந்த லண்டன் சண்டே ரைம்ஸ் செய்தியாளர் மேரி கொல் வின் சிங்களப்படையினரால் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்.



**24.04.2001**



கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பத்து ஆயர்கள் மடு சென்று அங்கு விடுதலைப் புலி களின் முக்கிய உறுப்பினர் களைச் சந்தித்து பேச்சுவார் த்தை நடத்தினர்.

**25.04.2001**

அக்னி கீல -1(அக்கினிச்சுவாலை) என்ற குறியீட்டுப் பெயரில் விடு தலைப் புலிகளின் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் சிறீ லங்கா இராணுவம் கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் பகுதி களின் ஊடாக மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி பலத்த அடி வாங்கியது. விடுதலைப் புலிகளின் பலத்த தாக்குதலில் 500ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர், 2000ற்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் படுகாயமடைந்தனர்.

**27.04.2001**

அக்னி கீல-1 நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்ட சிங்களப்படையினரின் சடலங்களில் நல்லநிலையில் இருந்த 33 சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

**28.04.2001**

அவமானகரமான தோல்விக்கும், பலத்த இழப்புக்கும் வித்திட்ட அக் கினி கீல-1 நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக சிறீலங்கா அரசதரப்பால் அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிக ளால் இத்தாக்குதலில் கொல்லப்பட்டு கைப்பற்றப்பட்ட நல்ல நிலையிலிருந்த மேலும் 30 சிறீலங்காப் படையினரின் சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

www.tamilarangam.net

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...




மாமரத்து நிழலில்
மகிழ்வுடன் கூடியிருந்த வேளை,
சிறுவனாய் நானும் சோதரனும்
ஓடிப்பிடித்து விளையாடிய முற்றம்,
ஆச்சி பழங்கறியுடன் சோறு திரட்டி
அரசகதை கூறி ஊட்டிய கூடம்
ஜன்னலூடே நிலவு பார்த்து
உறங்கிய பெரிய அறை,
இவை பிரிந்து ஆண்டுகள் ஆறு!
இன்று! மாட்டு வண்டியே
எங்கள் குடித்தனம்- ஆயினும் சோரவில்லை

வல்வை தேவகி
இவர்டோன், சுவிஸ்

நல்லெருது இழுக்கவிட்டு
நல்லதம்பி உட்கார
சோக்கான வண்டியிது
விட்டுவிட்டு எழுந்து வா
சுட்டெரிக்கும் சூரியனை
கட்டிவைக்கும் தலைவனுக்கு
எட்டி நடபட்டதெல்லாம் போதும்
நட்டு வை புலிக்கொடியை
நல்லபடி போற்று குருதி
சொட்டச் சொட்ட யுத்தமிட்டுப் பார்
நாளை மலருமடா ஈழமெனும் பூ

இந்திரன்
தூரிச், சுவிஸ்

ஈழத்தின் போர் அனர்த்தங்களால்
இளைப்பாறிவிட்டன எரிபொருள் இயந்திரங்கள்
காரும் பஸ்வண்டிகளும் வீதியில் ஓடமறுத்தன- ஏன்
எரிபொருள் விலையேற்றமும் சுவை காணாமல் போனதும்
அரிதாகச் சில வண்டிகள் ஓடும் அவை அரசினது- ஆனால்
எரிபொருள் ஏதுமின்றி ஓடும் வண்டிதான்- கண்காணும்
ஒற்றை மாட்டு நவீன சூப்பர் சொகுசு வண்டியிது- அன்று
தென் ஓலையால் கிடுகுகட்டி கூடாரம் கட்டி ஓடியது- இன்று
காற்றடித்த சில்லுடன் காளைமாடு ஒன்றுடன் கம்பீரமாக.

நயினைபாரதி
போர்ண், சுவிஸ்

ஓ மகனே நீ செல்வதெங்கே
தொலைந்து விட்ட உறவைத் தேடியா.
அல்லது உறவின் சுமை தாங்காது
உழைப்பதற்குப் புறப்பட்டு விட்டாயா.
என்ன யோசிக்கின்றாய் இன்றேனும் என்
தாய் தந்தை தம்பியரின் பசி போக்குவேன்
என்றா.
நீ யோசிப்பது எனக்குப் புரிகிறது.
கவலைப்படாதே
உனது ஏக்கங்கள் தீரும் அந்த நாள்
அதிக தூரமில்லை விடியலின் கீற்று
அதோ தெரிகிறது விரைவாகப் போ.

திருமதி சுயி.சீலன்
வின்சன், ஜேர்மனி

நெஞ்சமதில் நேர்மைத் திறமுண்டு
நேரிய உறுதியுண்டு- வஞ்சக
செம்மணிப் பலி கொண்ட அம்மணியின்
எரிநெய்த் தடை சீரிய சிந்தை மிகு
தமிழீழத்தவனை என்ன செய்யும்- இதோ
இயற்கை குளிரூட்டப்பட்ட இன்பரதம்
தயார், விடியலுக்கு வெகு தூரமில்லை
புல்லரை ஈழப் புல்லும் எதிர்க்கும்
மண்ணின் மைந்தரை மாடும் தாங்கும்

ஜெயக்குமார்
இவ்றி சூ செயின், பிரான்ஸ்

காளைக்கே வீரம் வந்து
கால் நடக்க மறுக்கையிலே
மறத்தமிழா உன் வீரம்
உறக்கத்தை விடவில்லையா
பறந்தகதியானாய் அதில் பாதி
இறந்தொழிந்து போனாய்
துறந்ததெல்லாம் போதுமடா
அறம் வாழும் ஈழத்தின் புலிக்கொடி
திறம் பாட புறப்படடா போருக்கு.

எம் கிருஸ்ணர்
தூரிச், சுவிஸ்

அடிடா சக்கை எண்டானாம்
அம்பாளாச்சி கோயில்ல
பொங்கல் எண்டானாம்!!
பேரப்பிள்ளை மிடுக்காய்ச் சவாரி
செய்யிறதைப் பார்க்கப் பார்க்க பெருமை
பொங்குது!
மண்ணெண்ணைக்குத் தடையெண்டாலும்
இந்த வல்லவனுக்குப்
புல்லுமாயுதம் பாருங்கோ!
மயிலைக் காளை பூட்டிய இந்த இரதத்தில்
மகாராசனைப் போல போகிற
இந்தப்புள்ளைய
பாத்து இஞ்ச கிறுக்கி வெட்டி கார் ஓட்டுகிற
பொடிசுகள் வெட்கப்பட வேண்டும்.
வேலற்ற பொடியன் கொஞ்சம் முந்திப்
பிறந்திருந்தால் எங்கட தமிழன்
இத்தறுதிக்கு ஆகாயத்திலும் கப்பல்
விட்டிருப்பான் கண்டியளோ!

கதிரேசு
வின்ரத்துார், சுவிஸ்

மார்ச்சிற்கான...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்குதமிழ்

## பலம் கொண்டெழுந்திடுவோம்!

**SOULÈVEMENT POPULAIRE EELAM TAMOULE**

**UPHEAVAL OF THE TAMIL EELAM MASSES**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

